
# இளமையின் கீதம்

செ. கணேசலிங்கன்



C
4.811.
N

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of ... Vavuniya
22 JUL 2011
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Peradeniya
22 JUL 2011
Library

647973

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Peradeniya
22 JUL 2011
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளமையின் கீதம்

செ. கணேசலிங்கன்

University of Peradeniya
22 JUL 2011
Library

விற்பனை உரிமை:

**பாரி நிலையம்**

184, பிராட்வே :: சென்னை-600 108.

647873

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரன்
முதற்பதிப்பு : ஏப்ரல் 1987
(C) உரிமை : ஆசிரியருக்கே

---

விலை ரூ. 24-00

---

| | | |
|---|---|---|
| Title | : | ILAMAIYIN GEETHAM |
| Subject | : | A Social Novel |
| Author | : | Se. GANESALINGAN |
| No. of Pages | : | 128 |
| Paper | : | 10.5 Kg Creamwove |
| Size | : | 18 cm. × 12.5 cm. |
| Types | : | 10 Point |
| Price | : | Rs. 24-00 |
| Binding | : | Duplex Board |
| Publisher | : | KUMARAN PUBLISHERS<br>79, 1st Street, Kumaran Colony,<br>Vadapalani, Chennai-600 026 |

---

Printers : Chitra Printo Graphic, Madras-600 014.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணிக்கை

கைலாசபதிக்கு

University of Peradeniya
22 JUL 2011
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நாவல் பற்றிய
## சில முக்கிய குறிப்புகள்

இலங்கைத் தமிழரிடம் அண்மையில் ஏற்பட்ட தேசிய இன எழுச்சியை யாவரும் அறிவர் இது தற்செயலான நிகழ்ச்சியன்று. இதற்குரிய காரணங்கள் ஆழமாக ஆராயப் பட வேண்டியவை.

இலங்கையின் வட பகுதியிலேயே தற்போது தேசிய இன எழுச்சி வலுவடைந்துள்ளது. சிறப்பாக யாழ்ப்பாணக் குடா நாட்டையும் குறிப்பிட வேண்டும் இங்குள்ள மக்களின் பிரதான தொழில் விவசாயம். துண்டாடிய நிலத்தில் காய்கறிப் பயிர்ச் செய்கையே நடைபெற்றது பல நூற் றாண்டுகளாகக் கிராமியப் பொருளாதாரமே நிலவியது. இதனால் நிலப் பிரபுத்துவப் பண்பாட்டு வடிவங்களான சாதி, மதப் பிடிப்பும் வலுப்பெற்றன. தமிழ் நாட்டுப் பிராமண வகுப்பினர் போல இங்குள்ள வேளாளர் உயர்ந்த சாதியினராகக் கருதப்பட்டனர். இவர்கள் ஆங்கிலக் கல்வியை முதன்மையாகக் கற்றனர். இதனால் ஆங்கிலேயர் ஆட்சியின் போதும் அதன் பின்னர் சில காலமும் அரசாங்க வேலைகளில் பெரும் பகுதியைக் கைப்பற்றினர்.

நெடுங்காலமாக யாழ்ப்பாணத்து உற்பத்தி முறை மிகப் பிற்பட்ட நிலையிலேயே இருந்தது. வானம் பார்த்த பூமி. அதனால் கிணறுகள் உற்பத்தி முறையில் முக்கிய பங்கு வகித்தன. கிணற்றை ஒட்டித் துண்டாடப்பட்ட சிறு சிறு நிலங்கள். நீர் இறைப்பதற்காகப் பயன்படுத்தப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துலா, அதன்மேல் முன்னும் பின்னுமாக உழக்கும் கூலி விவசாயிகள், நிலத்தை மண்வெட்டியால் கொத்திப் பிரிக்கும் உழைப்பாளர், உரமாக மாட்டுச் சாணம், குப்பைகள், இலை குழைகள்.

இவ்வாறிருந்த உற்பத்தி முறைகள் யாவும் சென்ற 10, 12 ஆண்டுகளில் பெரும் மாற்றமடைந்தன. நீரிறைக்க பம்செட், உழுவதற்கு டிராக்டர், நிலத்திற்கு இரசாயன உரம்' பயிர் நோய்களுக்கு முன்னர் அவர்கள் கண்டு அறியாத கிருமி நாசினிகள். இடது சாரிகளுடன் இணைந்த சிறிமாவோ ஆட்சி 1971இல் வந்த பின்னர் வெங்காயம், மிளகாய், உருளைக் கிழங்கு ஆகியனவற்றின் இறக்குமதி தடை செய்யப்பட்டது. இதனால் வடபகுதிக்கு மட்டுமாக இருந்த உற்பத்தி இலங்கை பூராவுக்குமாக மாறியது.

சுன்னாகம், சாவகச்சேரி ஆகிய கிராமியச் சந்தைகளில் விற்கப்பட்ட விளைபொருள்கள், கொழும்புச் சந்தை மூலம் இலங்கை முழுவதும் விநியோகிக்கப்பட்டன. உற்பத்தி முறையிலும் விநியோகத்திலும் ஏற்பட்ட பெரும் மாற்றம் பல நூற்றாண்டுகளாக நடுத்தர விவசாயிகளாக வாழ்க்கையோடு போராடியவர்களைத் திடீரெனப் பணக்கார விவசாயிகளாக்கியது. இவர்கள் ஓரளவு அரசியல் அந்தஸ்து பெற்றதோடு தம் பிள்ளைகளையும் உயர் கல்விக்கு அனுப்பினர்.

உயர் கல்வியில் ஏற்பட்ட போட்டி, பணக்கார விவசாயிகளின் பிள்ளைகளையும் பெரிதும் பாதித்தது. 12ஆம் வகுப்பு வரை கற்றவரிடையே ஏற்பட்ட வேலையில்லாத் திண்டாட்டம் புதிய முரண்பாடுகளை ஏற்படுத்தின.

1977இல் ஏற்பட்ட ஐ. தே. கட்சியின் அரசு இறக்குமதிகளைத் தளர்த்தியது. இப்புதிய பொருளாதாரக் கொள்கை யாழ்ப்பாண விவசாயிகளின் விளை பொருட்களின் விலைகளில் ஏற்ற இறக்கங்களை ஏற்படுத்தியது. இதனால் இவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வேளை ஏற்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கையும் டாலரின் மதிப்பை உள்நாட்டில் உயர்த்தியது. இதனால் மத்திய கிழக்கு, ஆப்பிரிக்க, ஐரோப்பிய, ஆமெரிக்க நாடுகளுக்கு உழைப்பை விற்க லட்சக் கணக்கானோர் படையெடுத்தனர். இலங்கைத் தமிழர்கள் இச்சூழ்நிலையையும் நன்கு பயன்படுத்தினர். பல நாடுகளில் அரசியல் அகதிகளாகவும் தஞ்சம் புகுந்து வேலை வாய்ப்பைப் பெற்றனர். இவர்களது பணமும் அரசியல் விழிப்புணர்வும் கூட, உள்நாட்டில் ஏற்பட்ட அரசியல் உணர்வுக்கு— தேசிய இன எழுச்சிக்கு உர மூட்டின.

தேசிய உணர்வு சமுதாய வளர்ச்சியின் ஒரு கால கட்டத்தில் ஏற்படுகிறது: முதன்மையாக நிலப்பிரபுத்துவம் உடைந்து முதலாளித்துவம் வளரும்போது தேசியக் குரல் முன் வைக்கப்படுகிறது.

மொழி, வரலாற்று ரீதியாக பரம்பரையாக வாழ்ந்த நிலப்பகுதி, பொருளுற்பத்தி வாழ்வு, சமூக அமைப்பு, பொது மதம், பண்பாடு ஆகியன நிலப் பிரபுத்துவத்திலேயே பெரும்பாலும் நிலைபெற்றிருக்கும். இக்கால கட்டத்தில் ஒற்றுமையின்மை நிலவியிருக்கலாம். முதலாளித்துவ வளர்ச்சி, தேசியச் சந்தையை உருவாக்கிப் பொதுப் பொருளாதாரத்தையும் பண்பாட்டையும் நிலைப்படுத்த முயலும்.

ஆகவே நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையின் சிதைவும் முதலாளித்துவப் பொருளாதார அமைப்பும் தேசியத்திற்கு வழி வகுக்கும்.

இலங்கையிலுள்ள தேசிய இன எழுச்சிக்கு நிலப் பிரபுத்துவ உற்பத்தி முறையின் சிதைவைப்பற்றி மேலே கண்டோம். தமிழ்த் தேசிய முதலாளிகளின் சந்தைத் தேவையும் ஆதரவும் இல்லாது, தமிழ் ஈழக் குரல் எழுவது ஓரளவு விசித்திரமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரல்விட்டு எண்ணக் கூடிய தமிழ் தேசிய முதலாளி களின் தொழிற்சாலைகள் சிங்களவர் பெரும்பான்மையின ராக வாழும் மேற்கு மாகாணத்திலேயே உள்ளன. இவர் களும் பரவலான இலங்கையின் சந்தையையே விரும்பு கின்றனர். இம்முதலாளிகளையும் தேசிய முதலாளிகள் என்று கூறுவதிலும் பார்க்க, தரகு முதலாளிகள் என்று கூறுவதே சரியாகும். பொதுவாகவே, இலங்கையில் ஆளும் வர்க்கத்தினர் தரகு முதலாளிகளே; தேசியத் தன்மை குன்றிய தரகு முதலாளித்துவக் கலாசாரத்தையும் இலங்கை யில் காணலாம். ஆங்கில மொழி மீண்டும் கட்டாய மொழியாகிது.

சென்ற ஆறு ஆண்டுகளில், இலங்கையின் ஆளும் வர்க்கம், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நேரடிக் கட்டுப் பாட்டுள் வந்துவிட்டது. இந்த உண்மையைக் கடந்த பிப்ர வரி மாதம் டில்லியில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் மகாநாட்டில் ஜனாதிபதி ஜயவர்த்தன வெளிப்படையாகக் கூறினார். உலக வங்கி கூறுவனவற்றை எல்லாம் நாம் கேட்டு நடக்க வேண்டியிருக்கிறது என்று தெரிவித்தார். (இதே நிலை மூன்றாம் உலக நாடுகள் அனைத்திலும் நிலவுகிறது.)

ஏகாதிபத்தியத்தின் நேரடிக் கட்டுப்பாடும், உள்நாட்டில் தரகு முதலாளிகளின் ஆதிக்கமும், தமிழ் தேசிய இன எழுச் சியை மழுங்கடிக்கவே செய்யும். சிறிய தீவாயினும் அங்குள்ள பரந்த சந்தையைப் பிரிப்பதை ஏகாதிபத்தியம் ஒரு போதும் விரும்பாது. மேலும், அப்படி ஏதாவது பிரிவு ஏற்படின், இந்தியா வழியாக ரஷ்ய ஆதிக்கத்துடன் தமிழ் ஈழம் வெல் லும் வாய்ப்பும் உண்டு. சிங்களத் தரகு முதலாளிகளும், இலங்கைத் தமிழர்களைத் தமிழ் நாட்டுத் தமிழர்களுடன் சேர்த்துப் பார்த்தே தம்மைச் சிறுபான்மையினராகக் கருதுகின்றனர். இதனாலேயே இலங்கைத் தமிழர்களுக்குச் சலுகைகள் வழங்கிச் சமரசம் செய்ய அஞ்சுகின்றனர். அவர் கள் தமிழர்களுக்கு சலுகைகள் வழங்குவதும் நாடு பிரிவ தற்கு மேலும் வாய்ப்பு அளிக்கும் என்று பயப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகாதிபத்தியத்திற்கும் இலங்கை மக்களுக்கும் இடையிலுள்ள பிரதான முரண்பாட்டை இரு இன மக்களும் கையிலெடுக்கத் தவறினர். தமிழ் ஈழத்தை முன்வைப்போர் சிங்கள ஏகாதிபத்தியத்திற்கும் தமக்கும் இடையே பிரதான முரண்பாடு இருப்பதாகக் கொள்கின்றனர். தம் போராட்டத்தைப் பொலீசாரையும் இராணுவத்தையும் தாக்குவதன் வழியாக முன்னெடுத்துச் செல்ல முடியும் என எண்ணிச் செயல்படுகின்றனர்.

தமிழ் ஈழத்தை முன் வைத்துப் போராடுவோரையும் தற்போது தம்மைத் தயார் படுத்துவோரையும் மூன்று வகையாகப் பிரிக்கலாம்:

1) வங்காள தேசப் பிரிவினை போல, இலங்கைத் தமிழர் வாழும் வட, கீழ்ப் பகுதிகளைத் தமிழ் ஈழம் எனப் பிரித்துத் தனி ஆட்சி அமைப்பது. மற்றைய பகுதிகளில் வாழும் இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழரில் விரும்பியவர்களை இப்பகுதியில், வந்து வாழ வசதியளிப்பது. தற்போது தீவிரப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் இளைஞர்கள் வன்செயல் வழியாக இதைப் பெற முடியும் என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். பணக்கார விவசாயிகளும், வெளி நாடுகளில் உழைக்கும் தமிழர்களும் இதற்கு ஆதரவு அளிக்கின்றனர். வங்காள தேசப்பிரிவினை போல, ஏகாதிபத்தியம் நுழைந்து பிரிவை ஏற்படுத்துவதையும் இவர்கள் விரும்புவர்.

தற்போது இலங்கைத் தமிழரிடம் மிக ஆதிக்கம் பெற்றுள்ள கருத்து இதுவேயாகும். இத்தகைய பிரிவினையையே தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற பாராளுமன்றப் பிரதிநிதிகளைக் கொண்ட அமைப்பும், சாத்வீக முறையில் வென்றெடுக்க விரும்புகிறது.

2) வட, கீழ்ப்பகுதியில் வாழும் விவசாயிகள், தொழிலாளிகள் ஆகியோரை அணிதிரட்டி, புரட்சிமூலம் தமிழ் ஈழத்தை விடுவித்து, சோஷலிச அமைப்பை ஏற்படுத்துவது. சிங்கள விவசாயிகள் தொழிலாளர்கள் ஆகியோரின் ஆதரவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றியே இப்புரட்சியைத் தமிழர்களாகவே நடத்தி விடலாம் என்று இவர்கள் நம்புகின்றனர். சிங்கள இடதுசாரி புரட்சியாளர்களை நம்ப முடியாது என இக்கோட்பாட்டைச் சார்ந்திருக்கும் இளைஞர்களும் மாணவர்களும் கூறுகின்றனர்.

3) சிங்கள, தமிழ் விவசாயிகளும் தொழிலாளர்களும் ஒன்றிணைந்து சோஷலிசப் புரட்சியை நடத்துவது. சோஷலிச அமைப்பில் சோவியத் நாட்டில் லெனினால் உறுதி செய்யப்பட்டதுபோல், தேசிய இனங்களுக்குச் சுயநிர்ணய உரிமை வழங்கப்படும். இது சந்தைக்கான தேசியம் அல்ல. இங்கு உற்பத்தி சுரண்டலுக்காக நடைபெறப் போவதில்லை. ஆகவே இரு தேசிய இனங்களும் உரிமையுடன் வாழ முடியும். ஒரு சோஷலிச அமைப்பிலேயே சிங்களப் பகுதியில் வாழும் இலங்கைத் தமிழரும் இந்தியத் தமிழரும் சுமுகமாக, பாதுகாப்பாக வாழ முடியும். நாட்டிலுள்ள இன்றைய பொருளாதார நெருக்கடி மக்களின் ஒன்றிணைந்த புரட்சிக்கே விரைவில் இட்டுச் செல்லும் என்று இக்கோட்பாட்டாளர்கள் நம்புகின்றனர். ஏகாதிபத்திய ஊடுருவலே பிரதான முரண்பாடு என்று இவர்கள் கருதுகின்றனர்

ஒட்டு மொத்தமாகக் கூறின், முதலாளித்துவத்தில் தோன்றும் தேசியம் பண்ட விற்பனைச் சந்தையை ஒட்டி எழும் தேசியமாகும். இது சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட தேசியம்; சோஷலிசத்தில், உற்பத்தி, விநியோகம், பரிமாற்றம் சுரண்டலுக்காக நடைபெறுவதில்லை. இவை மக்களின் தேவையை ஒட்டித் திட்டமிட்டு நடைபெறுகின்றன. இங்கேயே தேசிய இனங்களின் சுதந்திரமும் வளர்ச்சியும் ஐக்கியமும் ஒன்றிணைகின்றன. இது மனித இனத்தின் உன்னத வளர்ச்சியாகும்

முதலாளித்துவம் நிலையான அமைப்பன்று: இது மனித வரலாற்று வளர்ச்சியின் ஒரு கால கட்டமே. உற்பத்திப் பண்ட சந்தையின் எல்லையை வைத்து அமைக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசியம், சோஷலிசத்தில் புதிய இலக்கணம் அல்லது வடிவம் பெறுவதும் இயல்பே. இதுவே இயக்கவியல் பார்வையாகும்.

தற்போது தேர்தல் முறைகளை முற்றாக நிராகரித்து வன்முறையில் ஈடுபட்டிருப்பவர், முதலாவது பிரிவினர். இவர்களுடைய போராட்டம், யுத்த அணிக்குப் படை திரட்டும் நோக்குடைய கொரில்லாப் போராட்டமா, தன்னெழுச்சிப் போராட்டமா என்பது ஆராயப்பட வேண்டியதாகும். ஏனெனில் இவர்கள் ஒரே தலைமையின் கீழ் இல்லாது, தலைமைப் பீடங்களால் பிரிவுண்டு, பல குழுக்களாகியுள்ளனர், அடுத்து இவர்களுடைய வர்க்க நிலை; பாட்டாளி விவசாயி, தொழிலாளி தலைமை இவர்கள் போராட்டத்தில் இல்லை. இளைஞர்களும் மாணவர்களுமே போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் பெரும்பாலும் அரைப் பாட்டாளிகளாகவும் குட்டி பூர்ஷ்வாக்களாகவும் இருக்கின்றனர்.

இலங்கையும இந்தியா போல வளர்ச்சி அடையாத மூன்றாவது உலக நாடு. விவசாய நாடு. மூலதன திரட சிக்கு வேண்டிய உபரி விவசாயத்தில் இல்லை. விவசாயத்தில் சிறிது உபரி திரண்டாலும் அதனைத் தம ஆதிக்கத்தில் உள்ள யந்திர உற்பத்திப் பண்டங்களான டிராக்டர், பம்செட், உரம், கிருமி நாசினிகளின் விலையை உயர்த்தி சர்வதேசக் கம்பெனிகள் அபகரித்துக் கொள்ளுகின்றன.

பெருந்தோட்ட உற்பத்திகளான தேயிலை, ரப்பர், தேங்காய், கொக்கோ போன்றவற்றையும் பிறநாட்டுக கம்பனிகளின் வாணிப மூலதனமே ஆள்கின்றன. சர்வதேசக் கம்பனிகள், கூட்டுக் கம்பனிகளே. சுதந்திர வர்த்தக வலயம் உட்பட உள்நாட்டு உழைப்பை உறிஞ்சும் பண்டங்கள் மீதும் ஆதிக்கம் செலுத்துகின்றன உள்நாட்டுத் தரகு முதலாளிகளிடம் தேசியத் தன்மையே குன்றிவிட்டது. தரகு வியாபாரம் விநியோகம், சொத்துகளை வாங்கி விற்பதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படும் லாபம், ஒட்டல் தொழில் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளுக்கு (விபசாரம் உட்பட) சேவை வழங்கல் ஆகியவற்றிலேயே வாழ்கிறார்கள். உலக வங்கி, அடிக்கடி ரூபாவின் மதிப்பைக் குறைப்பதில் மகிழ்ச்சியும் இலாபமும் அடைகின்றது.

இத்தகைய இழி நிலையில் தேசிய எழுச்சி அவசியமே. ஆயினும் அஃது இங்குத் திசை திருப்பப்பட்டுப் பிளவுபட்டிருப்பது பெரிதும் வருந்தத்தக்கதே.

இலங்கை உட்பட மூன்றாம் உலக நாடுகளின் விடிவுக்குப் புரட்சியன்றி வேறு வழியே இல்லை. தரகு முதலாளிகள் தேசிய முதலாளிகளாக வாய்ப்பே இல்லை. ஏனெனில், இவர்கள் கூட்டுச் சேர்ந்தபோதும் உபரி திரட்டக் கூடிய யந்திர உற்பத்தி, முதலாளித்துவ ஏகாதிபத்திய, நாட்டுக் கம்பனிகள்—சர்வதேசக் கம்பனிகளின் ஆதிக்கத்திலேயே உள்ளன. தரகு முதலாளிகள் தாம் பெறும் தரகு இலாபத்தில் வரும் சிறுபகுதி உபரியைத் திரட்டி, வெளிநாட்டுக் கம்பனிகளை விரட்டி, அதே யந்திர உற்பத்தியைத் தாமே தொடரும் தேசிய முதலாளிகளாக வளர முடியாதவராக உள்ளனர். இவர்கள் திரட்டும் உபரியின் ஒரு பங்கை வெளிநாட்டுக் கடனின் வட்டியும் அபகரிக்கிறது. இது தவிர, சர்வதேசக் கம்பனிகளின் தொழில்நுட்ப வளர்ச்சியைத் தேசிய முதலாளிகளால் எட்டிப்பிடிக்க முடியவில்லை. இதனாலே இவர்கள் தொடர்ந்து தரகு முதலாளிகளாக இருக்கின்றனர். இதனாலேயே மூன்றாம் உலக நாடுகளுக்கு விடிவே இல்லை புரட்சி ஒன்றாலேயே தளைகளை அறுக்க முடியும் என்கின்றனர்.

இந்நாவல் கற்பனை என்று கூறமாட்டேன். அண்மைக் காலம் வரை இலங்கைத் தமிழரிடை நடைபெற்ற போராட்டங்கள், அரசியல் விழிப்பு, கருத்து மோதல்கள், அரசின் பயங்கர வாதத் தடுப்புச் சட்டத்தின் தாக்கம் ஆகியவற்றைக் கதை போலப் பின்னியுள்ளேன். அங்கு நடைபெறும் சம்பவங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்குபடுத்தித் தந்துள்ளேன். பெயர்களை மட்டும் பொதுமைப் படுத்தியுள்ளேன். இவற்றில் ஓரிரு பாத்திரங்களே கற்பனையானவை. கதாநாயகன் நடராசன் குட்டி பூர்ஷ்வா வர்க்கத்தவன். அவன் பார்வையில் பல்வேறு கருத்துகள் மோதுகின்றன.

இந்நாவலின் எழுத்துப் பிரதியைப் படித்து ஆலோசனைகள் வழங்கியநண்பர் செ. யோகநாதனுக்கு என் அன்பு. அச்சிடுவதில் உதவிய திரு. முத்து, அச்சகத் தொழிலாளர் அனைவர்க்கும் என் நன்றி. பிழை திருத்துவதில் உதவிய நண்பர் அரணமுறுவலுக்கும் என் அன்பு.

ஏப்ரல் 1983. செ. கணேசலிங்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமரன் பதிப்பின் முன்னுரை

இந் நாவல் இலங்கை வரலாற்றின் திருப்பு முனையாக அமைந்த ஜூலை 1983ன் முன்னர் இலங்கையில், சிறப்பாக யாழ்ப்பாணத்தில் நிலவிய அரசியல் சூழலை அடிப்படையாகக் கொண்டது. யாழ்ப்பாண தீபகற்பமே தேசிய விடுதலைப் போராட்டத்தின் களமாக அமைவதை பேரினவாத சிங்கள அரசு கண்டது. தன் ஈவிரக்கமற்ற அடக்கு முறையை அங்கேயே கட்டவிழ்த்து விட்டது. அதற்கு எதிராக, அரசின் வன்முறைக்கும், பயங்கரவாத அடக்கு முறைக்கும் எதிராகவே இளைஞர்களின் போராட்டம் ஆரம்பமாகியது. சமூகப் போராட்டங்களில் அக்கறைப் படாது ஒதுங்கி வாழ்பவரும் போராளிகளாக மாற்றப்படுகின்றனர்.

மக்களின் அடிப்படையான உணர்வுகளை அறிந்து தீர்க்க முயலாது வன்முறையால் அடக்கிவிடலாம் என எண்ணுவது உலக வரலாற்றை அறியாதவர், கற்காதவரின் சிறுமைத்தனமே, அதனாலேயே பதின்நான்கு ஆண்டுகளின் பின்னரும் இன்று பிரச்சனை பூதாகார வடிவமெடுத்து நாடு முழுவதையும் போரில் ஈடுபடுத்தி அழிவுப் பாதையில் இட்டுச் சென்றுள்ளது.

உலகெங்கும் தேசிய இனங்களின் எழுச்சியையும் விடுதலைப் போராட்டங்களையும் இன்று காண்கிறோம். யுகோ செலவிகியா, ரஷ்யாவில் அண்மையில் நடைபெற்ற போராட்டங்களையும் தேசிய இனங்களின் தன்னாட்சிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குகளையும் காண்கிறோம். இவை எவற்றையுமே இலங்கைப் பேரினவாத அரசு கண் திறந்து காணாது, பார்க்க விரும்பாது இருப்பதே விசித்திரமானது. உலக நாடுகளும் இவற்றை இலங்கை அரசுக்கு உணர்த்தாது, யுத்தத்திற்கும் அழிவுக்கும் ஆதரவு அளித்து வருவது அதனிலும் விசித்திரமானது.

மேல்மட்ட அமைப்புகளில் அரசியலே முதன்மையானது. அதற்கு அடுத்ததாகவே கலை இலக்கியங்கள், கல்வி, மதம், குடும்பம் போன்ற மேல்மட்ட அமைப்புகள் தொடர்கின்றன இவை அனைத்திலும் அரசியல், தாக்கம் ஏற்படுத்துவதைக் காணலாம்.

கலை, இலக்கியங்களில் இன்று மேலாதிக்கம் பெற்றிருப்பது சினிமா. அது தொழில் நுட்பக்கலையாக வளர்ந்து நாவல் கதை, நாடகம், இசை, வர்ண ஓவியம், அழகுணர்ச்சியூட்டும் பல்வகைப் பொருட்களின் கூட்டமைவைக் கொண்டது. அவை தணிக்கை விதிகளின் மூலமும் அரசியலுக்கு உட்பட்டே வெளி வருகின்றன; அரசின் பாராட்டும் பரிசும் பெறுகின்றன. அமெரிக்க ஏகாதிபத்திய அரசியலைப் பிரதிபலிக்கும் கலையுணர்வு மிக்க (அமெரிக்க) இன்டிபென்டன்ஸ்டே, சுதந்திர தினம் என்ற படம் இங்கும் ஓடுகிறது. உலகெங்கும் சிறந்த படமாக ஓடிக் கொண்டிருக்கிறது.

என் நாவல்கள் அனைத்திலுமே அரசியல் ஊடறுத்து நிற்பதைக் காணலாம். இந்நாவலைத் தொடர்ந்து 1983 ஜூலைக்குப் பிந்திய அரசியலின் தொடர்ச்சியாக டிசம்பர் 1996 வரையுள்ள காலகட்ட இலங்கை அரசியலைப் பிரதிபலிப்பதாக 'புதிய சந்தையில், அயலவர்கள், பொய்மையின் நிழலில், ஒரு பெண்ணின் கதை, மரணத்தின் நிழலில் வன்முறை வடுகள், 'ஈனத் தொழில்' ஆகிய நாவல்களை எழுதினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றையே சமகால வரலாற்று நாவல் என கலாநிதி கைலாசபதி அவர்கள் வகைப்படுத்தினார்.

உலகப் புகழ்பெற்ற காவியங்கள், நவீன காவியங்களான நாவல்கள் யாவும் அரசியல் சார்ந்தே, இணைந்தே எழுதப் பட்டிருப்பதைக் காணலாம். இந்த உண்மைகளை ஏராள மான தமிழக எழுத்தாளர் அறிந்துணர மறுப்பதும் கவலைக் குரியதே.

ஒரு காலகட்டத்தில் ஆதிக்கம் பெற்று கல்வி கற்ற மிகச் சிறுபான்மையினரிடம் ஆதிக்கம் பெற்ற கவிதை, செய்யுள் என்ற கலை வடிவங்கள் இன்று இசையோடு பாடுவதற்கு மட்டுமாகச் சுருங்கிவருவதைக் காண்கிறோம். பண்டைய காவியங்களைக் கூட எளிமையாகப் படிக்கக் கூடிய வசன (கவிதை) வடிவில் புகழ்பெற்ற கவிஞர்களே பிரபல சஞ்சிகை களில் எழுதி வருவதைக் காண்கிறோம்.

இச்சூழலிலும் கூட நாவல், சிறுகதையே ஆதிக்கம் பெற்ற நவீன கலைவடிவங்களாக நிலைப்பதைக் காண லாம்.

இன்று, மீள இந்நாவலைப் படிப்போருக்கு பதின்நான்கு ஆண்டுகட்கு முன்னர் யாழ்ப்பாணத்து நிலைமைகளை மீண் டும் நினைவூட்டும், அன்று குழந்தைப் பருவத்தவராயிருந்து இன்று இளைஞர்களாகக் கல்லூரிகளில் கற்பவர் கட்கு, போராளிகளுக்கு அண்மைய வரலாறாக அறிவுறுத்தும் அரசியல் சார்ந்த நாவல். இவ்வாறான சிறப்புடையது.

சென்னை
15-3-1997

செ. கணேசலிங்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் பிற நூல்கள்

## நாவல்கள்

'நீ. ஒரு பெண்'; நகரமும் சொர்க்கமும்
வன்முறை வடுக்கள்; ஈனத்தொழில்
மரணத்தின் நிழலில்
ஒரு குடும்பத்தின் கதை
இரண்டாவது சாதி
உலகச் சந்தையில் ஒரு பெண்
ஒரு பெண்ணின் கதை
விலங்கில்லா அடிமைகள்
சூரியன் கிழக்கில் உதிப்பதில்லை
பொய்மையின் நிழலில்...
அயலவர்கள்
இளமையின் கீதம்
அந்நிய மனிதர்கள்
வதையின் கதை
மண்ணும் மக்களும்
போர்க்கோலம்
தரையும் தாரகையும்
செவ்வானம்
சடங்கு
நீண்ட பயணம்

## சிறுகதைத் தொகுப்புகள்

சிறுவர்க்கான சிந்தனைக் கதைகள்
கொடுமைகள் தாமே அழிவதில்லை
சங்கமம்
ஒரே இனம்
நல்லவன்; சிறுகதைகள்

## கட்டுரைகள்

அறிவுக் கடிதங்கள்
பெண்ணடிமை தீர
கலையும் சமுதாயமும்
குந்தவிக்குக் கடிதங்கள்
குமரனுக்குக் கடிதங்கள்
மான்விழிக்குக் கடிதங்கள்

**பாரி நிலையம்**
184, பிராட்வே, சென்னை-108

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளமையின் கீதம்

## 1

''நீங்கள் என்னைக் கைவிட்டால் எனக்கு ஒரே வழிதான் இருக்கிறது.''

''அது என்ன வழியோ''

''இப்போது சொல்ல மாட்டேன்''

''தங்கம், இப்பவே சொல்லு''

நடராசன் வாஞ்சையோடு கேட்டான்.

''சொல்லமாட்டேன். செய்து காட்டும்போது பாருங்கள்

''இப்போது நீ சொல்லித்தான் ஆகவேணும்.''

''சொல்லாவிட்டால் என்ன செய்துவிடுவீர்கள்?''

நடராசன் தங்கத்தை உற்றுப் பார்க்கிறான். பார்வையில் அதட்டும் பாவனை. சற்றுச் சரிந்து பார்த்து நிற்கிற அவளின் அகன்ற கண்களில் இளமையின் துடிதுடிப்பு. மினுமினுப்பான மென் கருமைநிறம், எத்தனை அழகாயிருக்கும் என்பதற்கு உதாரணமாக நிற்கிறாள். அவள் கைகளில் ஒட்டியிருந்த கண்ணாடி வளையல்களின் ஒலியைக் கேட்டபடியே நடராசன் அழுத்தமாகச் சொன்னான்:

''இந்தக் கிணற்றில் விழுந்துவிடுவேன்.''

துலாக் கொடியைப் பிடித்தபடி, கிணற்றுப் படியில் நின்ற நடராசன் ஒரு காலைக் கிணற்றுள் நீட்டினான்.

''நீங்கள் இதற்காக விழவேண்டாம்.''

இ—2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அப்பச் சொல்லு''

''நான் இந்தக் கிணற்றில் விழுந்து சாவதைத் தவிர வேறு வழியில்லை''

தங்கம்மா எதிரேயிருந்த கிணற்றுப் படிக்கட்டில் நின்று துலாக் கொடியை இழுத்து வாளியை நீரில் அமிழ்த்திக் கொண்டே சொன்னாள்.

''நான் நீத்தப் பழகி விட்டேன். உடனே கிணற்றில் குதித்துக் காப்பாற்ற மாட்டேனா!''

''நீங்கள் இல்லாத வேளையாகத்தான் விழுவேன்''

நடராசன் நம்பும்படியாகத் தங்கம்மா உணர்ச்சி வயப் பட்டே கூறினாள்.

சில வருடங்களாகவே அது சுவையான காதல் நாடக மாகவே இருந்தது.

நடராசன் காலையில் கல்லூரிக்குப் புறப்படுமுன் குளிப் பதற்குக் கிணற்றடிக்குச் சென்றதும் தங்கம்மா குடத்துடன் கிணற்றடிக்கு வந்துவிடுவாள்.

ஆரம்பத்தில் பேச்சுகள் குறைவு கண்களால் பேச்சு. பின் சிரிப்பு. வெட்கத்தில் தலைகுனிந்து நடப்பாள். இடை யிடை தன்னைப் பார்க்கிறானா என்று திரும்பிப் பார்ப்பாள்.

பங்குக்கிணறு. இரு துலாக்கள். எதிரெதிரே இரு கிணற்றுப் படிகள். கிணறே பாதியாகப் பிரிக்கப்பட்ட வித மாகத் தென்னங்கீற்று வேலி. அதன் எல்லைப்புறத்தில் இரு மருங்கிலும் வாழைக் குடும்பங்கள். துலாக் கொடியருகே மாவட்டைச் செடிகள் வளவுகளைச் சுற்றிவர வேலி அடைக் கப்பட்டிருந்தது. தங்கம்மா வீடு வளவின் மூலையில் இருந் தது. ஆயினும் வீட்டு முற்றத்தில் நின்று பார்த்தால் எதிர்க் கிணற்றுப்படியில் நடராசன் நிற்பது தெரியும். அவன் குளிக்கத் தொடங்கியதும் அவள் குடத்துடன் கிணற்றடிக்கு வருவாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நாட்களில் குடத்தை நடுவேலியோடுள்ள கிணற்று மதில் கட்டில் வைப்பாள். நடராசன் நீர் ஊற்றி விடுவான். அவள் தீட்டாயிருக்கிறாள் என்பதை அவன் கேட்பதில்லை.

''ஏன் அப்படிப் பார்க்கிறீர்கள்?''

''உன் கண்களைப் பார்க்க அத்தனை ஆசை''

அவள் சிரித்தாள்.

''அடுத்தது உன் பற்கள்''

பொய்க் கோபமும் வெட்கமும் காட்டியபடி, அவள் இடையில் குடத்தை வைத்துக்கொண்டே நடப்பதைப் பார்த்துக் கொண்டே சோப்பைப் போட்டுக் கொள்வான். ஒரு நாள் சோப் தவறிக் கிணற்றிலேயே விழுந்துவிட்டது.

''ஏன் போட்டீர்கள்?''

''நீ தான் என்னை மறக்கச் செய்து விழுத்தி விட்டாய்.''

இளமைப் பருவத்து வார்த்தைகளில் இருவரும் பரவசமடைவார்கள். அந்த நினைவைத் தொடர்ந்து அவை அவர்களைக் கனவுகளில் மூழ்க வைக்கும்.

நடராசனின் தாய் பவளம் இந்தக் காதல் நாடகத்தை ஓரளவு கண்டு கொண்டாள்.

''தம்பி நான் வேலையாயிருக்கிறன்; ஒரு குடம் தண்ணி கொண்டு வாடா''

''நான் படிக்கிறன் அம்மா'' பெரும்பாலும் பதில் வரும்.

சில வேளைகளில் நடராசன் முற்றத்திலிருந்த குடத்தை எடுத்துக் கிணற்றடிக்குச் செல்வதைப் பவளம் கவனித்தாள். ஓரளவு தண்ணீர் இருந்தபோதும் அதைக் கழுவி ஊற்றி விட்டுச் செல்வான். அவ்வேளைகளில் மற்றைய துலா ஏறுவதையும் அவதானித்து பவளம் வேலியால் எட்டிப் பார்த்தாள். தங்கம்மாப் பெட்டை.

பவளம் பரீட்சித்துப் பார்த்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கம் குளிப்பதைப் பார்த்த பின்னர் அடுக்களையில் இருந்து குரல் கொடுத்தாள்:

''தம்பி ஒரு குடம் தண்ணி கொண்டு வாடா''

முற்றத்தில் நின்று வேலிக்கு மேலாகப் பார்த்தான்.

''சரியம்மா''

தாமதமின்றிக் குடத்தை எடுத்து ஓடுவான்.

இரண்டு மூன்று பரீட்சையில் வெற்றி கிடைத்ததைப பவளம் கண்டாள். இது வெறும் பருவக் கோளாறு. ஒரு போதும் பழுக்கப்போவதில்லை என்பதையும் பவளம் அறிவாள்.

பவளம் தங்கம்மாவை வெறுத்தாள். ஒரு நாள் கிணற்றில் தண்ணீர் அள்ளும்போது தங்கம்மாவை எதிரெதிரே சந்தித்தபோது நேரடியாகச் சாடினாள்:

''ஆம்பிளைப்பிள்ளையள் குளிக்கேக்கை வெக்கம் நாணமில்லாது நீ என்னடி தண்ணி அள்ள வாறது''

அதன் பின்னர் நடராசன் தங்கம்மா சந்திப்பு இரவாக மாறியது.

மருத்துவக் கல்லூரி நுழைவுக்காக நடராசன் நீண்ட நேரம் இரவில் படித்துக்கொண்டிருப்பான்.

விளக்கை அணைத்தபின் கிணற்றடிக்கு வருவான். தங்கம்மா வேலியோடு வந்து நிற்பாள்.

ஆயினும் கிணற்றின் எதிரெதிரே பகலில் சந்திப்பது முற்றாக நின்றுவிடவில்லை. வீட்டில் தாய் இல்லாதபோது, குளிக்கும்போதும் சைகை காட்டி அழைப்பான்.

அன்று எதிரெதிரே கிணற்றடியில் சந்திப்பு. தன்னைக் கைவிட்டால் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்வதாகத் தங்கம்மா பயமுறுத்தினாள்.

''தங்கம், இப்படியெல்லாம் சொல்லாதே, நான் என்றும் உன்னைக் கைவிடமாட்டேன்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எப்படித் தங்கம்மா சுகமாயிருக்கிறாயா?"

"இப்ப அம்மா என்றுதான் கூப்பிடுவாய். டாக்டரை வீட்டுக்கு அழைக்கிற அளவிற்கு எனக்கு நோய் ஒன்று மில்லை."

"வீட்டுக்கு ஒரு தடவை வந்து உன் சுகமெல்லாம் விசாரிக்க வேண்டும். உன் கையால் ஒரு கோப்பி வாங்கிக் குடிக்க வேண்டும் என்று நீண்ட நாள் ஆசை."

"அம்மா செத்த பிறகுதான் இந்த வேலியைத் தாண்டத் துணிச்சலெல்லாம் வருகிறது. என் வீட்டுக்கு எந்த வேளையும் வரலாம்."

தங்கம்மா தண்ணீர்க் குடத்துடன் புறப்பட்டாள். அவள் இடையில் குடத்துடன் அசைந்து செல்வதைப் பார்த்துக்கொண்டே நடராசன் துலாக் கொடியை வலித்தான். பழைய நினைவெல்லாம் மனத்திரையில் நிழலாடியது.

அவள் முன் கூறியபடி, கிணற்றில் விழவில்லை. அவனும் குதிக்கவில்லை. 25 வருடங்களுக்குப்பின் அதே கிணற்றடியில் எதிரெதிரே சந்திப்பு.

வேலி தாண்டத் துணிச்சல் வந்தது தாயின் சாவின் பிறகுதான் என்று தங்கம்மா கூறியது அவன் நெஞ்சைச் சுட்டது. அவள் கூற்றில் முழு உண்மையும் உள்ளதாக நடராசன் கருதவில்லை.

மருத்துவக் கல்லூரி நுழைவு கிடைத்ததும் நடராசன் கொழும்பிற்குச் சென்றான். ஒரே படிப்பு. கிராமத்துக்கு வருவதே குறைவு. வர நேர்ந்தாலும் ஒரு சில நாட்களே தங்குவான் தங்கம்மாவைத் தூரத்தில் காண்பது தவிர, கண்டு பேச முடியாதவாறு அவன் தாய் பார்த்துக்கொண்டாள். அவன் வராந்தாவில் தூங்கும்போதும் அருகே படுத்துக்கொள்வாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு வாழ்க்கை, மருத்துவக் கல்லூரிப் படிப்பு, புதிய நாகரிகப் பெண்கள், தாதியரின் பழக்கம் யாவும் நடராசனைத் தங்கம்மாவிடமிருந்து தூரத்துக்குக் கொண்டு சென்றன.

நடராசனின் தந்தையும் கிணற்று நீரை நம்பி வாழும் நடுத்தர விவசாயி. இரண்டு சிறு அறைகள் மட்டும் கொண்ட கல் வீட்டைச் சுற்றி வாழை. அடுத்த கிணற்றடியில் காய் கறிப்பயிர் புகையிலை, கிழங்கு நடுவார். நாள் பூராவும் தோட்டத்து மண்ணைக் கிண்டுவதிலேயே செலவிடுவார். வீட்டின் ஓலைக்கூரையை ஓடாக மாற்ற முடியவில்லை. பிள்ளைகள் தன்னைப்போல் மண் கிண்டப்படாது; படித்து எங்காவது கிளார்க் ஆகவாவது வேலைபார்க்க வேண்டும் என்றே விரும்பினார்.

ஆனால் பவளம் மூத்த மகனை எப்படியும் டாக்டராக்கி விடவேண்டும் என்று கனவு கண்டாள். வாயை வயிற்றைக் கட்டி மூத்தவன் கல்விக்கு வேண்டிய பணம் யாவும் செல வழித்தாள். அது போதாதபோது நிலங்களைச் சிறிது சிறி தாக விற்றாள். தாலிக்கொடி தவிர நகைகள் யாவற்றையும் விற்றுவிட்டாள். அடுத்த பையன் சிறுவனே. நடராசன் டாக்டராகி உழைத்து அவனை உயர்த்தட்டும் என்பதே அவள் முடிவு.

பவளத்தின் கனவு பொய்யாகவில்லை. நடராசன் டாக்டராகி விட்டான். அவள் பெருமையாக எல்லோரிடமும் சொல்லிக் கொள்வாள். தலை நிமிர்ந்து நடந்தாள். ஆனால் அவள் நினைத்தபடி பிற விஷயங்கள் எதுவும் நடைபெற வில்லை. நடராசன் தான் விரும்பியபடி, கொழும்பிலேயே ஒரு நர்சைத் திருமணம் செய்து கொண்டான். தன்னைப் பழிதீர்ப்பதற்காகத்தான் இவ்வாறு செய்து கொண்டானோ என்று பவளத்தின் மனம் உள்ளூறக் குறுகுறுத்தது

தங்கம்மா விஷயத்தில் பவளம் மிகச் சாதுரியமாகவே நடந்தாள். அதை நடராசன் அறிந்திருக்கவில்லை. அவன் கொழும்புக்குச் சென்ற இரண்டு வருடங்களிலேயே அவர் கள் காதலுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவளம் தங்கமாவின் தாய் பூரணத்துடன் சேர்ந்து தங்கம்மாவிற்கு கலியாணம் பேசினாள்.

''பாவம், அயல் வீட்டுக் குமர். எங்கோ கரை சேர வேண்டும். வயதானால் அழகெல்லாம் போய்விடும். பெண் பிள்ளையென்றால் சீக்கிரமே கலியாணம் கட்டி விட வேண்டும்.''

தரகர்மாரிடமும் சொல்லிப் பூரணத்தையும் உசார்ப்படுத் தினாள். அவள் அப்படிச் சொல்கிறபோது யாருமே அவளைச் சந்தேகிக்க முடியாது. தன் சொந்த மகளுக்காகப் படுகிற வேதனை போலச் சொற்கள் தெறிக்கும்.

இச் சூழ்நிலையில் தங்கம்மா ஊமையானாள். தாயிடமும் உண்மையைக் கூறி எதிர்க்கவோ, தள்ளிப்போடவோ முடிய வில்லை.

தமிழ் ஆசிரியர் நல்லையா கிராமத்துப் பாடசாலை யிலேயே கற்பித்து வந்தார். பவளம் தங்கம்மாவைப் பற்றி உயர்வாகச் சொல்லி அவரைச் சம்மதிக்க வைத்து விட்டாள்:

''வடிவான பெண். வீட்டுக்கு லட்சுமி மாதிரி. எந்தப் பெடியனையும் தலை நிமிர்ந்தும் பார்க்க மாட்டாள். என் மகனுக்கே கட்டி வைத்து விடுவேன். அவன் படிப்பு முடிந்து உழைக்க இன்னும் எத்தனை வருஷமாகும். அதுவரை குமரை மறித்து வைத்திருக்க முடியுமா?''

பவளத்தின் நயமான பேச்சில் நல்லையா மயங்கி விட்டார். அவர் சீதனத்தைப்பற்றியே வற்புறுத்தவில்லை. கலியாணம் யாவும் எளிமையாக இருவாரத்தில் நடந்து முடிந்தது.

சடங்குகள் யாவும் முடிந்தபின்னர் பவளம், கொழும்பி லிருந்த நடராசனுக்கு வழமையாக எழுதும் கடிதத்தில் சாதாரண கிராமத்துப் புதினம் போல சில வரிகள் எழுதினாள்:

''தம்பி, ஒரு புதினம். தங்கம்மாப் பெட்டைக்குச் சென்ற சனிக்கிழமை முருகன் கோயிலிலை கலியாணம் நடந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாப்பிள்ளை சைவத்தமிழ்ப் பாடசாலையில் படிப்பிக்கிற தமிழ் வாத்தி நல்லையா. காலையிலை இரண்டு பேரும் கிணத்தடியில் கலகலப்பாகக் குளித்துக் கொண்டிருந் தினம்...''

அவள், உன்னை முற்றாக மறந்து விட்டாள் என்பது மட்டுமல்ல, ஏமாற்றியும் விட்டாள் என நடராசன் எண்ணத் தக்கதாக நாசுக்காகக் கடிதம் எழுதியிருந்தாள்.

## 3

காலைச் சாப்பாடு முடிந்ததும் நடராசன் காலில் சிலிப் பரை மாட்டிப் புறப்பட்டான். கிணற்றுக் கட்டில் வேலியைப் பிடித்துக் கொண்டு மறு பகுதிக் கட்டில் காலை வைத்துக் கடந்தும் தங்கம்மா வீட்டிற்குச் செல்ல முடியும். அவ்வாறு செல்ல அவன் விரும்பவில்லை. தங்கள் படலையால் ஒழுங்கை வழியாகக் கிழக்கே சென்று அவர்கள் வீட்டுப் படலையைத் திறந்து நுழைந்தான்.

ஒரு காலத்தில் அது கிடுகினால் கட்டப்பட்ட படலை யாக இருந்தது. தற்போது நீலப்பெயிண்ட் அடிக்கப்பட்ட நீண்ட கம்பிப் படலை. வேலியிருந்த இடத்திலே மதில். படலையைத் திறந்ததும் கற்றபில்லர் டிராக்டர் ரெயிலருடன் நின்றது. இரண்டு சையிக்கிள்கள் நின்றன. புதிய பெரிய வீடு. வாசலில் நாய் ஒன்று படுத்திருந்தது. புதிய மனிதரைக் கண்டதும் அது சோம்பலை முறித்து மெல்ல உறுமியது. தயக்கத்தோடு நடராசன் கதவைத் தட்டினான்.

ஜன்னல் வழியாக அவனைக் கண்ட தங்கம்மா பரபரப் புடன் ஓடி வந்து கதவைத் திறந்துகொண்டே 'வாங்கோ' என்று வரவேற்றாள். உட்காரும்படிக் கைப்பிடி நாற்காலி யைக் காட்டினாள்.

வரவேற்பு மண்டபம் அழகாகவே இருந்தது. சிவப்புப் பொலிஷ் போட்ட சீமெந்து நிலம். உட்கார்ந்து சாப்பிடத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கதாக நீண்ட மேசையும் நாற்காலிகளும் ஒரு புறத்தில், மற்றோர் புறத்தில் டி.வி. யும் நாஷனல் டிரான்சிஸ்டரும். ஒரு ஷோகேசில் பாத்திரங்கள் பரிசுக் கப்கள். இரண்டு அறைக் கதவுகளுக்கும் பரத நாட்டிய ஓவியம் அச்சிடப்பட்ட திரைச்சீலை. அது சாதாரண ஆசிரியரின் வீடாகவே தெரியவில்லை. நடராசனுக்கு வியப்பாகவே யிருந்தது.

அவன் வியப்பைக் கண்ட தங்கம்மா தானாகவே பேச்சைத் தொடங்கினாள்:

''என் மூத்தவன் சிவராசா சவுதி அரேபியாவில் வேலை செய்கிறான். எனக்குப் பொழுது போக்குவதற்கென்று இந்த பிளாக் அன் வைட் டிவியை வாங்கித் தந்துவிட்டுப் போனான்''

''பெரிய வீடு. நல்ல வீடு.'' தங்கம்மா சொன்னதற்குத் தொடர்பு இன்றி நடராசன் சொன்னான். அவன் கூறியதைக் கவனியாது தங்கம்மா தொடர்ந்தாள்:

''இது அவரும் பிள்ளைகளும் தோட்டத்தில் உழைத்துக் கட்டின வீடு. அவர் வாத்தி வேலையை விட்டுப் பென்ஷனாகி விட்டார். இப்ப, பயிர்ச் செய்கைதான் முழு நேரமும்.''

''1972 இன் பின் அம்மா ஆட்சியில் கிழங்கு, வெங்காயம், மிளகாய் இறக்குமதி தடை செய்தது யாழ்ப்பாணத்து விவசாயிகளுக்கு நல்ல லாபமே. எங்க அப்பாவால் தான் எதுவும் செய்ய முடியவில்லை''

நடராசன் சொன்னான்.

''அவர் தானே வருத்தக்காரனாகி விட்டார். அவருக்குக் கை உதவி எதுவும் கிடையாது. பிள்ளைகளை டாக்டர், இஞ்சினியர் என்று படிப்பித்து விட்டு ஏன் அவர் மண்வெட்டி தூக்கவேணும்.''

''நாங்கள் ஸ்ரெதஸ்கோப்பைத் தூக்கி எதையும் காண முடியவில்லை. எங்க வீடு இன்றும் அப்படியே கூரை வீடாகத் தானிருக்கிறது.''

647973
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராசன் சோர்வோடு கூறியது தங்கம்மாவிற்குச் சிறிது ஆச்சரியமா யிருந்தது.

'மூத்தவனுக்குக் கூரை வீடாக வைத்திருக்கவே விருப்பம். அப்போதுதான் வீடு குளிர்மையாயிருக்கும். அதனால்தான் ஓடு போடவில்லை என்று உங்கள் அம்மா சொல்லித் திரிந்தாள்.''

''அம்மா என் பண நிலைமையை மறைத்துத் தன் பெருமையைக் காப்பாற்றவே அப்படிச் சொல்லியிருப்பார், கொழும்பிலே வாழ்ந்து இரண்டு பிள்ளைகளைப் படிப்பிப்ப தென்றால் இன்றைய நிலையில் சம்பளமே போதாது. அது கிடக்கட்டும்; உன் பிள்ளைகளைப் பற்றிச் சொல்லு.''

''இரண்டாவது பொடியன் சத்தியன் படிப்பு வேண்டாம் என்று சொல்லித் தகப்பனோடு பயிர் செய்கிறான் இப்போது துலா உழக்கித் தண்ணீர் இறைக்க வேண்டிய தில்லை. அடுத்த கிணத்தடியில் நீர் இறைக்க மெஷின் போட்டிருக்கிறான். டிராக்டர் வைத்திருக்கிறான்''

''அதுதான் நல்ல முடிவு. புத்திசாலித்தனமானது. எல்லாமாக எத்தனை பிள்ளைகள்?''

' நாலு பெடியன்கள், ஒரு பெண், கமலம். அவளைக் கிழக்குப் பக்கத்திலே பாங்கில் வேலை செய்கிற பெடியனுக் குக் கட்டிக் கொடுத்தம்''

''மற்ற இரண்டு பெடியன்களும் எங்கே?''

தங்கம்மா சிறிது குரல் தழுதழுக்கக் கூறினாள்:

''மூன்றாம் பெடியன் அட்வான்ஸ் லெவல் பாஸ் பண்ணி யும் யூனிவசிட்டிக்குப் போக முடியவில்லை. புலிப்படையிலே சேர்ந்து தலைமறைவாகிவிட்டான். நாலாவது மகன் மகா தேவன் படித்து விட்டு வேலையில்லாமல் கொம்யூனிசம் பேசித் திரிகிறான்.''

தங்கம்மா ஒளிவு மறைவின்றிக் கூறினாள் அரசியலில் ஆர்வமுள்ள பிள்ளைகளைப்பற்றி அறிந்தபோது, நடராசன் தன் பிள்ளைகள் பற்றி உள்ளூர எண்ணிப்பார்த்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் மனைவி மகளை டாக்டருக்கும் மகனை இஞ்சினிய ருக்கும் படிக்க வைக்க எடுத்த முயற்சி பற்றி எண்ணினான். அரசியலுணர்வே இன்றி படிப்பு, விளையாட்டு, சினிமா, பார்ட்டிகள் என்று திரிவதையும் தான் உழைக்கும் பணம் யாவும் விரயமாவதையும் நினைத்துப் பார்த்தான்.

தங்கம்மா, 'இதோ வந்து விடுகிறேன்' என்று கூறி உள்ளே சென்றாள். நடராசன் எழுந்து நின்று மாட்டப் பட்டிருந்த படங்களை நோட்டமிட்டான். தங்கம்மாவின் மங்கிய கலியாணப்படம், மகளின் திருமணப்படம் போல ஒன்று வர்ணத்தில் இருந்தது. தமிழ்த் தலைவர் செல்வ நாயகத்தின் படத்தருகே இளைஞன் ஒருவனின் படம். ஊகிக்க முடியவில்லை. ஒரு அறைக் கதவின் வாசலின் மேலாக மார்க்ஸ் லெனின் மாவோவின் சரிந்த முகங்களைக் கொண்ட படம் தொங்கியது.

## 4

தங்கம்மா ஓர் எவர்சில்வர் தட்டில் கோப்பியும் இரண்டு குரக்கன் ரொட்டியும் கொண்டு வந்தாள். அவள் முன் போலவே அவன் கண்களுக்கு அழகாகவே இருந்தாள். சில வெண்மயிர்கள் வாரிக்கட்டிய மயிரிடை ஓடியபோதும் வயது தோற்றவில்லை. ஊதாவும் மஞ்சள் வண்ணமும் கொண்ட நைலெக்ஸ் சேலை ஒன்றைக் கட்டியிருந்தாள். கழுத்திலே கனமான தாலிக்கொடி. நெற்றியிலே குங்குமப் பொட்டு. முன்னைவிடச் சிறிது பருத்திருந்தாள். மினுமினுப்பான கருநிறமும் அகன்ற கண்களும் முன்போல யிருந்தன

''நீங்க பட்டர் போட்ட ரொட்டி சாப்பிடுவீர்களாக்கும். இந்தக் குரக்கன் ரொட்டியையும் சாப்பிட்டுப் பாருங்கள். அவருக்கும் மூத்தவனுக்கும் இதுதான் பிடிக்கும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வாத்தியாரையோ பிள்ளைகளையோ நான் காணவே யில்லை.''

ரொட்டியைச் சாப்பிட்டபடியே நடராசன் கேட்டான்.

''தோட்டத்திலிருந்து சாப்பாட்டிற்கு இனி வந்து விடுவினம்''

''என்ன இருந்தாலும், நீ நல்லாய் வாழுகிறதைப் பார்த்து எனக்குச் சந்தோஷந்தான். உனக்கும் ஊரோடு வாத்தியார் நல்ல மாப்பிள்ளையாகக் கிடைத்ததும் சந்தோச மாயிருக்கிறது.''

தன்னிலும் பார்க்க அவள் கணவனை உயர்வாக மதித்து நடராசன் கூறினான். அது மட்டுமல்ல. தான் எதிர்பார்த்த திலும் பார்க்க அவளின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருப்பதும் அவன் குரலில் ஒலித்தது.

''உங்கம்மா முழுமுச்சாக நின்று பேசி முடித்த கலியாணந்தான் இது.''

''அப்படியா, எனக்குத் தெரியாதே!''

நடராசன் சிறிது வியப்போடு சொன்னான்.

''உங்களுக்கு உங்கம்மாவின் சாதுரியம் ஒன்றும் தெரியாது. எங்கள் குடும்பத்திற்கும் எனக்கும் பெரிய நன்மை செய்ய முன் வந்ததாகக் காட்டிக் கலியாணத்தை அம்மா வுடன் பேசினார். அந்த நிலையில் நான் ஊமையானேன். எதுவும் கூற முடியாத நிலையில் அறையைப் பூட்டிவிட்டு இரவு பகலாக அழுதேன். கிணற்றில் விழுந்து தற்கொலை செய்யக்கூட நினைத்தேன். அதுஉங்க அம்மாவைப்பழிவாங் காது என்று அடிமனம் கூறியது. என் அழுகையைப்பார்த்து 'என்னடி என்னடி' என்று என் அம்மா கேட்டுக்கொண்டே யிருந்தா என்னால் வாயைத் திறக்கவே முடியவில்லை, கலியாணம் முடிந்து விருந்துச் சாப்பாடு போட்டு உங்கம்மா ஐம்பது ரூபா லஞ்சமும் தந்தாள் சாப்பிட்ட பின்னர் வாத்தி யார் கைகழுவப் போன பின் என்னிடம், 'அவரவர் தங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகுதிக்குமேலே ஆசைப்படக் கூடாது' என்று சொன்னாள். இன்றும் அதை நான் மறக்கவில்லை. எவ்வளவோ கஷ்டப் பட்டு நாங்கள் ஓரளவு தலை நிமிர்ந்து இந்த வீட்டைக் கட்டும்போது உங்க அம்மாவிற்குப் பொறுக்கவில்லை. 'நான் நல்ல கலியாணம் செய்து வைத்தேன். இப்ப அவளுக்குக் கண்கூட தெரியேல்லை' என்றுகூட சொல்லித்திரிந்தாள்''

தங்கம்மாவின் கண்கள் கலங்குவது போல இருந்தது. நடராசன் நெஞ்சு உறைந்துவிட்டது. சொத்துகளையும் விற்றுப்படிக்க வைத்தேன் என்று சொல்லுகிற அவள்தான் இப்படித் திட்டமிட்டுச் செய்திருக்கிறாள். நடராசன் தங்கம் மாவை மன்னிப்பது போலப் பார்த்தான்.

''இப்படி நடந்த விஷயம் ஒன்றுமே எனக்குத் தெரி யாது. இன்றுதான் முதன் முதலாகவே அறிகிறேன். விரும்பிக் கலியாணம் செய்ததாகவே அம்மா எனக்குக் கடிதம் எழுதினாள். நான் கூட நீ ஏமாற்றியதாக நினைத்து ஓரிருமாதம் தூக்கமின்றிப் படிக்க முடியாது கஷ்டப் பட்டேன்.''

''உங்களுக்கு எதுவும் தெரியாது என்று எனக்கும் தெரி யும். கலியாணங்களெல்லாம் நாங்கள் நினைப்பதுபோல நடந்து விடுவதில்லை. நடந்ததெல்லாம் பழைய கனவுகள் என்று மறந்து விடுகிறோம். ஆனாலும் சில நினைவுகள் இடையிடைமனத்தை அலைக்கலைக்கின்றன. இவற்றைப் பற்றியெல்லாம். இனிப் பேசிப் பயனில்லை. உங்க கலியாணம், பிள்ளைகள் பற்றியெல்லாம் நான் அடிக்கடி விசாரித்துக் கொள்வேன்.'' — வலிந்து சிரிப்பை வர வழைத்து நாணத்தோடு சொன்னாள்.

''கொழும்பிலே எல்லாம் ஒரு யந்திர வாழ்க்கை. எனக்கே இவையெல்லாம் சலித்து விட்டது. ஆனாலும் அவற்றையெல்லாம் உதறித் தள்ள முடியவில்லை.'' என்று கூறிய நடராசன் திடீரென, ''என் கடைப் பல்லில் இரண்டு பிடுங்கி விட்டேன். உண்மையாகவே தங்கம் உன் பற்கள் முன் போலவே அழகாக இருக்கின்றன'' என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் என் பல்லைப்பற்றி அடிக்கடி சொல்லுவதை நினைத்தே நான் வெற்றிலை கூடப் போடுவதில்லை"— வெட்கம் மேலிட்டபோதும் மனம் திறந்து சொன்னாள்.

"கொழும்பிலே ஓய்வேயில்லை. ஒரே வேலை. நிம்மதியே கிடையாது."

"கொழும்பிலே பெரிய சத்திர சிகிச்சை நிபுணர் என்றெல்லாம் கேள்விப்பட்டேன். வெளி ஆஸ்பத்திரிகளில் எல்லாம் உழைக்கலாமே"

"நான் மருத்துவ சங்கத்தில் இதற்கு எதிர்ப்பாக இருக்கிறேன். அதனால் அவ்வாறு தனியார் ஆஸ்பத்திரிகளுக்கு ஆபரேசனுக்குப் போவதில்லை."

ரொட்டியைச் சாப்பிட்டுக் கோப்பியைக் குடித்தபோதும் நடராசனின் மனம் நிதானமடையவில்லை. தன் தாய்பற்றித் தங்கம்மா கூறிய செய்திகள் அவன் நெஞ்சைக் குடைந்தன.

"உங்கள் தம்பி தம்பிராசன் இன்னும் நைஜீரியாவிலா? சுகமாயிருக்கிறானா?"

"சுகமாயிருக்கிறான். அம்மாவைக் கடைசி காலத்தில் காண முடியாதது அவனுக்கும் வருத்தமே"

"இன்னும் எத்தனை நாள் தங்கலோ"

"அம்மா போனதோடை அப்பா தனித்து விட்டார். தம்பியும் நைஜீரியாவிலிருந்து இப்போது வருவதாக இல்லை. நாலைந்து நாளில் அன்னத்துடனதான் எல்லா ஏற்பாடும் செய்து விட்டுப் போக இருக்கிறேன்."

"அவரையும் கொழும்புக்குக்கொண்டு போவதுதானே."

"அவரே விரும்ப மாட்டார். வீடு, தோட்டம் அழிந்து போய்விடும் என்று சொல்லுகிறார்."

"மகன் விரும்புவது சில வேளை மருமகளுக்குப் பிடிக்காது போகலாம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கம்மா சிறிது நளினமாகவே கூறினாள். கொழும்பில் பிறந்து வளர்ந்த நாகரிகமாக மாறிய அவன் மனைவி பற்றியும் அவள் அறிந்திருந்தாள்.

பவளம் படுக்கையாகிக் கிடக்கும்போதும் தங்கம்மாவும் போயிருந்தாள். நோயில துன்புற்ற போதும், தான் தவறு செய்ததாகச் சிறிதும் காட்டிக்கொள்ளவில்லை:

"மருமகள் கொழும்புக்கு வரும்படி எழுதினாள். நான் எப்பிடி இவரைத் தனிய விட்டுப்போறது."

என்னபொய் தங்கம்மா எதுவுமே பேசவில்லை. செத்த போதும், எட்டுக்கும் இருநாள் முன்னர் நடைபெற்ற அந்திரட்டிக்கும் ஊருக்கு முகமன் காட்டவும் நடராசனது பழைய நினைவுக்காகவும் சென்று வந்தாள். அடிமனத்தில் எரிந்த தீ முற்றாக அணையவில்லை. காலத்தால் புண் மட்டும் ஆறியிருந்தது.

"நீ சொல்வதிலும் உண்மை இருக்கிறது. இங்கு, கிராமத்தில் இருக்கும் மனிதாபிமான உணர்வு நகரங்களில் கிடையாது. நான் உனக்குப் பூசி மெழுகிப் சொல்ல வேண்டியதில்லை. அம்மாவையோ அப்பாவையோ அங்கு வைத்திருக்க என் மனைவி விரும்பவே மாட்டாள். அங்கு அப்பாவை அழைத்துச் சென்று அவர் மனத்தை நோகச் செய்வதிலும் பார்க்க இங்கேயே கஷ்டப்படவிடுவதே நல்லது. சொந்தக்காரரும் பார்த்துக் கொள்வார்கள்"

நடராசன் பெருமூச்செறிந்தான்.

"நாங்களும் அவரைக் கவனிப்பம்தானே. இப்ப ஒரு பிரச்சினையில்லை. அவர் தோட்டத்திற்கும் போய் வருகிறார் தானே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

தங்கம்மா கை கழுவத் தண்ணீர் எடுத்துவர குசினிப் பக்கம் சென்றாள். அவ்வேளை வேறு நபர் ஒருவர் அப்பக்கமாக நடமாடும் நிழல் தெரிந்தது. எவராவது வேலையாளாக இருக்கும் என எண்ணினான்.

செம்பில் தண்ணீரும் துவாயுடனும் தங்கம்மா வந்தாள். கை கழுவ நீரைக் கொடுத்து பின் துவாயை நீட்டினாள்.

''நான் சாகும் வரை உன்னை மறக்க மாட்டேன். உனக்கு எந்த வேளை என்ன உதவி வேண்டுமானாலும் தயங்காமல் கேட்கலாம்''

நடராசன் வார்த்தையில் உணர்ச்சி ததும்பியது.

''ஏங்களுக்கு இப்ப என்ன உதவி வேண்டிக் கிடக்கு. ஏதோ எனக்கு ஒரு குறையும் இல்லாமல் வாழ்கிறேன் ஒரு பிள்ளை ஆபத்தான பாதையில் போய் விட்டான் என்றுதான் கவலை''

''என்ன இருந்தாலும் உன் பிள்ளை துணிச்சல்காரன் தான்''

அவன் பேச்சை இடைமறித்து ஏதோ திடீர் நினைவு பெற்றவளாகத் தங்கம்மா சொன்னாள்:

''ஒரு உதவி முடிந்தால் செய்யுங்கோ. மகன்போன மாதம் இரவு மெயில் வண்டியில் பயணம் வந்தபோது வழியிலே இளம் பொடியன் ஒருவனைக் கூட்டி வந்தான். பரிதாபப்பட்டு இங்கே அழைத்து வந்தான். ஊமைப்பிள்ளை பேர், ஊரே தெரியாது. மூளைப்பிசகாயிருக்குமோ என்றும் தெரியாது. எல்லா வேலையும் சொல்லாமலே செய்கிறான். ஆர்பெத்த பிள்ளையோ தெரியாது. நீங்க ஒருகால் பார்த்து மருத்துவம் ஏதாவது செய்ய முடியுமானால் புண்ணியமாவது கிடைக்கும். மூத்தவன் பயணம் போகும்போது இந்தப் பிள்ளையைப் பற்றிக் கவலையோடு போனான்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவனை இங்கே அழைத்து வா தங்கம்."

தங்கம்மா உள்ளே சென்று இளைஞனைக் கையில் பிடித்து அழைத்து வந்தாள். தாடி மீசை கோரைப்புல் போல் வளர்ந்திருந்தது. வாராத தலைமயிர் தோளில் தொட்டுக்கொண்டிருந்தது. அரையில் சாரம், மிரண்ட பிதுங்கிய விழிகள். நிதானமற்ற பார்வை, பைத்தியம் என்று உடனே கணித்து விடத்தக்க நிலையிலேயே அவன் நின்றான்.

"தமிழ் இங்கிலீஷ் பேப்பர்களைத் தட்டிப் பார்க்கிறான். ரேடியோ பாட்டுகளை சிலவேளை இரசித்துக் கேட்கிறான். சாப்பாட்டில் அதிக ஆர்வமில்லை. சில செயல்களைப் பார்த்தால் படித்த நல்ல குடும்பப் பிள்ளைபோலத் தெரிகிறது-"

தங்கம்மா மேலும் விளக்கமாகக் கூறினாள். மனிதாபிமான உணர்வும் தாய்மை உணர்வும் அவளின் குரலில் மிளிர்ந்தன.

"தூக்கம் எப்படி?"

"யோசினைதான் கூட. இரவில் தூங்குவது மிகக் குறைவு. சில வேளை தூக்கத்தில் ஏ...ஏ...என்று சத்தம் போடுவான். கை கால்களை உதைத்துப் பரிதாபமாக அழுவான்."

நடராசன் அந்த வாலிபனின் கண்களையும் நாக்கையும் பார்வையிட்டான். நாக்கை நீட்டச் செய்வதே பெரிய சிரமமாகிவிட்டது.

"உன் பெயரென்ன?"

"ஊரென்ன?"

"அப்பா பெயரென்ன?"

நடராசன் சத்தமிட்டுக் கேட்டான். அவன் கையை விரித்துவிட்டுப் பின்னர் தலையையும் தொட்டுக் கையை விரித்தான்.

"நாங்கள் குமாரன் என்று பெயர் வைத்து கூப்பிடுகிறோம்."

இ—3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தங்கம், இதுபோன்ற நோய்கள்பற்றி எனக்கு அத்தனை பரிச்சயமில்லை. சைக்கியாற்றிக் டாக்டர் நண்பர்கள் இருக்கிறார்கள். கொழும்பு இதற்கு மிகவும் வசதியானதே. அழைத்துச் செல்வதுதான் சிரமமானது.''

''அவசரம் எதுவுமில்லை. ஓய்வாக ஏதாவது ஏற்பாடு செய்யலாம். யாழ்ப்பாணத்தில் தெரிந்த டாக்டர் இருந்தாலும் காட்டிப் பார்க்கலாம்.''

''டாக்டர் தர்மராஜா என்ற என் நண்பர் ஒருவர் இருக்கிறார். மாதம் ஒரு முறை யாழ்ப்பாணம் வருவார். அவரிடம் நான் சொல்லி விடுகிறேன்.''

''நல்ல பொடியன். அப்பாவிற்குத் துணையாக உங்கள் வீட்டிலேயே வைத்திருக்கலாம். நான் இங்கே சமாளித்துக் கொள்வேன். உங்கள் அப்பாவை நீங்கள் இல்லாதபோது அயலில் பார்த்துக்கொள்வது எனக்கும் ஒரு கடமைதானே''

அயலில் என்ற சொல்லிலே சிறிது அழுத்தம் தெரிந்தது.

அயல் என்பதிலும் பார்க்க, பழைய காதல் ஏற்படுத்திய பாசஉணர்வை நடராசன் உணர்ந்து கொண்டான். தந்தைக்கு ஓரளவு துணை இருக்கிறது என்பது அவனது கவலையை நீக்கியது.

தங்கம்மாவின் வார்த்தை நிதானமானது என்பதை அவன் அறிவான்.

''கூலி கொடுக்காது எவர் உழைப்பையும் நான் வாங்குவதில்லை.''

''அதுதான் சுகமான பின்னர் நீங்கள் சேர்த்துக் கொடுக்கலாமே. உங்கள்வீட்டுப் பெடியனென்றால் எந்த டாக்டரும் கட்டாயம் வந்து பார்ப்பார்கள்.''

மூத்தவன் தங்கள் வீட்டில் வைத்துப் பார்ப்பதை வலியுறுத்தியபோதும் மூன்றாவது மகன் அதை விரும்பவில்லை. அயல் வீட்டில் இருந்தால் இருவரையும் திருப்திப்படுத்தலாம் என்றும் உள்ளூர தங்கம்மா எண்ணினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராசன், குமாரனை தங்கள் வீட்டில் வைத்திருக்க ஒப்புக்கொண்டான்.

இருவரும் 24, 25 வருடங்களுக்குப் பின் நீண்டநேரம் கலந்து பேசியது, உணவுண்டது, ஒருவருக்கொருவர் உதவ முன்வந்தது யாவும் இருவர் மனத்திற்கும் ஆறுதல் தந்தது.

நீண்ட காலம் வடுவாக இருந்த புண் ஆறுவது போலிருந்தது.

## 6

நடராசன் புறப்படலாமா என்று எண்ணியபோது நல்லையா வாத்தியாரும் அவர்களுடைய இரண்டாவது மகன் சத்தியனும் வந்து சேர்ந்தனர்.

தங்கம்மா இருவரையும் அறிமுகப்படுத்தினான். நடராசன் எழுந்து மரியாதை செய்து உட்கார்ந்தான்.

''உங்களைக் கிணற்றடியிலும் அம்மாவின் சாவீட்டின் போதும் பார்த்திருக்கிறேன். அயலாக இருந்தபோதும் பேசிப் பழகாதது குறைதான்.''- நல்லையா வாத்தியார் சிறிது குற்ற உணர்வோடே கூறினார்.

''நாங்கள் கொழும்பிலேயே குடியேறிய மாதிரித்தான். அம்மா அப்பாவைப் பார்க்க இடையிடை ஓரிரு நாள் வந்து போவோம். உங்கள் வீட்டுக்கு வந்து பழகாதது என்தவறே. நான் செல்லம்மா வாத்தியாரின் வேதப் பள்ளிக் கூடத்தில் நாலாம் வகுப்புப் படிக்கும்போது தங்கம்மா அரிவரியில் சேர்ந்து பள்ளிக்குப் போகும்போது என் பின்னே ஓடி வருவாள்.''

நடராசன் சிறிய வயது நினைவைச் சிரித்துக்கொண்டே கூறினான்.

''பிறகும் ஓடி வந்திருப்பாள். உங்க அம்மாதான் விரும்ப வில்லை...''

வாத்தியாரும் சிரித்துக்கொண்டே கூறினார், நடராசனும் தங்கம்மாவும் ஒருவரை ஒருவர் பார்த்தனர். இவருக்கு விஷயமெல்லாம் தெரிந்திருக்குமோ என்று சபலப்பட்டனர்.

''என்ன கதை சொல்லுறீங்கள்?''

சிறிது உறைப்பாகத் தங்கம்மா கேட்டாள்.

''இல்லை. உங்கம்மாதான் எங்க கலியாணத்தைப் பேசி முடித்து வைத்தா. அப்போது என்னிடம். 'தங்கம்மா நல்ல பிள்ளை. என் மகனுக்கே கட்டி வைத்திருப்பன். அவன் படிப்பு முடியும் வரை வீட்டில் குமரை வைத்திருக்க பூரணம் விரும்பமாட்டாள்' என்று சொன்னார். அதுதான் நினைவு வந்தது.''

வாத்தியாரின் பேச்சு இருவருக்கும் ஓரளவு அமைதி தந்த போதும் நடராசனின் தாயின் பேச்சில் இருந்த வஞ்சனை கொண்ட குரூரத்தின் பயங்கரத்தையும் அறிந்த போது அடி மனம் குறுகுறுத்தது.

''இந்தப் பழங்கதையெல்லாம் இப்ப எதற்கு.''

மேலும், பழைய சம்பவங்களைக் கிளறவிடாது தங்கம்மா தடுத்தாள்.

பயிர்ச் செய்கை, உரம், கிருமிநாசினி, மின்சார விலையேற்றம்பற்றியும். கலந்து உரையாடி விடை பெற்றபின்னர் முற்றத்திற்கு வந்தனர். அவ்வேளை நாலாவது மகன் மகாதேவன் வந்தான். தங்கம்மா அறிமுகப்படுத்தினாள்.

''உன் நாடியும் கண்களும் அப்படியே உரித்து வைத்தபடி இருக்கிறது.''

நடராசன் மகாதேவனின் முதுகைத் தட்டியபடியே கூறினான்.

கிழங்கு, வெங்காயம், மிளகாயின் விலை வீழ்ச்சியைப் பற்றியும் விவசாயத்திற்கு வேண்டிய உரம். கிருமிநாசினி, டிராக்டர் உதிரிப் பாகங்களின் விலையேற்றம்பற்றியும் பேச்சு எழுந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அந்தக் காலத்தில் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைப்பதே பெரிய கஷ்டமாயிருந்தது. துலாவில் இரண்டு பேர் பட்டையைப் பிடித்து இழுக்க ஒருவர். இரவிரவாக இந்தப் பக்கத்துத் தோட்டக் கிணற்றடியெல்லாம் பாட்டுக் கூடக் கேட்கும்.''

நடராசன் தன் பள்ளி நாட்களின் அனுபவத்தைக் கூறினான்.

''உரமென்றால் எரு அல்லது செம்மறி ஆட்டுப் பட்டி தான். புகையிலைக்கு மட்டும் பச்சை உரமாக இலை, குழை தாட்போம்''

வாத்தியார் நடராசனைத் தொடர்ந்து கூறினார்.

''அப்போது சுன்னாகச் சந்தையை மட்டும் நம்பியிருந்தீர்கள். இன்று கொழும்புச் சந்தைக்கல்லவோ பயிர் செய்கிறோம்,''

மகாதேவனின் பேச்சில் புதுமை இருப்பதை நடராசன் கவனித்தான்.

''இந்த அரசாங்கம் உலகச் சந்தையுடன் எங்களையும் போட்டி போடும்படி வெங்காயம், மிளகாய், கிழங்கை இறக்குமதி செய்கிறார்கள். அதனால் விவசாயிகளெல்லோரும் இந்த அரசாங்கம் வந்த பின் பாதிக்கப்பட்டு விட்டார்கள்.''

வாத்தியாரோடு தோட்டத்திலிருந்து வந்த சத்தியன் கூறினான்.

''தமிழ் ஈழப் பிரச்சனைக்கு இதுதான் காரணமோ.''

மகாதேவனைப் பார்த்து நடராசன் கேட்டான்.

''இதுவும் ஒரு காரணந்தான். முன்னைய அரசாங்கத்தில் திடீரெனப் பணக்கார விவசாயிகளான அப்பா போன்றவர்களும் இதற்கு முழு ஆதரவு தருகிறார்கள்..''

மகாதேவன் கூறினான். நடராசன் தன் நினைவில் இருந்த வியப்பு ஒன்றை உதிர்த்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பள்ளி நாட்களில் விவசாயம் செய்தே நாங்களும் படித்தோம். இப்படியான பெரிய அரசியல் விழிப்பு அப்போது ஏற்படவில்லை."

"சென்ற பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளில் யாழ்ப்பாணத்து மக்களின் உற்பத்தி முறை முற்றாக மாறி விட்டது. அது மாறும்போது வாழ்நிலை, சிந்தனை எல்லாம் மாறவே செய்யும்."

"அப்படியென்றால்..."

மகாதேவனின் பதிலுக்கு நடராசன் விளக்கம் கேட்டான்.

"இப்பொழுது நீங்கள் சொன்னீர்களே துலா உழக்கி. பட்டையில் தண்ணீர் இறைப்பது, எருவை உரமாகப் போடுவது, மண் வெட்டியால் கொத்துவது எல்லாம் மாறி பம்செட், ரசாயனப் பசளை, கிருமி நாசினி, டிராக்டர் எல்லாம் வந்துவிட்டது. கூலி விவசாயிகளே எல்லாம் செய்கின்றனர். இவையெல்லாம் பெரிய மாற்றங்களில்லையா. பொருளாதார மாற்றங்கள் அரசியல் மாற்றங்களைத் தேடவே செய்யும். முன்னர் மண்வெட்டி தோளில் போட்ட அப்பாவே இப்பொழுது மணவெட்டியைத் தூக்குவதே மதிப்புக் குறைவு என்று நினைக்கிறார்."

"இவன் தோட்டம் போவதே அவமானம் என்று கருதி. படித்து விட்டுத் தெருச் சுத்துகிறான்"

சத்தியன் தம்பியைப் பற்றிச் சொன்னான்.

"அப்பா என்னைக் கூலி அடிமை உத்தியோகத்திற்காகப் படிப்பித்தார். உயர் கல்விக்குப் போக முடியவில்லை. உத்தியோகமுமில்லை."

"தரப்படுத்தலால்தான் நீயும் பாதிக்கப்பட்டாயா?" நடராசன் கேட்டான்

"அப்படிக் கூறுவது தவறு. இவ்வாண்டு 1,60,000 மாணவர் உயர்கல்விக்காகப் பரீட்சை எழுதினர். மருத்துவ, தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள் யாவற்றிலும் 4,500

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்களே உள்ளன. நூற்றுக்கு நாலுபேருக்கே அனுமதி கிடைக்கிறது. நான் அந்தத் தொண்ணூற்றாறில் ஒருவன். தமிழ் ஈழம் கேட்பதற்கு எத்தனையோ காரணங்கள் இருக்க அண்ணா போன்றோர் தரப்படுத்தலால்தான பிரிவு கேட்கிறோம் என்று தவறான பிரசாரம் செய்கிறார்கள்''

''இவன் பொய் சொல்லுகிறான். பல காரணங்களுடன் தமிழ் மாணவர் பாதிக்கப்படும் இந்தக் காரணத்தையும் கூறுகிறோம்''

சத்தியன் மகாதேவனைப் பார்த்து மறுத்தான்.

எப்படியாயினும் புதுமையாகப் பேசும் மகாதேவனைப் பார்த்து நடராசன் கேட்டான்.

''தமிழ் ஈழம் கேட்பதற்குரிய மற்ற காரணங்களைச் சொல்லு. நானும் அறிய விரும்புகிறேன்''

''அண்ணனுக்கும் நான்தான் சொல்லிக் கொடுக்க வேண்டும். வரலாற்றுக் காலம் தொடக்கம் இலங்கைத் தமிழர் தனிச் சமூகமாகத் தனிப் பிரதேசத்தில் வாழ்கின்றனர். மொழி, சமயம், கலாச்சாரத்திலும் சிங்கள மக்களிலும் வேறுபட்டுள்ளனர். இவற்றைத் தனித்துவமாகப் பேணி வளர்ப்பதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. அது மனித நீதியானதே.

பெரும்பான்மை இனத்தவரின் ஆட்சியால் தாம் பாதிக்கப்படுகிறோம் என்ற உணர்வு ஏற்படின் தம் அரசியலைத் தாமே தீர்மானிக்கத் தமிழர்க்கு உரிமை உண்டு. பெரும்பான்மை இனத்தவர் தம் இராணுவம், பொலிஸ் ஆதிக்கத்தை நிறுவி, சிறுபான்மையினருக்காக மட்டும் என பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் போன்றவற்றை ஏற்படுத்தி ஆளுவதை மனித உரிமை வேண்டும் எவராலும் ஏற்றுக் கொள்ள முடியாது''

'நீ கூறும் நியாயங்கள் நல்லாயிருக்கின்றன. யாழ்ப்பாணத் தமிழர்தான் தமிழ் ஈழம் கேட்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள்.''

நடராசன் சொன்னதும் சத்தியன் முன்வந்து பதில் கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அப்படியல்ல போராட்டம் இங்கு உக்கிரமடைந் திருப்பது உண்மையே. விரைவில் மறுபகுதிகளுக்குப் பரவும். சிங்கள எல்லைப் புறங்களில் பாதிக்கப்பட்ட மக்களெல்லாம் கொதிப்படைந்துள்ளனர். பொறுத்துப் பாருங்கள்.''

''மலைநாட்டுத் தமிழர் அதாவது இந்தியத் தமிழரின் நிலையென்ன?''

நடராசன் கேட்டான்.

''இனக் கலவரங்களால் பாதிக்கப்பட்டவர்கள், தமிழ் பகுதிகளில் குடியேறி விவசாயிகளாகவும் கூலி விவசாயிகளா கவும் வாழ்கின்றனர்.''

சத்தியன் கூறினான்.

''மலை நாட்டில் பெருந்தோட்டங்களில் உழைக்கும் அனைவரையும் ஏற்றுக் கொள்வீர்களா?''

நடராசன் தொடர்ந்து கேட்டான் சத்தியனே பதில் கூறினான்.

''ஆமாம். எல்லேலேரையும் ஏற்றுக்கொள்வோம்.''

''மகாதேவன், நீ என்ன சொல்கிறாய்?''

''எல்லோரும் தமிழ்ப் பகுதிக்கு வரப்போவதில்லை. பெருந்தோட்டங்களில் கூலி அடிமைகளாகவே அவர்கள் சுரண்டப்பட்டு வாழ்கிறார்கள். சென்ற நூற்றாண்டிலேயே வந்து குடியேறினார்கள். சிங்களவர்களது பகுதியிலேயே வாழ்கின்றனர். சோஷலிசப் புரட்சி ஒன்றினாலேயே மலையகத் தமிழர்களுக்கும் விடுதலை கிடைக்கும். ஈழத் தமிழர்களுக்கும் விடிவு கிடைக்கும் என்று நாம் சொல்லு கிறோம்.''

''அண்ணன்மார்களது போராட்டத்தில் நீ சேர மாட் டாயா?''

நடராசன் மகாதேவனைப் பார்த்துக் கேட்டான்.

''அந்த அரசியல் தீவிரவாதம். எமக்கு ஒத்துவராது.''

மகாதேவன் கூறினான். அவன் முதுகைத் தட்டிவிட்டு நடராசன் 'போய் வருகிறேன்' என்று கூறியபடி திரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யினான். யாவையும் ஆர்வத்துடன் கேட்பதுபோல் தங்கம்மா அருகே குமாரனும் அங்கு நின்றது வியப்பாயிருந்தது.

''என் பிள்ளைகளையும் குடும்பத்தையும் பார்த்தீர்களா? இங்கே நாள்தோறும் சண்டையே''

தங்கம்மா சொன்னதற்கு,

''நல்ல சந்தோசம். உயிருள்ள குடும்பம்.'' என்று பதில் கூறிக்கொண்டே நடராசன் நடந்தான்.

## 7

நடராசன் ஒழுங்கையால் சுற்றி வீட்டை நோக்கி நடந்தான். அது கையால் தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவதுபோல் இருந்தது.

கிணற்றுப் பக்கமாகத் தங்கம்மா வீட்டிற்குப் போகக் கூடியதாக முன்னர் போதிய வழி இருந்தது. வேலியடைக் கிற வல்லியை வரச்சொல்லி ஒரு நாளில் கிணற்றின் விளிம்பு வரை தாயார் வேலியை அடைக்கச் செய்தாள்.

தங்கள் காதல்தான் கிணற்றைக் கடக்க முடியாது வேலியடைத்தற்கு அடிப்படைக் காரணம் என்பதை நடராசன் தற்போதுதான் முழுதாக உணர்ந்தான். அவனுக்கு நல்ல நினைவிருந்தது. ஒரு நாட்காலை தன் தாய்க்கும் தங்கம்மாவின் தாய் பூரணத்திற்கும் இடையில் வேலிச் சண்டை நடைபெற்றது: ஆடு வேலியைப் பிய்த்து இப் பக்கம் வந்துவிட்டது. அதைச் சாட்டாக வைத்துத் தாய் யுத்தம் தொடங்கினாள்.

''உன் ஆடு தான் எங்கள் பயிரையெல்லாம் மேய்ந்து விட்டது''

பூரணம் குற்றம் சுமத்தினாள். தன் தாயைத் தானும் பூரணத்தைத் தங்கமும் இழுத்துச் சென்றது அவன் நினைவில் வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றே, கிணற்றையே பிரிப்பது போல் வேலியும் போடப்பட்டது.

மறுநாட்காலை குளிக்கும்போது நடராசன் தங்கத்திடம் கூறியது அவன் நினைவில் பளிச்செனத் தோன்றியது.

''இந்த வேலிகளை வெட்டி என்றோ ஒரு நாள் ஒரே காணியாக்கத்தானே போகிறோம்.''

அர்த்த புஷ்டியாக அவன் சொன்னபோது தங்கம் சிரித்தாள். ''ஏன் சிரிக்கிறாய்? இது பகிடியா?''

''அல்ல, பரந்த சிந்தனை''

மீண்டும் அவள் சிரிப்பைத் தாங்காது, வாளித் தண்ணீரைக் கிள்ளி அவள் மேல் வீசினான்.

தங்கத்தின் முகம், ஜாக்கெட், பாவாடைச் சட்டையெல்லாம் நனைந்துவிட்டது. அவள் ஒரு பொய்க் கோவத்தோடு உதட்டைக் கடித்தபடி அவனைப் பார்த்தாள். பெரிய கண்கள் இன்னும் மலர, பின்னர் சொன்னாள்:

''ஆசையைப் பாருங்கோ, புலியைச் சுடும் முன்னர் தோலுக்கு விலை பேசுகிறார்''

''யார் அந்தப் புலி''

''இரண்டுகால் புலி''

அன்று அவள் குறிப்பிட்டது நடராசனுக்கு முற்றாகப் புரியவில்லை. தாயின் எதிர்ப்பையும் நடவடிக்கைகளையும் அவள் முற்றாக அறிந்திருந்தும் முழுமையாக அவனிடம் கூறவில்லை.

தாயின் சுய நலத்தையும் சாதுரியமாகப் பகை தீர்க்கும் சுபாவத்தையும் தற்போதே அவனால் முழுமையாக உணர முடிந்தது.

எல்லா விஷயங்களிலும் அவள் அவனுக்கு வேலியிட்டிருந்தாள். அதனைத் தாண்ட கொஞ்சமும் துணிவற்றவனாக அவனை வளர்த்து விட்டாள். ''இராசா, எனக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்திலே ஒரு ஆசையுமில்லை, நீ படித்து பெரிய மனிஷனாகி என்னுடைய எண்ணங்களையெல்லாம் நிறைவேற்ற வேண்டும். இது ஒன்றுக்காகத்தான் கல்லிருக்கும் இடமெல்லாம் கையெடுத்துக் கும்பிடுகிறேன்.'' சொல்கிற போதே கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக ஓடும். இவன் பதைத்துப் போய் விடுவான். தாயின் கண்ணீரைத் துடைத்து விடுவான்.

முன்னர் தாய் காட்டிய பாசம் அவன் கண்களை மறைத்திருந்தது.

தாயோடு மட்டுமென்ன, தன் கொழும்பு மனைவியோடு ஒப்பிடும் போதும் தங்கம் எத்தனை பரந்த உள்ளமும் இரக்க சுபாவமும் உள்ளவள்.

வேதப் பள்ளிக் கூடத்தில் அவள் முதலாம் வகுப்பில் படிக்கும்போது அவன் ஐந்தாவதில் படித்தான். அதுவே அங்கு படித்த கடைசி ஆண்டு. பவளமும் செல்லம்மா வாத்தியாரும் பழைய சிநேகிதிகள். அதனாலேயே நடராசனும் அங்கு படிக்க நேர்ந்தது.

அந்தப்பள்ளியில் மட்டுந்தான் அவ்வேளை தாழ்த்தப்பட்ட வகுப்பை சார்ந்த பிள்ளைகளும் படித்தனர். மொத்தம் ஆறு கிறிஸ்தவ ஆசிரியர். முத்தையா வாத்தியார் மட்டுமே ஆண். காலையில் கிறிஸ்தவ ஜெப வழிபாட்டுடனேயே, செல்லம்மா வாத்தியார் பாடசாலையை ஆரம்பிப்பார்.

'பரமண்டலங்களிலிருக்கின்ற எங்கள் பிதாவே ... எங்கள் அப்பத்தைத் தாரும்'' யாவரும் கண்மூடிக் கொண்டு நிற்பர்.

இன்னும் சிலவரிகள் ஞாபகமுள்ளன. தங்கத்திற்கு நல்ல ஞாபக சக்தி. சிலமாதங்களிலேயே மனனம் செய்து விட்டாள். இருவரும் ஒன்றாக வீடு திரும்பும்போது அவள் அவற்றை அவனிடம் ஒப்புவிப்பாள்.

காலையில் கிறிஸ்தவ வழிபாடு நடைபெறும் மண்டபத்தின் கிழக்குப் புறத்தில் அரைவட்டக் கூடுபோன்ற சிறு கட்டடம். அதன் நடுவே ஒரு பின் புறச் சுவரில் கிறிஸ்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதர் சிலுவையில் அறை பட்ட ஓவியம். சிலுவையை நெருங்காது விட்டப் பகுதியில் மரத்தால் கிராதி அடிக்கப் பட்டிருந்தது. விளையாட்டாக அதன் மேலால் பாய்ந்து உள்ளே செல்ல மூன்றாம் வகுப்பில் படித்த வியாகேசன் முனைந்தான். மகேசன் என்பவன் தடுத்தான்.

''சிலுவைக்குக் கிட்ட நீ போகப்படாது''

சாதியையும் சுட்டியே மகேசன் சொன்னான்.

''இது என்ன சாமி''

வியாகேசன் சொல்லிக் கொண்டே உட்புறம் உமிழ்ந்து விட்டான்.

மகேசன் உடனே செல்லம்மா வாத்தியாரிடம் கோள் மூட்டி விட்டான்.

மறு நாள்காலை பிரார்த்தனை முடிந்ததும் எல்லோர் முன்னிலையிலும் வியாகேசன் அழைக்கப்பட்டான். குண்டிப் புறத்தில் பிரம்பால் ஆறு அடி. செல்லம்மா வாத்தியாரே அடித்தாள். அவன் துடித்துப்பதைத்து 'அம்மா' என்று கத்தினான். அவ்வேளை தங்கம்மாவின் கண்களில் நீர் அரும்பியதை அவன் கண்டான்.

மாலையில் வீடு திரும்பும் போது தங்கம் அவனைக் கேட்டாள்:

''யேசுநாதர் பாவம் செய்பவர்களையெல்லாம் மன்னிப்பார் என்று பிரார்த்தனையின்போது வாத்தியார் சொன்னாரே, ஏன் இன்றைக்கு அந்தப் பெடியனைப் பிரம்பால் அடித்தார்?''

அவனுக்கு உடனே என்ன பதில் கூறுவதென்று தெரியவில்லை. சிறிது நேரம் கழித்து நடராசன் சொன்னது மீண்டும் அவன் நினைவில் வந்தது.

''கடவுளால் தான் மன்னிக்க முடியும், மனிதர்களால் அல்ல''

தங்கம்மாவின் உயிர்த்துடிப்புள்ள குடும்பம் நடராசனைக் கவர்ந்திருந்தது. அதோடு தன் யந்திரமயமான குடும்பத்தை எண்ணிப் பார்த்தான். கொழும்பு நகரில் ஓய்வற்ற வேலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைச்சல், நிம்மதியின்றி பற்றுப் பாசமற்று வாழும் வாழ்வு நுகர் பண்டங்களுக்காகவே உயிர் வாழ்வது போன்ற வெறியாட்டம். வீம்பிற்காகவும் நுகர் பண்டப் பெருமைக்காகவும் வாழும் மனைவி. வளர வளர தூரமாகப் பிரிந்து செல்லும் பிள்ளைகள், சமுதாய உணர்வு குன்றிய நிலையில் பிள்ளைகளும் நுகர் பண்டங்களைப் பற்றியே அரட்டை அடிக்கின்றனர். மனைவி தன்னைப் போலவே பிள்ளைகளை உருவாக்கப் பார்க்கிறாள். என்ன போலி வாழ்வு.

தன் பிள்ளைகளோடு தங்கம்மாவின் பிள்ளைகளை ஒப் பிட்டபோது மனங்குன்றிப் போனான்.

## 8

---

நடராசனின் தந்தை பொன்னம்பலம் தோட்டத்தி லிருந்து வந்து விட்டார். விதவையான அவர் அண்ணன் மகள் அன்னம்மாவே வீட்டில் சமையலைக் கவனித்தாள். பவளம் படுக்கையாக விழுந்த நாள் தொடக்கம் அவள் அங்கு உதவி வந்தாள்.

இருவரும் நடராசனைப் பிட்டு சாப்பிடும்படி அழைத் தனர். தங்கம்மா வீட்டில் குரக்கன் ரொட்டி சாப்பிட்டது பற்றியும் குமாரனைப் பற்றியும் அவன் கூறினான்.

''தங்கம்மா தங்கமான பிள்ளை, உன் அம்மாவிற்குத் தான் அவள் பித்தளையாகத் தெரிந்தாள்.''

யாவையும் தந்தையும் அறிந்து ஊமையாக இருந்தார் என்பதையும் நடராசன் அறிந்து கொண்டான்.

முதுமை அவருக்கு தங்கம்மாவை நினைவூட்டியிருக்க வேண்டும். கொழும்பு மருமகள் எப்படியோ? எப்படியிருப் பினும் தூரத்துத் தண்ணீர் ஆபத்துக்கு உதவாது. நடராசன் சிறுவனாக இருக்கும்போது அடிக்கடி அப்பா கூறும் பழ மொழி அது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலையில் குமாரனை சத்தியன் அழைத்து வந்தான். அவன் பிதுங்கிய கண்களும் மிரண்ட பார்வையும் அப்படியே இருந்தன. அவன் கொண்டு வந்த ஒரு சில உடைகள் தவிர நடராசனும் ஒரு சேட்டும் சாரமும் கொடுத்தான். சேட் அளவாக இருக்கவில்லை. படுக்குமிடம், குசினி, கக்கூஸ் யாவையும் அன்னம் காட்டினாள் அவன் அசைவுகள் யாவும் யந்திர மனிதனின் அசைவாகவே இருந்தது.

மேலும் மூன்று நாட்கள் வரை நடராசன் அங்கு தங்கும் திட்டம் இருந்தது. அன்று தங்கம்மா, தன் தந்தை மூலம் அறிந்த புதிய செய்திகள் அவன் மனத்தை அலைத்தன. தன் தாயைப் பற்றி அவன் கொண்டிருந்த நல்லெண்ணம் சிறிது சிறிதாக மங்கத் தொடங்கியது. இத்தனை விஷயங்கள் எல்லாம் நடக்கும்போது நான் வெறும் அப்பாவியாக இருந்தேனே என்று எண்ணினான். இரவில் நீண்ட நேரம் படிப்பது தங்கத்தை இரவில் வேலியோரமாகச் சந்திப்பது எல்லாம் அவன் நினைவில் வந்து இன்ப துன்ப உணர்வுகளை ஏற்படுத்தின.

இரவு படுத்தபடி கொழும்பிலிருந்து கொண்டு வந்து மருத்துவ சஞ்சிகைகளைப் புரட்டிப் பார்த்தான். தங்கம்மாவின் அகன்ற கண்களும், பளிச்சிட்ட பற்களும், சிரிப்பும் அவன் கண் முன்னே தோன்றின. அன்றைய சம்பவங்கள் புதிய உண்மைகள் யாவும் மனத்திரையில் ஓடின. பற்களின் வெண்மையைக் காப்பாற்ற வெற்றிலை போடாது விட்டாள் என்பதை எண்ணியபோது ஒரு கணம் சிரிப்பு வந்தது. முதல் காதல் அழியாதது. ஆழமானது என்று எண்ணிக் கொண்டான். தாயின் செயல்கள் எத்தனை மனத்தாங்கலை ஏற்படுத்தின என்று எண்ணிய நிலையில் தூக்கமே வரவில்லை. புரண்டு படுத்தான். கண்ணயர்ந்தபோது நடுநிசியாகி விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"டாக்டர் நடராசன், டாக்டர்"

இரவு இரண்டரை மணியிருக்கும். படலையடியிலிருந்து படலையைத் தட்டும் சத்தத்தைத் தொடர்ந்து குரல் ஒன்று கேட்டது.

வராந்தாவில் படுத்திருந்த நடராசன், எழுந்து மின் சுவிட்சைத் தடவிப் போட்டு விட்டுச் சாரத்துடனும் சேட்டுட னும் படலையை நோக்கி நடந்தான். குமாரனும் எழுந்து நின்று படலையை நோக்கிப் பார்ப்பது தெரிந்தது.

"யாரது" என்று கேட்டபடி படலையைத் திறந்தான். ஒருவரும் உள்ளே நுழையாததைப் பார்த்து விட்டுப் படலைக்கு வெளியே வந்தான்.

முதுகில் ஓர் இரும்புக் குழாய் பட்டது போலிருந்தது.

"சத்தம் போடவேண்டாம். எங்களுடன் வாருங்கோ"

மற்றொரு இளைஞன் வலது கையைப் பிடித்து முன்னே இழுத்தான்.

"நீங்கள் யார்? எங்கே, எதற்காக நான் வரவேண்டும்."

அதிர்ச்சியடைந்து நடராசன் கேட்டான்.

"ஒரு நோயாளியைக் காப்பாற்ற வேண்டும்."

"உடை மாற்றிக்கொண்டு வருகிறேன்"

"அதெல்லாம் அவசியமில்லை. முன்னே நடவுங்கள்."

மங்கிய பின் நிலவில், அந்த இளைஞனின் முகம் போலவே கரகரத்த குரலும் உக்கிரமாகவே இருந்தது.

நடராசனை பழைய எ. 40 காரில் முன்புறத்தில் ஏற்றி னர். ரிவால்வருடன் வந்தவன் அவர் அருகே உட்கார்ந் தான்.

அவருடன் உரையாடிய மற்றவன், காரை ஓட்டினான். இருவரும் வயது இருபது இருபத்திரண்டு மதிக்கத் தக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்கள். அரும்பிய மீசையும், தாடியும். அவர்கள் சேட்டிலிருந்து வியர்வை நெடி வீசியது.

கார் ஒழுங்கை வழியே சுடலைவரை சென்று செம்பாட்டுப் புறத்துப் பழைய தெரு வழியே வேகமாக ஓடியது.

சில நிமிடங்களே கழிந்திருக்கும். செம்பாட்டுப் புறத்தில் தனி வீடு ஒன்று. அங்கு கார் வந்து நின்றது. நடராசனை அழைத்துக்கொண்டு அச்சிறு வீட்டுக்குள் நுழைந்தனர்.

அங்கு ஒரு மரக் கட்டிலில் தோளிலிருந்து இரத்தம் வழிய இளைஞன் ஒருவன் அனுங்கிக்கொண்டு கிடந்தான். மற்றும் இரு இளைஞர்கள் அவனைக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

''தோளில் பாய்ந்திருக்கும் குண்டை எடுத்துவிட்டு மருந்து போட்டு டிரெஸ் செய்ய வேண்டும்.''

கையில் ரிவோல்வர் வைத்திருந்தவன் ஆணையிடும் தோரணையில் கூறினான்.

''ஆபரேசன் செய்தல்லவா எடுக்க வேண்டும். இங்கே என்ன வசதியிருக்கிறது? எங்கேயாவது தனியார் ஆசுபத்திரிக்காவது எடுத்துச் செல்ல முடியாதா?''

''அது முடியாதபடியால் தானே உங்களை அழைத்து வந்தோம். பேசிக்கொண்டிருக்க நேரமில்லை. விடியுமுன் நாங்கள் வேறு இடத்திற்குப் போக வேண்டும். வெந்நீர் இருக்கிறது. ஆபரேசனுக்கு வேண்டிய ஆயுதங்கள் உள்ளன. ஹறியப்''

''அனிஸ்தீசியா?''

''மயக்கவேண்டியதில்லை. சத்தமிடாமல் நாங்கள் பார்த்துக்கொள்வோம்...ம், நேரத்தை வீணாக்க வேண்டாம்.''

மற்றொருவன் கூறினான்

''நாங்கள் யாரென்று தெரியுமா?''

காரோட்டி வந்தவன் சொன்னான்.

நடராசன் கைகளைப் பெட்ரோலில் கழுவினான். உரிய கருவிகளை எடுத்து வெந்நீரில் போட்டான். ஒருவன் ஒளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்க பல்ப்பை காயப்பட்டவனின் தோள் மீது பிடித்துக் கொண்டான். காயத்தை வெட்டும் போது வழிந்தோடும் இரத்தத்தை காரோட்டி வந்தவன் துடைத்துவிட்டான்.

காயமடைந்தவன் கத்திக் கொண்டேயிருந்தான். 15 நிமிடங்களில் குண்டின் சன்னத்தை நடராசன் எடுத்துத் தண்ணீரில் போட்டான்,

மற்றோர் 10 நிமிடத்தில் அவர்கள் கொடுத்த மருந்து களை வைத்துத் தோள் பட்டையை பண்டேஜ் செய்து விட்டான். அவன் மேலும் சத்தமிடமுடியாது சோர்வில் மயங்கி விட்டான்.

நடராசனின் முகம், உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டி யது. பத்து ஆண்டு காலமாக நாளொன்றிற்கு மூன்று.நாலு ஆபரேசன் செய்த அனுபவம் அவனுக்கு உண்டு. ஆயினும் இப்படியான சூழலில் இத்தகைய ஆபரேசன் ஒன்றை அவன் செய்தது கிடையாது. கைகளைக் கழுவி வியர்வையைத் துடைத்துக் கொண்டான்.

' நாங்கள் ஒரு மணி நேரத்தில் வேறு இடத்திற்குப் போக வேண்டும், நண்பனின் நிலை எப்படி?''

நடராசனிடம் ஸ்டெதஸ்கோப்பை கார் ஓட்டி வந்தவன் நீட்டினான்.

நாடியைப் பிடித்துப் பார்த்த பின் ஸ்டெதஸ்கோப்பைக் காதில் மாட்டி பேஷன்டின் நெஞ்சில் வைத்துப் பரிசோதித் தான்.

''ஓகே, கவலைப்பட எதுவும் இல்லை, நினைவு வந்ததும் ஏதாவது சூடாகக் குடிக்கக் கொடுக்கலாம்.''

நடராசன் நால்வரது முகத்தையும் ஒரு தடவை நோட்ட மிட்டுப் பார்த்தான். 'என் நிலை என்ன?' என்று கேட்பது போலிருந்தது அப் பார்வை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

"டாக்டர் நீங்கள் செய்த உதவி யாவுக்கும் நன்றி, இந்த உதவியை நாங்கள் என்றும் மறக்கமாட்டோம். வற்புறுத்தி அழைத்து வந்தமைக்கு மன்னிப்புக் கோருகிறோம்."

ரிவால்வருடன் அழைத்து வந்தவன் கூறினான். அவனை இடைமறித்து நடராசன் சொன்னான்:

"நன்றி எதுவும் வேண்டியதில்லை ஆபத்தில் இருக்கும் இளைஞன் ஒருவனின் உயிரைக் காப்பாற்றுவதில்தானே உதவினேன்."

"அது அல்ல டாக்டர் பிரச்சினை ஓர் உயிரைக் காப்பாற்றுவதன் மூலம் நீங்கள் ஒரு பாரிய குற்றம் செய்திருக்கிறீர்கள். எமக்காகச் சிங்கள அரசால் இயற்றப்பட்ட பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் இருக்கிறதே அதன்படி நீங்கள் கைது செய்யப்படலாம். அதன்கீழ் பிணையில் வெளியே வர முடியாது. யூரர் இன்றியே விசாரணை நடத்தி ஏழு வருட சிறைத் தண்டனை தருவார்கள்."

தான் செய்வது தவறு ஏன்பதைத் தெரிந்திருந்த போதும் அதன் பலா பலன்களை அறிந்தபோது நடராசன் நெஞ்சு ஒரு கணம் அதிர்ந்தது. இப்படி ஒரு பயங்கரமான சட்டமா எனத் திகைத்தபோது ரிவால்வரோடு அழைத்து வந்தவனே தொடர்ந்தான்:

"தென்னாபிரிக்காவில் மட்டுமே இத்தகைய பயங்கரமான சட்டம் இருக்கிறது. எம் சட்டவிதிகள் அதனிலும் பார்க்க மோசமானவை."

"நானாக முன் வந்து இக்குற்றத்தைச் செய்யவில்லையே"

"அது உண்மையே, ஆகவே நீங்கள் தப்புவதற்கு ஒரே வழி இருக்கிறது, பொலிஸ் நிலையத்திற்குச் சென்று நடந்தவற்றைச் சொல்லுவது. எம்மைக் கண்டுபிடிக்க, அடையாளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டி நிரூபிக்க, பின்னர் பொலிசாருக்கு உதவி செய்வது. நாங்கள் இவற்றிலிருந்து தப்புவதற்கு உங்களை இப் பொழுதே சுட்டுவிடலாம். நாம் அப்படிச் செய்யமாட்டோம். உங்களை இப்பொழுதே வீட்டில் அழைத்துச் சென்று விடுவோம். நீங்கள் விரும்பியவாறு செய்யலாம்,''

நடராசனை முன்போலவே காரில் ஏற்றினார். தற்போது கையில் ரிவால்வர் இருக்கவில்லை. கார் கரடு முரடான அந்தப் பழைய தெரு வழியே வேகமாக ஓடியது.

ஒழுங்கை முகப்பில் அவரை இறக்கிவிட்டனர்.

''மிக்க நன்றி, டாக்டர்.''

''தாங்யு''

வழமையாகப் பழகிய வார்த்தை அவன் உதட்டிலிருந்தும் வந்தது,

கார் திரும்பி மீண்டும் வேகமாக ஓடியது.

நடராசன் படலையைத் திறந்து உள்ளே நுழைந்த போது முன்னர் போட்டிருந்த மின்விளக்கு அப்படியே எரிந்து கொண்டிருந்தது.

குமாரன் ஒரு மூலையில் நின்று கொண்டிருந்தான். நடராசனைக் கண்டதும் தன் பாயில் படுத்துக்கொண்டான்.

நடராசன் மின்விளக்கை அணைத்துவிட்டுப் படுத்துக் கொண்டான், தூக்கமே வரவில்லை.

வாழ்க்கையில் என்றும் அனுபவித்திராத அதிர்ச்சி, 'நாளை என்ன செய்வது' என்பதே அவன் பிரச்சனையாயிருந்தது. ஒரு புறம் அத் தீவிரவாத இளைஞர்கள். மறுபுறம் தன் மனைவி பிள்ளைகள். மனம் இரண்டாகப் பிரிந்து போராடியது.

எங்கே, எப்படி அந்த இளைஞன் காயம் பட்டான்? அவர்களைக் கேட்பதே தவறு. கேட்டிருப்பினும் சரியான பதில் கூறியிருக்க மாட்டார்கள்.

இவர்களுக்கு நான் லீவில் வந்து இங்கே நிற்பது எப்படித் தெரிந்தது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நால்வரில் ஒருவன் இக்கிராமத்தவனாக இருக்க வேண்டும். வீடு வந்து தன்னைக் கடத்திச் சென்ற இருவரில் ஒருவன் ஊரவனாக இருக்க வேண்டும். அல்லது என்னை எப்படித் தெரிய முடியும்? இரவில் என் வீட்டைத் தேடிப் பிடிக்கமுடியும்?

தங்கம்மாவின் மூன்றாவது மகன் தலைமறைவாகப் போய் விட்டதாக அவள் சொல்லியிருந்தது நினைவில் வந்தது ஒருவன் அவனாக இருக்கலாம். சில வேளை காயமடைந் தவனா? அவனே தம் வீட்டின் அயல் வீடு என்று குறிப்பு. பெயர் விபரம் சொல்லி அனுப்பியிருக்கலாம்.

தங்கம்மா அறிந்தால் எவ்வாறுதுடிதுடித்துப் போவாள். மகனின் பெயரை அவள் சொல்லவில்லை! படம் ஏதாவது வைத்திருப்பாளா? காலையில் கேட்டுப் பார்க்க வேண்டும். அவள் மகனாயிருந்தால், நான் இந்த உதவியாவது அவளுக் காகச் செய்ய முடிந்தது மனத்திருப்தியே பழைய காதல் பழக்கத்தை வைத்து நான் சுயநலமாகப் பார்க்கிறேனா? யார் பெத்த பிள்ளையானாலும் ஒன்றுதானே.

சுயநலம் கருதாது உயிரைப் பயணம் வைத்து ஏதோ சாதிக்க முயல்கிறார்கள்.

எல்லோராலும் இது முடியுமா?

என் பிள்ளைகளை இவ்வாறு இழக்க என்னிடம் துணிவு உள்ளதா? என் மனைவி விரும்புவாளா? தங்கம்மா தாங்கிக் கொண்டுருக்கிறாளே.

இந்த நிலையில் நானாகப் பொலிசிடம் சென்று காட்டிக் கொடுக்க முயல்வதா? என் உயிர், மானம், மரியாதை, யாவை யும் பணயம் வைப்பதா? நாளை நான் கைது செய்யப் பட்டால்...!

குமாரன் ஒருவனே நான் வெளியே சென்றதையும் உள்ளே நுழைந்ததையும் கண்டிருக்கிறான். அவன் ஊமை. பைத்தியம். அப்பா இன்னும் குறட்டை விட்டுத் தூங்கு கிறார் எனக்குத் தூக்கம் வர மாட்டாதா?

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை வேகமடைந்து வியர்த்துக் கொட்டியது. களைப்பு உடலைச் சோர்வடையச் செய்ய அப்படியே அயர்ந்துவிட்டான்.

## 11

எவரோ உரத்துப் பேசும் சத்தமும் ரேடியோ ஓசையும் மென்மையாகக் கேட்டன.

நடராசன் விழித்தெழுந்த போது ஏழு மணியாகி விட்டது அத்தனை நேரம் அவன் என்றும் தூங்கியதில்லை.

பிரஷ்ஷை எடுத்துக்கொண்டு முற்றத்தில் இறங்கினான்.

''என்ன தம்பி ஒரே தூக்கம். கோப்பி ஆறுகிறது'' என்று கூறியபடியே அன்னம் அவன் அருகே வந்தாள், தன் குரலைத் தாழ்த்தியபடிக் கூறினாள்.

''தம்பி, செய்தி கேட்டியா? ராத்திரி காரையூர் பொலிஸ் ரேசனை பெடியங்கள் தாக்கி அங்கிருந்த துப்பாக்கிகளெல்லாம் எடுத்துக் கொண்டு போய் விட்டார்களாம். நாலு பொலிஸ்காரரை சுட்டுப்போட்டார்களாம். இரண்டு பேர் படுகாயமாம். ஒரு பெடியனும் செத்துப் போனானாம். மற்றொரு பொடியனுக்குப் பலத்த காயமாம். செத்த பெடியனையும் காயப்பட்டவனையும் தூக்கிக் கொண்டு பெடியங்கள் ஆயுதங்களுடன் ஓடிவிட்டார்களாம். தெருவெல்லாம் மிலிட்டரியும் பொலிசும்.''

பிரஷ்ஷைக் கையில் பிடித்தபடி திகைப்போடு நடராசன் செய்தியைக் கேட்டான். அவன் இரத்தம் குளிர்ந்துகொண்டு வந்தது எதுவும் பேசாது அன்னம் தொடர்ந்து கூறிய செய்தியைக் கேட்டுக்கொண்டிருந்தான்.

மேலே ஹெலிகாப்டர்களின் ஓசை.

''ஆர்மி கமாண்டரும் இன்ஸ்பெக்டர் ஜெனராலும் கொழும்பிலிருந்து விசாரணைக்கு வந்திருக்கிறார்கள் என்று ஆறரை மணி ரேடியோ செய்தியில் சொன்னார்கள்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் வானத்தைப் பார்த்தனர், குமாரனும் முற்றத்திற்கு வந்து நின்று பார்த்தான்.

"இது அவர்கள் வருகிற ஹெலிகொப்டராகத்தான் இருக்க வேண்டும்."

அன்னம் சொல்லிவிட்டு நடராசனைப் பார்த்தாள்

"இது என்ன தம்பி சேட்டில் இரத்தக் கறை"

நடராசனும் அப்போதுதான் கவனித்தான் சமாளித்துக் கொண்டே பதில் கூறினான்.

"நேற்று சேவ் எடுக்கும்போது பிளேட் வெட்டிவிட்டது"

திருப்தியான பதிலாக அன்னத்திற்குத் தோன்றவில்லை.

மனம் அமைதியற்ற நிலையில் காலைக்கடன்களை முடித்தான் விரைவாக உடைகளை மாற்றிக்காலை உணவை முடித்துக் கொண்டு யாழ்ப்பாணம் புறப்பட்டான். ஒன்பது மணிக்கு முன் தன் டாக்டர் நண்பனைப் பார்ப்பது அன்றைய அவன் ஒரு திட்டமாயிருந்தது. அந்த டாக்டரே தாயாரைக் கடைசி நாட்களில் கவனித்தவன். செத்த வீட்டிற்கு வந்தபோது அவனைப் பார்த்து நன்றி கூற நேரம் கிடைக்கவில்லை.

சந்தியில் சென்று வாடகைக் கார் ஏற்பாடு செய்து போகலாம் என்ற எண்ணத்துடன் நடராசன் வெளியே புறப்பட்டான்.

ஒழுங்கையால் வந்து தெருவில் ஏறியபோது தெருவெல்லாம் வெறிச்சோடிக் கிடந்தது சன நடமாட்டமேயில்லை,

அங்கொன்றும் இங்கொன்றுமாக ஓரிரு கார்களும் சயிக்கிள்களும் மட்டும் ஓடின.

சந்திக்குச் சென்றபோது இரு டாங்கிகள் நின்றன. துப்பாக்கிகளை நீட்டியபடி இராணுவத்தினர். அவற்றைப் பார்த்தபோது உடம்பெல்லாம் சிலிர்த்தது. இது என்ன யுத்தமா? எங்கோ ஒரு பொலிஸ் நிலையம் தாக்கப்புட்டதனால் இளைஞர்களுடன் யுத்தப் பிரகடனமா? பெரியபடையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருக்கும் அரசு சில இளைஞர்களின் தீவிர வாதத்திற்கு இத்தனை நடவடிக்கையா? மக்களைப் பயமுறுத்தவா இந்நடவடிக்கைகள்.

பெரிய டிரக்கில், சுழல் துப்பாக்கிகளுடன் இராணுவ வீரர்கள், தெருவில் வரும் கார், வான், லாரிகளை நிறுத்தி யாவரையும் பயமுறுத்துவது போல இறங்கச் செய்து பரிசோதனை நடத்தினர்.

சந்தியிலுள்ள கடைகளெல்லாம் அடைக்கப்பட்டிருந்தன. வாடகைக் கார் எதுவுமே இல்லை. பஸ் ஏதாவது வரும் என ஒரு சிலர் காத்து நின்றனர். இப்படியான சம்பவங்களுடன் பழகிய நிலை. தங்கள் அலுவல்கள் பற்றிய பேச்சு, இடையிடை இரகசிய குரலில் நடந்த விஷயங்கள் பற்றிய யூகம்.

சம்பவங்களைப் பார்த்தபோது இரவு நடந்த நிகழ்ச்சிகளால் அடி மனத்தை ஓரளவு பயம் கவ்விய போதும், ஒரு விதத் துணிச்சலும் அவன் மனத்தில் எழுந்தது.

அதிர்ஷ்ட வசமாக டாக்சி ஒன்று யாழ்ப்பாணம் நோக்கி திரும்பிக் கொண்டிருந்தது. அதை இடை மறித்து முன் சீட்டில் ஏறிக் கொண்டான்.

பஸ் நிலையத்தில் நின்றவர்களையும் நடராசன் பார்த்தான். வழியில் இறங்குவதாக இருவர் பின்சீட்டில் ஏறிக் கொண்டனர். டாக்சியில் ஒரே அமைதி மரண அமைதி.

ஒரு மைல் தூரம் கழிந்ததும் அடுத்த சந்தி வந்தது. இராணுவத்தினரால் டாக்சி மறிக்கப்பட்டு யாவரும் இறக்கப்பட்டனர். உட்புறம், டிக்கி யாவும் பரிசோதிக்கப்பட்டது.

மூவர் மேலும் துவேஷத்தோடு பார்வை. ஒருவனின் கையில் வள்ளிக்கிழங்கு. தூரத்தில் போட்டு குத்திக் காட்டும்படி ஆணையிட்டனர். ஏதாவது குண்டாயிருக்குமோ என்ற அச்சம். மீண்டும் யாவரும் ஏறிக் கொண்டனர். டாக்சி புறப்பட்டது.

"நீங்கள் கொழும்பா அல்லது வெளிநாடோ"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரதி பொறுமை இழந்த நிலையில் கேட்டான். அவனுக்கு ஐம்பது வயதுக்கு மேலாக இருக்கும் நரை மயிர். உரமான உடல்.

'கொழும்பு'

''உங்கள் பாடு பரவாயில்லை நாங்கள் இங்கே வாழ முடியாது.''

''ஏனப்படிச் சொல்லுகிறாய். எல்லோரும் வாழ்கிறார்கள் தானே''

நடராசன் பேச்சிற்காகச் சொன்னான்.

''இப்பப் பார்த்தீர்கள்தானே. இனி அடுத்த சந்தி. இப்படி ஒரு சம்பவம் நடந்தால் இரண்டு மூன்று நாளைக்கு இதே தொல்லைதான். இவர்கள் செய்யும் கொடுமையால் தான் எல்லோரும் பெடியங்கள் செய்வதுதான் சரி என்று ஆதரவுதர வந்து விட்டார்கள்''

சாரதியின் பேச்சில் வெறுப்பும் ஆத்திரமும் கொப்பளித்தது.

''இலையானைப் பிடிக்க இத்தனை படையா? இதெல்லாம் எங்களைப் பயமுறுத்தி, கரைச்சல் தந்து அடக்கும் வேலை ராத்திரி பொலிஸ் நிலையத்தைத் தாக்கினவர்கள் இந்த டாக்சியில் இந்தப் பட்டப் பகலில் வருவார்களா? இவர்கள் இந்தச் சின்ன விஷயத்தை அறியாத முட்டாள்களா? நீங்கள் இந்த நேரத்தில் ஏன் பட்டணம் போறீர்கள்?''

''ஏன் போகப்படாதா?''

''இராணுவத்தார் வந்து தெருவில் நிற்பவர்களை அடிப்பார்கள் என்ற பயத்தில் எவரும் பட்டணம் வரமாட்டார்கள். இது வழமையாக ஒன்று இரண்டு நாட்களுக்கு அப்படியிருக்கும். பிறகு யாவும் வழமையாகிவிடும், மற்றொரு சம்பவம் நடைபெறும் வரை.''

''உங்களுக்கெல்லாம் பழக்கமாகி, வழமையாகி விட்டது போல் தெரிகிறது''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி பழகிவிட்ட சம்பவம்போல சாரதி கூறினான்.

"இராத்திரியில் டாக்சி ஓட்டுவதையே நிறுத்தி விட்டோம். இரவு நேரங்களில் மிலிட்டரி தவிர தெருக்களில் நடமாட்டமே குறைந்துவிட்டது. இரவில் சினிமா பார்க்கும் பெண்களையே காண முடியாது. இன்றைக்கெல்லாம் ஆறு மணிக்குமேல் ஒருவரையும் தெருவில் பார்க்க மாட்டீர்கள். ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது போல இருக்கும். நீங்களும் வேளைக்கே ஊருக்குத் திரும்பி விடுங்கள்."

"என்னப்பா, லன்வே, ஒரேவழி என்று போட்டிருக்கிற தெருவால் ஓட்டுகிறாயே, பொலிசாரிடம் அகப்படப் போகிறாய்"

"நீங்க வெளியூர்க்காரர். இன்றைய யாழ்ப்பாணத்தைப் பற்றி உங்களுக்கு ஒன்றும் தெரியாது. இங்கே தெருவில் பொலிசரையே பார்க்க முடியாது. டிரவிக் பொலிசே கிடையாது. ஏனென்றால் தனியாகப் பொலிசார் திரிவதில்லை. போகிறதானால் ஜீப்பில் துப்பாக்கியுடன்தான் போவார்கள். அது போக, சிறிய குற்றங்கள் பற்றி அவர்கள் தற்போது கவலைப்படுவதில்லை. கொலை, பெரிய கொள்ளை என்றால் மட்டுமே பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாட்டிற்குப் போவார்கள். அவர்களும் கவனிக்க முயல்வார்கள் மற்ற முறைப்பாடுகளுக்குச் சென்றால் சிலவேளைகளில் துரத்தி விடுவார்கள். பொலிசார் பயத்திலே ஸ்டேசனைச் சுற்றிக் கோட்டை கட்டி உள்ளே இருக்கிறார்கள்."

சாரதியின் கதைகள் நடவடிக்கைகள் யாவும் நடராசனுக்கு விசித்திரமாக இருந்தன.

"உன் கதையைக் கேட்டால் யாவும் யுத்த காலம் போல இருக்கிறது."

"யுத்தகாலம் போல என்ன, இது யுத்த காலந்தான். இரண்டாவது யுத்த காலம் கூட என் நினைவில் இருக்கிறது. அப்போதுகூட இப்படி நாங்கள் பயந்து வாழ்ந்ததில்லை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மூன்றாம் குறுக்குத் தெரு. மறந்துவிடாதே."

"டாக்டர் ராசநாயகம் வீடுதானே. எனக்கு வீடே நல்லாய்த் தெரியுமே."

## 12

டாக்டர் இராசநாயகம் வீட்டில் இல்லை. ஆஸ்பத்திரிக்கு அவசரமாக அழைக்கப்பட்டுவிட்டார் என மனைவியார் சொன்னார். நடராசன் ஆஸ்பத்திரிக்குச் சென்றபோது அவன் ஆபரேசன் தியேட்டரில் என்று கூறினர். தியேட்டரின் வெளியே பல ஜீப்புகள், பொலிசார், இராணுவத்தினர் நின்றனர். குறிவைத்த துப்பாக்கிகளோடு வாகனங்களை அரண்மைத்து நின்றனர். ஆபரேசன் தியேட்டர் வாசலிலும் அவ்வாறே.

"இரவு காயம்பட்ட பொலிசாருக்கு ஆபரேஷன் நடைபெறுகிறது. அரை மணி நேரத்தில் வந்துவிடுவார்."

ஆபரேசன் தியேட்டரிலிருந்து அமைதியற்று, பரபரப்புடன் வெளியே வந்த நர்ஸ் ஒருத்தி நடராசனிடம் சொன்னாள்.

இத்தனை தூரம் வந்து நண்பரைப் பார்க்காது செல்வதா? அரை மணி நேரம் அங்கு உலாவி நேரத்தைக் கடத்தலாம் என எண்ணினான்.

இரவு நடந்த நிகழ்ச்சியோடு தற்போது நடைபெறும் ஆரவாரங்களை எண்ணிப் பார்த்தான். எத்தனை கவனம்? எத்தனை ஏற்பாடுகள்? எத்தனைச் செலவு?

"எந்த விஷயத்திலும் மக்கள் எவர் பக்கம் நிற்கிறார்கள் என்பதையே நாம் முதலில் கவனிக்க வேண்டும்"

மகாதேவன் முதல் நாள் கூறியது நடராசனின் நினைவில் வந்தது.

கொழும்பிலேயே குடியேறி விட்டதால் அவனைத் தெரிந்தவர் யாரும் அங்கில்லை. ஒரு மர நிழலில் சிறிது நேரம் சிந்தித்தபடி உலாவினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பி வந்தபோது ஆபரேசன் தியேட்டரிலிருந்து டாக்டர்கள், நர்சுகள் வெளியே வந்தனர்.

ஆபரேசன் உடைகளைக் களைந்து உடை மாற்றும் அறை வாசலுக்குச் சென்றான். அவனைக் கண்ட டாக்டர் இராசநாயகம் ஓடி வந்தான்.

"அதிக நேரமாக நிற்கிறீர்களா?"

"இல்லை, இப்போதுதான் வந்தேன்"

இருவரும் பேசியபடி வெளியே வர ஏ.எஸ்.பி. ஒருவன் ஓடி வந்து டாக்டரிடம் ஆபரேசன் பற்றிக் கேட்டான்.

'ஆபத்தில்லை' என்று கூறியபடியே அவனைப் பொருட்படுத்தாது இராசநாயகம் நடராசனுக்கு அதிக மதிப்பு அளிப்பதுபோல கூட்டிக்கொண்டு நடந்தான். 'யார் இந்தப் புதிய மனிதர்' என மற்றவர்கள் ஆர்வமாகப் பார்த்தனர்.

"எமர்ஜென்சி ஆபரேஷன். இராத்திரி நடந்த செய்தி அறிந்திருப்பீர்கள். மூன்று பொலிஸ்காரருக்கு ஆபரேசன் செய்தோம் ஒரு கேஸ் மட்டும் ஆபத்தாயிருக்கிறது."

"கேள்விப்பட்டேன். பொலிஸ் மிலிட்டரி தெருவெல்லாம் தடல்புடலா யிருக்கிறது."

"இவர்களைப் பற்றியல்ல அவர்களது கவலை. காயப்பட்ட பெடியன் ஒருவன் இங்கே வந்தானா, எங்கே ஆபரேசன் செய்யச் சென்றான் என்பதுதான்."

நடராசனின் நெஞ்சு ஒரு கணம் சிலிர்த்தது. அந்த இரகசியத்தை எவரிடமும் சொல்வதில்லை என்று முன்னரே அவன் திட சங்கற்பம் கொண்டிருந்தான். நடராசன் எதுவுமே பேசவில்லை. இராசநாயகம் தொடர்ந்தான்:

"எல்லா ஆஸ்பத்திரிகளிலும் விசாரணை நடாத்தி காவல் போட்டிருக்கிறார்கள். பெடியங்கள் என்ன மடையர்களா, காயப்பட்டவனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போக'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசநாயகம் தன் அறைக்கு நடராசனை அழைத்துச் சென்றான். டீ வரவழைத்து இருவரும் அருந்தினர்.

''இங்கே நடைபெறும் சம்பவங்களெல்லாம் எனக்கு விசித்திரமாகவும் வியப்பாகவும் இருக்கிறது. தற்போதுதான் இவற்றைப் பற்றித் தீவிரமாக யோசிக்க வேண்டியிருக்கிறது. நீங்கள் இந்தப் பிரச்சனை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?''

''நீங்கள் கொழும்பில் பாதுகாப்பாக வாழ்கிறீர்கள். இங்கே அடுத்த நிமிஷம் என்ன நடக்கும் என்பது தெரியாமல் நாங்கள் வாழ்கிறோம். பொலிசாரே பொது நூலகத்தை எரித்ததை எல்லோரும் அறிவர். அன்றிரவு இதே ஆஸ்பத்திரியில் நான் இருந்தேன். இதே அளவு தூரத்திலேயே உதவிப் பாதுகாப்பமைச்சர், மந்திரிசபை காரியதரிசி இராணுவ பொலிஸ் அதிகாரிகள் தங்கியிருந்தனர். ஒரு லட்சம் புத்தகங்கள் எரிந்ததை அவர்கள் அறியாமலில்லை. இந்த உணமையை அரசாங்கம் கூட ஏற்றுக் கொண்டது. பொலிசார் மேல் எவ்வித நடவடிக்கையும் அரசாங்கம் எடுக்கவில்லை மே மாதம் ஊரடங்குச் சட்டம் போட்டு அப்பாவிகளையும் சுட்டுக்கொன்றார்கள். அபிவிருத்திச் சபை தேர்தலின்போது தேர்தல் அதிகாரிகளே பெட்டிகளைக் கொண்டு போய்விட்டார்கள் நடந்த ஊழல்களுக்கு என்ன நடவடிக்கை எடுத்தார்கள்?''

டாக்டர் இராசநாயகத்தின் முகம் ஆத்திரத்தால் சிவந்திருந்தது. நடராசன் அவரைப் புரிந்துகொண்டான். சிறிது நேர மௌனம்.

''இவையெல்லாம் பாராளுமன்றத்திலேயே பேசப்பட்டுப் பத்திரிகைகளில் வந்தன. செய்திகளையெல்லாம் நானும் படித்தேன். இந்தத் தேசிய இனப் பிரச்சனை பற்றி என்ன எண்ணுகிறீர்கள் என்பதைத்தான் கேட்கிறேன்.''

''அதைப் பற்றி என் கருத்து விசித்திரமானது. இங்குள்ள தமிழர்கள் தாம் சிறுபான்மையினர், சிங்களவர் பெரும்பான்மையினர் நசுக்கிறார்கள் என எண்ணுகிறார்கள். ஆனால் சிங்கள மக்களோ வேறு விதமாக எண்ணுகிறார்கள். தம்மைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு பான்மையினர் என்றும் தமிழர்கள் பெரும்பான்மையினர் எனவும் நம்புகிறார்கள். தமிழ் நாட்டிலுள்ள நாலரைக்கோடி தமிழர்கள் மட்டுமல்ல; இந்தியாவிலேயுள்ள எழுபது கோடி மக்களும் தமிழர்களைச் சார்ந்துள்ளார்கள். நாம் ஒரு கோடி சிங்களவர் இலங்கையில் சிறுபான்மையினராக வாழ்கிறோம் என அவர்கள் நினைத்துக் கொள்கிறார்கள். இந்த அச்சத்தாலேயே தமிழ் ஈழம் பற்றிப் பேச விடுவதே ஆபத்து என எண்ணுகிறார்கள்.''

''உங்கள் கருத்து மிகப் புதுமையாகவே இருக்கிறது''

இராசநாயகம் களைத்திருந்தான். அதை நடராசன் அறியாமலில்லை.

தாயாருக்கு நோயின் போதும் இறுதி நாட்களிலும் உதவியதற்கு நன்றி கூறிவிட்டு விடைபெற்றுக் கிராமத்திற்குப் புறப்பட்டான், நடராசன்.

## 13

நடராசன் சாப்பிட வந்தபோது குமாரனும் அங்கு நின்றான். சாப்பாடு பரிமாறும்போது அன்னம் சொன்னாள்:

''இராத்திரி நடந்த சம்பவத்தில் செத்த பெடியனோ, காயம் பட்டவனோ தன் மகனாயிருக்குமோ என்று தங்கம்மா தவிச்சுப் போய் இருக்கிறாள் நீங்கள் ஒரு தடவைபோய் அவளுக்கு ஏதாவது ஆறுதல் சொன்னால் நல்லது.''

நடராசனுக்குச் சாப்பாட்டின் சுவையே தெரியவில்லை. இரவு நடந்த சம்பவமும் யாழ்ப்பாணத்தில் கண்டவையும் சிந்தனையைக் குழப்பின. அங்கு அவன் அறிந்தளவில் பெடியன் ஒருவன் இறந்தது என்பதில் உண்மையில்லை; அது பொலிசார் தம் வீரத்தைப் பறைசாற்றுவதற்குச சொல்லப்பட்ட கற்பனை.

''உனக்குத் தங்கம்மாவின் அந்தப் பெடியனைத் தெரியுமா?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நல்லாய் தெரியுமே''

''அவனுக்கு என்ன பெயர்?''

''முகுந்தன், நல்ல சுறுசுறுப்பான பெடியன்''

''எப்படி இருப்பான்?''

''நீங்கள் எங்கோ அவனைக் கண்ட மாதிரிக் கேட்கிறீர்கள்? உங்கள் உயரம் இருக்கும். பொது நிறம். அரும்பிய மீசை தாடி. கண்ணும் நாடியும் தங்கம்மாவின்ரையை உரிச்சு வைச்சபடி.''

இரவில் பார்த்த முகங்களோடு அவற்றைப் பொருத்திப் பார்க்க முயன்றான். மங்கிய ஒளியில் பார்த்த முகங்கள் கனவில் தோன்றியவை போல நினைவில் தெளிவாக உருப் பெறவில்லை.

உடல் சோர்ந்திருந்தபோதும் பகலில் படுத்தாலும் தூக்கம் வராது என்பதை நடராசன் உணர்ந்தான். ஒருவித அமைதியின்மையும் பதட்டமும் காலையிலிருந்தே தன்னுள் இருப்பதையும் அறிந்திருந்தான்.

தங்கம்மா கவலைப்படுவதில் அர்த்தமில்லை. அவளைச் சமாதானப் படுத்த வேண்டும். மனம் உந்திக்கொண்டிருந்தது.

## 14

---

தங்கம்மா வீட்டிற்கு நடராசன் வந்தபோது வாத்தியாரும் மகாதேவனும் ஹாலில் உட்கார்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்தனர். நடராசனை வரவேற்று உட்காரச் செய்து விட்டுத் 'தங்கம்' என்று வாத்தியார் குரல் எழுப்பினார்.

சோர்ந்த முகத்தோடு அறையிலிருந்து வந்த தங்கம்மா நடராசனைக் கண்டதும் கலங்கிய கண்களுடன் வலிந்து சிரித்தாள்.

'காலையிலிருந்து தண்ணீரும் குடிக்காமல் கிடக்கிறாள்; தன்ரை பிள்ளைக்குத்தான் ஏதோ நடந்ததென்று கற்பனை பண்ணுகிறாள்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாத்தியார் முறைப்பாட்டைச் சொன்னார்.

''பத்து மாதம் வயித்திலை சுமந்து பெத்து வளர்த்த வளுக்கல்லவோ பிள்ளையின் அருமை தெரியும்.''

தங்கம்மா பதிலளித்தாள். சேலைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

நடராசன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குத் தான் சென்றதையும் அங்கு நடந்தவை பற்றியும் விரித்துக் கூறினான். தான் பொலிசாருடன் பழகிய டாக்டர் நண்பர் மூலம் அறிந்த செய்திகளையும் விரிவாகச் சொன்னான்:

''பெடியன் ஒருவன் இறந்தது என்பது பொய். குண்டு பட்டுக் காயமடைந்தான் என்பதுதான் உண்மை.''

தங்கம்மா அவன் கூறியதை ஆர்வமாகக் கேட்டாள்.

''வேறு எவரும் அறியப்படாது. இது மிக இரகசியமாக இருக்க வேண்டும் எனக்கு டாக்டர் நண்பர் சொன்னது. அந்தப் பெடியனுக்கு இராத்திரியே யாரோ ஒரு டாக்டர் ஆபரேசன் செய்து மருந்து கட்டி விட்டாராம். சுகமாக எங்கோ கூட்டிக் கொண்டு போய்விட்டார்களாம்.''

நடராசன் நாசூக்காகச் சொல்லி முடித்தான். தங்கம்மாவைத் திருப்திப்படுத்துவதே அவன் நோக்கமாக இருந்தது. அவள் மனத்தில் இருந்த பாதி பாரமும் குறைந்தது.

''நீங்கள் வந்து என் நெஞ்சில் பால் வார்த்தீர்கள்''

''இனியாவது ஏதாவது குடி அல்லது சாப்பிடு. டாக்டருக்கும் ஏதாவது குடிக்கக் கொண்டு வா''

தங்கம்மாவிற்கு வாத்தியார் ஆணையிட்டார்.

''ஏதோ காயப்பட்ட பிள்ளை பிழைத்து விடவேண்டும்''

''அது உன் பிள்ளையா?''

வாத்தியார் கேட்டார்.

'ஆர் பெத்த பிள்ளையென்றாலும் அது தப்பி விட வேணும்''

நடராசன் தங்கம்மாவின் பரந்த இரக்க சுபாவத்தை மீண்டும் எண்ணிப் பார்த்தான். பள்ளி நாட்களில் அந்தத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்த்தப்பட்ட சிறுவனுக்குச் செல்லம்மா வாத்தியார் சிலுவையின் முன் அடித்த போது அவள் கண்கள் கலங்கியது அவன் நினைவில் மீண்டும் தோன்றியது

தங்கம்மா குசினிப் பக்கமாகத் திரும்பினாள்.

''நீ சாப்பிட்ட பிறகு கொண்டு வந்தால்தான் நான் கோப்பி குடிப்பேன்''

நடராசன் சொன்னான். தங்கம்மா உள்ளூறச் சிரித்தபடியே குசினிக்குச் சென்றாள்.

அவ்வேளை அறையில் தூங்கிக் கொண்டிருந்த சத்தியன் வந்து சேர்ந்தான்.

''என்ன மகாதேவன், நீ அண்ணனின் செயலுக்கு எதிரி போல் இருக்கிறது பேசாமல் இருக்கிறாய்''

நடராசன் மகாதேவனைப் பார்த்துச் சொன்னான்.

''இத்தகைய தீவிரவாதங்களை நாம் ஆதரிப்பதில்லை''

''திடீர்த் தாக்குதல்தான் கெரில்லாயுத்த முறை என்று என் நண்பர் ஒருவர் கூறினார். பயிற்சி பெற்ற நூறு பெடியங்களுக்காக அரசாங்கம் மூவாயிரம் ராணுவத்தினரையும் இரண்டாயிரம் பொலிசாரையும் வைத்திருக்கிறது என்று வாதிட்டார்''

''தேசிய இன விடுதலை என்ற பெயரில் ஒரு முதலாளித்துவ அரசை ஏற்படுத்துவதே இவர்களது குறிக்கோள். நாம் அதை விரும்பவில்லை''

மகாதேவன் சொன்னான்.

''உங்கள் குறிக்கோள் என்னவோ?'' நடராசன் கேட்டான்.

''சோஷலிசப் புரட்சியோடு தேசிய இனப்பிரச்சனையையும் தீர்ப்பதே எங்கள் குறிக்கோள்''

''அதிலும் இரண்டு கோஷ்டி இருக்காமே. சிங்கள மக்களோடு சேர்ந்து புரட்சி நடத்துவது என்று ஒருகோஷ்டி, தமிழ் மக்களே தனித்துப் புரட்சியை நடத்த முடியும் என்ற கோஷ்டி நீ எந்தக் கட்சி?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மக்கள் என்று நீங்க சொல்லுவதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். தொழிலாளர், விவசாயிகளால் மட்டுந் தான புரட்சி நடத்த முடியும். உலகத் தொழிலாளர்களே ஒன்று படுங்கள் என்ற மார்க்ஸ் லெனினின் கோட் பாட்டையே ஏற்றுக் கொள்வேன். சிங்கள, தமிழ் தொழி லாளர் விவசாயிகள் ஒன்று திரண்டே புரட்சியை நடத்த முடியும். அதன் மூலமே தேசிய இனப் பிரச்சினையைத் தீர்க்க முடியும்."

மகாதேவன் கூறினான். நித்திரைச் சோம்பலுடன் யாவையும் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த சத்திய னுடைய போக்கையும் நடராசன் அறிய விரும்பினான்.

"என்ன சத்தியன், நீயும் இந்தக் கட்சியா?"

'இவன் சிங்களத் தொழிலாளர் ஆதரவு தருவார்கள் என்று சும்மா சொல்லுகிறான். சிங்களத் தொழிற்சங்கங் களே இன்று பலமற்றவையாகி விட்டன. சிங்கள இராணுவம் பொலிசைப் போட்டு தமிழர்களை அடக்கி ஆட்சி செய் கிறார்கள். கடைகளை எரித்தார்கள். பத்திரிகை நிலையங் களுக்குத் தீ வைத்தார்கள். பொது நூல் நிலையத்தை எரித்து எம் கலாசாரத்தையே அழிக்க முயல்கிறார்கள். இளைஞர்களைச் சுட்டுத்தெருவில் போடுகிறார்கள். சிங்களத் தொழிலாளர் ஏதாவது எதிர்ப்பு, ஆர்ப்பாட்டம் நடத்தி னார்களா?'

"இடதுசாரித் தலைவர்கள் எல்லோரும் எதிர்ப்புத் தெரிவித்தார்களே. அவர்களெல்லோரும் இங்கு வந்து பார்க்கவில்லையா?"

மகாதேவன் கேட்டான்.

"சிங்களப் பகுதியில் ஏதாவது ஆர்ப்பாட்டம் நடந்ததா? இந்தியத் தோட்டத் தொழிலாளர்களை 81இல் அடித்துக் கலைத்தார்கள். இந்த அடக்கு முறைகளை தாங்க முடி யாது பெடியங்கள் பொலிசாரைத் தாக்கினால் சிங்களப் பொலிசாரை நாம் கொன்றதாக எம்மை மேலும் அடக்கி, இறந்த பொலிசாரை வீர புருஷராக்கினார்கள்."

"மகாதேவன் இதற்கு நீ என்ன சொல்லுகிறாய்?"

அவனைப் பார்த்து நடராசன் கேட்டான்.

"முதலாளித்துவ அரசு இப் பிரச்சினையைப் பெரிது படுத்திப் பொய்ப் பிரச்சாரம் செய்து, பொருளாதாரப் பிரச்சினைகளை மூடி மறைக்கிறது. அப் பிரச்சினைகள் வலுவடையும் போது சிங்கள, தமிழ் தொழிலாளர் எல்லோருமே பாதிக்கப்படுகின்றனர். தொழிற்சங்க உரிமைகளை எல்லோருமே இழந்துள்ளனர்."

"என்ன வாத்தியார் நீங்கள் ஒன்றும் பேசாமல் இருக்கிறீர்கள்?"

நடராசன் வாத்தியாரைப் பார்த்துக் கேட்டான்.

"நியாயங்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன் சிங்கள அரசு ஆளுகிறது என்று ஏன் கூறுகிறோம் என்றால், உதாரணமாகப் பாருங்கள், என் பென்சன் பற்றி சிங்களத்தில் எனக்குக் கடிதம் வருகிறது. இங்கே சிங்களம் படிக்கத் தக்கவர் எவரும் கிடையாது."

"முன்னர் ஆங்கிலத்தில் கடிதங்கள் வந்தபோது நீங்கள் எதிர்க்கவில்லையே."

"அது சுதந்திரத்திற்கு முன்னர், சிங்களவருக்குச்சிங்கள மொழியைப் பயன்படுத்த சுதந்திரம் வந்துவிட்டது. தமிழருக்கு மட்டும் தமிழைப் பயன்படுத்தச் சுதந்திரம் கிடையாது."

வாத்தியார் கூற, தங்கம்மா கோப்பியோடு வந்தாள். அவள் முகத்தில் முன்பிருந்த சோக நிழல் மறைந்திருந்தது. முகம் கழுவி, நெற்றியில் குங்குமப் பொட்டிட்டு, தலைவாரி கொண்டை முடிந்திருந்தாள்.

நடராசன் மகாதேவனைப் பார்த்தான்.

"தமிழர்களுக்குச் சிங்களத்தையும் சிங்களவர்களுக்குத் தமிழையும் கட்டாய பாடமாகப் பாடசாலைகளில் கற்பிக்கத் தவறிவிட்டார்கள். இதனால் இரண்டு தேசிய இனத்தவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் பழகி ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள முடியாது போய் விட்டது. தற்போது ஏகாதிபத்தியங்களின் நேரடி ஆதிக்கம் உலக வங்கி வழியாக வலுத்து விட்டது. ஆங்கிலத்தை மீண்டும் கொண்டு வந்து இனங்களிடையே ஒற்றுமை ஏற்படுத்தப் பார்க்கிறார்கள்.

''யார் அவ்வாறு பார்க்கிறார்கள்?''

''தரகு முதலாளிகள்......''

தங்கம்மா 'கோப்பி ஆறுகிறது' என்று நினைவூட்டிய படியே இடையிட்டுச் சொன்னாள்:

''என் காதிலும் பேச்செல்லாம் விழத்தான் செய்தது. எங்கள் வீட்டில் இந்தச் சண்டைகளுக்குக் குறைவில்லை.',

''அரசியல் விழிப்புணர்வு யாழ்ப்பாணத்தில் வளர்ந்துள்ளது என்பதை இந்த வீட்டிலேயே பார்க்கிறேன்.''

கோப்பியை வாங்கிக் கீழே சூடாற வைத்துவிட்டு நடராசன் கூறினான்.

''புலி புலி என்று வாய் வீரம் பேசித் திரிகிறியே முடிந்தால் நீயும் போய்ச் சேரன் என்று இவன் கேலி செய்ததைப் பார்த்துத்தான் என் பிள்ளை போய்விட்டான். நான் கலங்கிப் போயிருக்கிறேன்''

மகாதேவனைச் சுட்டிக்காட்டியபடி, தங்கம்மா சொன்னாள்.

''முகுந்தனின் போட்டோ ஏதாவது இருந்தால் காட்டுவாயா தங்கம்''

இரவிலிருந்து மனதில் அரித்துக் கொண்டிருந்த விஷயத்தை நடராசன் கக்கினார். தன் சந்தேகத்தை அதனால் தீர்த்து விடலாம் என எண்ணினான்.

''அவன் தன் போட்டோ எதுவும் வீட்டில் வைத்திருக்க வேண்டாம் என்று சொன்னான். அதனால் 'குரூப்' போட்டோக்களைக் கூட எரித்து விட்டோம்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடசாசன் சமாளித்துக் கொண்டே ஏமாற்றத்தை வெளியே காட்டாத விதமாகச் வாத்தியாரைப் பார்த்துச் சொன்னான்:

''அன்னந்தான் அவன் பெயரையே சொன்னாள். முகுந்தன் நல்ல பெயர். வாத்தியார் எப்படி இந்தப் பெயரைத் தேடிப் பிடித்தீர்கள்.''

''காண்டேகரின் நாவல்கள் என்றால் எனக்கும் தங்கத்திற்குமே நல்லாய்ப் பிடிக்கும். அவர் நாவல் ஒன்றில் முகுந்தன் என்ற பெயரில் புரட்சிக்காரன் ஒருவன் வருகிறான். பெயரும் அந்தப் பாத்திரமும் எங்களுக்கு நல்லாய்ப் பிடித்துக் கொண்டது.''

''நீங்கள் விரும்பியபடியே அவனும் புரட்சிக்காரனாகி விட்டான்''

''இது புரட்சியல்ல; தீவிரவாதம்?''

மகாதேவன் கூறியதை நடராசனால் உடனே புரிந்து கொள்ள முடியவில்லை. இந்த வார்த்தைக்குள் ஆழமான கருத்து புதைந்திருக்கலாம் என நினைத்து நடராசன் கேட்டான்.

''அப்ப புரட்சி என்றால் என்ன?''

''புரட்சி என்பது. தொழிலாளி பாட்டாளி வர்க்கம் சமுக உற்பத்தி முறையை மாற்றி அமைக்க நடத்தும் போராட்டம்''

நடராசனின் கேள்விக்கு மகாதேவன் விளக்கம் கூறினான்.

''எங்கள் வீட்டில் இந்தச் சண்டைகள் ஓய்ந்ததேயில்லை. ஆளுக்கு ஒரு கட்சி.''

தங்கம்மா சொன்னாள். நாட்டிலுள்ள அரசியல் முரண்பாடெல்லாம் அவ்வீட்டிலேயே இருப்பதை நடராசன் கண்டான். உள்ளூர மகிழ்ச்சியுமடைந்தான்.

''குமாரன் எப்படி இருக்கிறான்?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கம்மாவே தொடர்ந்து கேட்டாள்.

"தானாகவே ஏதாவது வேலை செய்கிறான். வீட்டுக்கு நல்ல உதவி. எல்லாவற்றையும் அறிய வேண்டும் என்ற ஆவல் இருக்கிறது. அவன் பிறவி ஊமையில்லை."

"நல்ல பிள்ளை, எங்களுக்கே நல்ல உதவியாயிருந்தான். அவனை ஏன் எங்கள் வீட்டில் வைத்திருக்க வேண்டாம் என்று தம்பி சொன்னான் என்பதுதான் எனக்கு இன்னும் புரியவில்லை."

தங்கம் சொன்னதும் நடராசன் ஆர்வத்தோடு கேட்டான்.

'எந்தத் தம்பி"

"முகுந்தன்"

## 15

மறு நாட் காலை தோட்டப் பகுதிகளைப் பார்வையிட நடராசன் சென்றான். மழையில்லாதபோதும் பயிர்களின் பசுமை நிறம் அவன் மனத்திற்கு இதம் ஊட்டியது. வெங்காயம், மிளகாய், காய்கறி, வாழைத் தோட்டங்கள் பரந்து கிடந்தன. முன்னர் செம்பாடாகக் கிடந்த இடங்களெல்லாம் புதிய கிணறுகள்; கிணறுகளைச் சுற்றித் தென்னை மரங்கள்.

கிணற்றிலிருந்து நீர் இறைக்கும் இயந்திரங்களின் ஓசை எங்கும் கேட்டது. வாய்க்காலில் ஓடும் தண்ணீரைப் பாத்திகளுக்கு மறித்துக் கட்டுவோர், பயிருக்குக் கிருமி நாசினி அடிப்போரை ஆங்காங்கே காண முடிந்தது.

முந்திரிக் கொடிப் பந்தல்கள் அங்குமிங்குமாய்த் தெரிந்தன. குருவிகளைக் கலைக்க இடையிடையே தகரத்தில் தட்டும் ஓசையும் கேட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்கை வழியே டிராக்டர் ரெயிலரில் உரம் ஏற்றி ஒருவன் ஓட்டி வந்தான். மாணவியர் இருவர் சைக்கிளில் பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்தனர்

கிணற்றடிகளில் துலாக்கள் நிமிர்ந்து நின்றன. அவை அசையவில்லை. ஆங்காங்கே வெள்ளைச் சேட்டுடனும் சாரத்துடனும் விவசாயிகள்.

எத்தனை மாற்றங்கள். விவசாய முறைகளில் ஏற்பட்ட மாற்றங்களால் விவசாயிகளும் மாறிவிட்டனர்,

''நேற்று கொழும்பிலே வெங்காயம் முன்றூற்று இருபத்தைஞ்சு விற்றுதாம்.''

ஒரு தோட்ட விவசாயி மற்றத் தோட்டத்தவருக்கு சத்தமிட்டுக் கூறினார்.

''நான் நாளைக்குத்தான் அனுப்ப இருக்கிறேன் விலை இறங்கிவிடுமோ தெரியவில்லை.'' மற்றவர் பதில் கூறினார்.

யாழ்ப்பாணத்து விவசாயி கிணற்றுத் தவளை என்று கூறிய காலம் நடராசன் நினைவில் வந்தது.

டிராக்டர், உரம், கிருமிநாசினி, நீரிறைக்கும் இயந்திரம் போன்றவற்றால் உலகச் சந்தைத் தொடர்பு ஏற்பட்டது. இன்றும் கிணற்றில் வாழ்வதாகக் கூறிவிட முடியாது, அப்பாதான் முன்னவர் அப்படி வாழ்கிறார். தங்கம்மாவின் சத்தியன் — புதிய இளம் விவசாயி. எவ்வளவு விஷயமெல்லாம் அறிந்திருக்கிறான். உரம் கிருமிநாசினியின் பெயர்கள், டிராக்டர், மெஷினையெல்லாம் தானே கழட்டிப்பூட்டுவானாம். இவற்றின் விலையெல்லாம் தொடர்ந்து ஏறுகிறது. தமது விளைபொருட்களின் விலைகள் இந்த அரசு வந்தபிறகு இறங்குகிறது என்று தங்கம்மா கூறியதும் அவன் நினைவில் வந்தது.

''நீங்க பொன்னம்பலத்தின் மகனா.''

முதியவர் ஒருவரின் குரல் கேட்டுத் திரும்பியபோது முன்னைய சிந்தனைகள் அறுந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆமாம்"

"நான் அடுத்த கிணத்தடியில்தான் பயிர் செய்கிறேன். உன் அம்மா எனக்குத் தூரத்துச் சொந்தம். நீ டாக்டரா யிருக்கிறாய். ஏன் தம்பி உன் அப்பாவை இன்னும் தோட்டம் செய்ய விடுகிறாய்?"

"நான் சொன்னால் அவர் கேட்பாரா. உழைத்துப் பழகிய உடம்பு, அவரால் நிறுத்த முடியவில்லை. நான் என்ன செய்ய முடியும்?"

"அதுவும் உண்மைதான். நானும் எத்தனையோ தடவை சொல்லிப் போட்டேன். எங்கே இந்தப் பக்கம் தம்பி?"

தோட்டங்களைச் சுற்றிப்பார்க்க வந்தேன். எல்லாம் பெரிய மாற்றமாயிருக்கிறது

"அப்பாவோடு நீ சின்னப் பெடியனாக தோட்டத்திற்கு வந்தது இன்றும் நினைவிருக்கு. ஒரு நாள் பட்டையைப் பிடித்து இறைக்கும்போது தவறி கிணற்றுக்குள் விழுந்தா யல்லவா?"

அவர் சிரித்துக் கொண்டே சொன்னார். நடராசனும் சிரித்தான்.

"ஏதோ நீ படிச்சு நல்லாய் வந்துவிட்டாய். துலாவிலை ஏறி தண்ணீர் இறைத்து விவசாயம் செய்வது எத்தனை கஷ்டம். நீ தப்பி விட்டாய்"

"இப்ப ஒருவருமே துலா ஏறுவதாயில்லையே."

"ஓம் தம்பி, எல்லாம் மாறிவிட்டது. என் இரண்டு பெடியங்கள் விவசாயந்தான் செய்கிறார்கள். மண்வெட்டி யைத் தொடுவது மதிப்புக் குறைவு என்று எண்ணுகிறார் கள்."

"வசதிபடைச்ச பணக்கார விவசாயியாக வந்துவிட்டால் அப்படித் தானே நினைப்பார்கள். இப்போது யார் கூலி வேலையெல்லாம் செய்கிறார்கள்?"

நடராசன் கேட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பள்ளர்தான். ஒரு நாளுக்கு முப்பது ரூபா கூலி. பாணும் தேத்தண்ணியும் கொடுக்கிறோம். மூன்று மணிக்கெல்லாம் போய்விடுவார்கள்"

"மண்வெட்டி தொட வெட்கமென்றால் கேட்கிற கூலி கொடுக்கத்தானே வேணும்"

"சிறுபிட்டியிலை பாணும் தேத்தண்ணியும் வேண்டாம். கூலியைக் கூடக் கொடு என்று கேட்டு வேலை நிறுத்தம் செய்கிறார்கள். வெளியே இருந்தும் கூலிகள் போகாமல் தடுக்கிறார்கள் வெள்ளாளர் எல்லோரும் மண் வெட்டி எடுக்கத் தொடங்கி விட்டார்கள். பயிர் செய்த நிலத்தில் ஒரு பகுதியில்தான் பயிர் செய்ய முடிந்தது."

"சாதிச் சண்டைகள் இன்னும் நடக்கிறதா?"

"சாதிச் சண்டை, கூலிச் சண்டை எல்லாம் நடக்கிறது. கொலை, வெட்டுக்குத்து எல்லாம் நடக்கிறது. இப்பொழுது அவர்களும் படித்து முன்னேறுகிறார்கள். அராபிய நாடுகளுக்கும் போய் காசு உழைக்கிறார்கள். உங்கம்மாவின் செத்த வீட்டிலையே பறை மேளமே அடிக்கவில்லையே"

முதியவராக இருந்தும் சாதி அமைப்புக்கு ஆதரவு காட்டாத அவர் பேச்சு நடராசனுக்கு வியப்பாகவே இருந்தது. கொழும்பிலிருந்து வந்த எனக்குத் தக்கபடி பேசுகிறாரா? அல்லது அப்பா என்னைப் பற்றிக் கூறியிருப்பாரோ?

அவரிடம் விடை பெற்றுச் சுடலை வரை பார்த்து வருவோம் என மேலும் நடந்தான். அம்மாவை எரித்த இடத்தில் நாட்டிய மரத்தைப் பார்க்கவும், ஆவல் ஏற்பட்டது, காலில் செருப்புடன் தோட்டங்களில் நுழைய முடியாது என்பதை அறிந்திருந்தான். வெறுங்காலுடன் நடப்பது என்பது இயலாதிருந்தது. சாவீட்டின் போது கற்குறுணிகள் மெல்லிய காலை அழுத்தி முட்கள் குத்துவதுபோல்உறுத்தியது நினைவு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில அடிகள் முன் வைத்ததும் எதிரே கம்பீரமாக மகா தேவன் வருவதைக் கண்டு ஆச்சரியமடைந்தான்.

"தோட்டப் பக்கமே போவதில்லை என அம்மா குறை கூறினாளே"

நடராசன், மகாதேவனைப் பார்ந்துக் கேட்டாள்.

"வெங்காயம் கிண்டுபவர்களுக்குத் தேத் தண்ணி கொடுத்து வருகிறேன். எனக்கு வேறு முக்கிய வேலைகள் இருப்பதால்தான் நான் ஒழுங்காகத் தோட்டம் வருவதில்லை."

"அம்மா தோட்டத்திற்குத் போவதில்லையா?"

'அந்தக் காலத்தில் நடுத்தர விவசாயியாக இருக்கும் போதே அம்மாவும் வருவார். தற்போது பணக்கார விவசாயி. பணக்கார விவசாயிகளின் பெண்கள் விவசாயத் திற்குப் போவதில்லை என்பது உங்களுக்குத் தெரியாது என நினைக்கிறேன்."

"அதோ ஒருத்தி மாட்டுத் தொட்டிலருகே நிற் கிறாளே" நடராசன் தோட்டத்தில் நின்ற அப்பெண்ணைச் சுட்டிக் காட்டிக் கேட்டான்.

"அவர்கள் நடுத்தர விவசாயிகள். அழுக்கு உடையு டன் குனிந்து வேலை செய்யும் பெண்கள் என்றால் கூலி விவசாயிகள். அதோ வெங்காயம் கிண்டுகிறார்கள் பாருங் கள்."

பெரியவர் சென்ற வடக்குத் திக்காக சுட்டிக்காட்டி னான் மகாதேவன்.

"எல்லோரும் பள்ளியர்."

"ஆமாம்"

"என்னோடு கதைத்து விட்டுப் போகிற அந்தப் பெரிய வரைப் பார். அவர் பேச்சில் சாதித்திமிரே இருக்கவில்லை. உன்னுடைய பிரச்சாரமோ."

பெரியவரை அதே திசையில் சுட்டிக் காட்டு பகிடியாக நடராசன் கேட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அவரா, அது வேடிக்கையான கதை'' என்று சிரித்த படியே மகாதேவன் தொடர்ந்தான்:

''முப்பது வயதாகியும் கட்டிக் கொடுக்காமல் நல்ல சாதி மாப்பிளை தேடிக் கொண்டிருந்தார். ஒரு நாளிரவு வீட்டிற்கு கள்ளுச் சீவ வரும் பள்ளர் வகுப்புப் பெடியனோடு மகள் ஓடி விட்டாள் அவருக்கு ஒரு பேரனும் பிறந்திருக்கிறான். அதன் பின் அவர் சாதித் திமிர் பேசுவதில்லை''

மகாதேவன் மீண்டும் சிரித்தான். நடராசனும் கதையைக் கேட்டு தன் முன்னைய சந்தேகத்தை நீக்கிக் கொண்டான்.

''வேறு முக்கிய வேலை செய்வதாகச் சொன்னாயே. அது என்ன வேலை?''

'கிராமப்புறக் கூலி விவசாயிகளிடை சங்கம் அமைக்கிறோம். அரசியல் வகுப்பு நடத்துகிறோம்.''

''கூலி விவசாயிகளென்றால் பெரும்பாலும் பள்ளர் வகுப்பினர் தானே''

''சொத்து எதுவுமற்ற உழைக்கும் கிராமப்புறப் பாட்டாளிகள் பெரும்பாலும் அவர்களே. எங்கள் சமூகத்தில் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் அவர்கள்தான். ஒன்று சாதி அடக்குமுறை. மற்றது குறைந்த கூலி. தமிழர் வாழும் பகுதிகளில் தொழிற்சாலைகள் மிகக்குறைவு. புரட்சிகர வர்க்கமாகக் கூறக் கூடிய வர்க்கம் இக்கிராமப்புறப் பாட்டாளிகளே. அதனால்தாள் இவர்களிடையே கட்சி வேலை செய்கிறோம்''

அவன் பேசிய மொழிகள் நடராசனுக்கு முற்றாகப் புரியவில்லை. இவ்வாறான புதிய எண்ணங்கள், இயக்கங்கள் அங்கு தோன்றியிருப்பதை அறிந்தபோது வியப்பாயிருந்தது. ஏதோ பெரிய சமுதாய மாற்றத்திற்கு அங்கு வழி கோலப்படுவதாகவே அவன் உணர்ந்தான்.

''கூலி விவசாயிகளுக்குச் சங்கம் அமைக்கிறது என்பதை என்னால் நம்பவே முடியவில்லை. வேலை நிறுத்தமும் நடத்துவீர்களோ?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சிறுப்பிட்டியில் இன்னும் வேலை நிறுத்தம் நடை பெறுகிறது: சிரட்டையில் தேத் தண்ணி வேண்டாம், கூலி யைக் கூட்டிக் கொடு என்று கேட்கிறார்கள்.''

''அந்தப் பெரியவரும் சொன்னார்.''

''அவர் மருமகனும் அந்தப் பக்கந்தான். அதுதான் சொல்லியிருப்பார்.''

இருவரும் சிரித்தனர். நடராசன் சுடலைவரை சென் றான். தாயை எரித்த நிலையத்தைப் பார்த்தபோது நெஞ்சில் பாரம் ஏற்பட்டது. நட்ட மரம் கருகிவிட்டது.

ஆயினும் வீட்டிற்குத் திரும்பும்போது தன் தாய் செய்த கபடங்கள் ஒன்றொன்றாய் மனத்திரையில் ஓடின. முன்னர் தாய்மேல் கொண்டிருந்த மதிப்பு சிறிது சிறிதாகக் குறைந்தது.

## 16

அன்று வாடகைக் கார் ஏற்பாடு செய்து நடராசன் யாழ்ப்பாணப் பட்டணம் புறப்பட்டான். நண்பர்களைப் பார்த்து விட்டு பெரிய கடையில் அன்னத்திற்கு ஒரு சேலை யும் குமாரனுக்கு சாரமும் 'சேட்'ட்டும் வாங்கி வரவேண்டும் என எண்ணியிருந்தான். குமாரனின் உடல் மெலிந்து போய் கழுத்து, மார்பு எலும்புகள் வெளியே தெரிந்தன. அவன் சேட்டு குமாரனுக்குத் தொய்ந்திருந்தது.

குமாரனையும் அதே காரில் அழைத்துச் சென்று 'சைக்கியாற்றி'க் டாக்டர் எவராவது இருப்பின் காட்டலாம்; வாங்கும் 'சேட்'டையும் அவனுக்குப் பிடித்ததாக அளவு பார்த்து வாங்கலாம் என்றும் நினைத்தான்.

உரத்துப் பேசி அவனையும் காரில் ஏறும்படி வேண்டி னான். அவன் 'ஏ ஏ ஏ' என்று சத்தமிட்டு மறுத்துவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராசனுக்கு அவன் செயல் ஒரே ஏமாற்றமாயிருந்தது. அவன் மறுப்பதற்குரிய காரணங்களை அவனால் ஊகிக்க முடியவில்லை. பிதுங்கிய விழிகளுடன் பேய் போல முக பாவம் தெரிந்த போதும், மனநோய்க்குரிய அறிகுறிகள் குறைவாகவே இருந்தது. 'ரான்குலைசர்' ஏதாவது கொடுக்கலாம் என்று எண்ணியபோது வழமையாக மன நோயாளரிடம் காணப்படும் உணர்ச்சிவயப்பட்டு ஆவேச மாகச் சத்தமிடும் குணங்கள் எதுவும் அவனிடம் இருக்க வில்லை. இரவு மட்டும் கனவு கண்டு தூக்கத்தில் 'ஆ...ஊ' என்று பலமாகச் சத்தமிட்டான். இவன் என்ன புதிர் மனிதன்!

சென்ற தடவை பட்டணம் சென்றபோது டாக்டர் இராச நாயகத்திடம் குமாரனைப் பற்றிப் பேசி, ஊரிலேயே மருத்துவ வசதி ஏற்பாடு செய்ய முயன்றிருக்கலாம், மறந்து விட்டேன் என மனம் நொந்தான்.

குமாரனுக்கு உதவுவதிலும் பார்க்க தங்கம்மா முதன் முதலாகக் கேட்ட உதவியைத் திருப்தியாகச் செய்து அவனைக் குணப்படுத்தி விடவேண்டும் என்று நினைத் தான். அதற்காகப் பணம் செலவு செய்வது மட்டுமல்ல, எவர் உதவியையும் கேட்டுப் பெறத் தயாராக இருந்தான்.

தன் மருத்துவ வரலாற்றிலே இப்படிப்பட்ட புதிரான மனிதனைக் காணவில்லை என்றே நடராசன் எண்ணினான்.

வேகமாக ஓடிய கார் பல்கலைக் கழகத் தெருவை நெருங்கியதும் திடீர் பிரேக் போட்டு உலுப்பியபடி நின்றது. முன்னே கார்கள், வான்கள், பஸ்கள், லாரிகள் அணிவகுத்து நின்றன.

'என்ன நடக்கிறது?'

''ஏதோ ஊர்வலம் போகலாம்.''

கார் ஓட்டிய சாரதி கூறினான்.

என்ன நடைபெறுகிறது என்பதை அறியும் ஆவலுடன் காரிலிருந்து நடராசன் இறங்கினான். பின்புறத்தில் வேறும் வாகனங்களும் சேரத் தொடங்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரதியிடம் கூறிவிட்டு வாகனங்களைக் கடந்து முன்புற மாக நடந்தான். நூறு மீட்டர் தூரம் வரை கடந்து சந்தியை அடைந்தான். ஊர்வலத்தைத் தெருவோரம் நின்று பார்க்கும் கூட்டம் வேறு. அவர்களை ஒதுக்கி முன் வந்தான்.

நீண்ட ஊர்வலம் மெதுவாக ஊர்ந்தது. கையில் சுலோக அட்டைகள். வாயில் உணர்ச்சி மிக்க முழக்கங்கள். பல்கலைக் கழக மாணவ, மாணவியர் தலைமை தாங்கிச் சென்றனர். அவர்களைத் தொடர்ந்து பொது மக்கள்; ஆண்களும் பெண்களும். கல்லூரி மாணவ, மாணவியர், இளைஞர்கள்.

''பல்கலைக் கழக மாணவர்களை விடுதலை செய்''

''நித்தி நிர்மலாவை விடுதலை செய்''

''பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நிராகரிப்போம்.''

''தென் ஆபிரிக்கச் சட்டம் இங்கு வேண்டாம்''

''இளைஞர்களை விடுதலை செய்''

''மத குருவை வதை செய்யாதே; உடனே விடுதலை செய்''

''ஈழம் எங்கள் மூச்சு''

''சிங்கள ஏகாதிபத்தியத்தை எதிர்ப்போம்.''

''உயிரைக் காத்த டாக்டரை விடுதலை செய்''

ஊர்வலம், பல்கலைக் கழகத் தெருவால் வந்து, பலாலி ரோட்டில் ஏறி, யாழ்ப்பாண நகரை நோக்கிச் சென்றது.

ஊர்வலம் என்றால் பொலிஸ் படை கேடயம், குண்டாந் தடியுடன் முன்னும் பின்னும் செல்வது வழமை. அங்கு எந்தப் பொலிசாரையும் காண முடியவில்லை. ஆயினும் ஊர்வலம் ஒழுங்காகவே சென்றது.

அரை மணி நேரத்திற்கு மேலாக அங்கு தாமதமாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பத்தாயிரம் பேராவது இருக்கும்"

"ஒரு மைல் ஊர்வலம்"

வேடிக்கை பார்த்தவர் உரையாடல் நடராசனின் காதில் விழுந்தது.

மீண்டும் திரும்பி நடந்து வந்து காரில் ஏறிக்கொண்டான். வாகனங்கள் ஒவ்வொன்றாக அசைந்து வெவ்வேறு தெருக்களில் திரும்பியது

அவன் காரும் ஊர்ந்து சென்று பல்கலைக்கழகத் தெரு வழி திரும்பி யாழ்ப்பாண நகர் நோக்கிச் சென்றது.

"இங்கெல்லாம் இவை வழமையாகி விட்டன. எந்த வேளை கார். பஸ் ஓட்டமெல்லாம் நிற்கும். கடைகளை அடைப்பார்கள் என்று கூற முடியாது." சாரதி நடராசனிடம் சொன்னான்.

"கொழும்பில் தொழிற்சங்க ஊர்வலம் ஆர்ப்பாட்டங்கள் நின்று விட்டன. இலங்கையின் மற்றப் பகுதிகளிலும் இப்படி எதையும் காண முடியாது."

"அவர்கள் ஆளுகிறார்கள். நாங்கள் அடக்கப்படுகிறோம். நாங்கள் தானே போராட வேண்டும்."

"இப்படியான அரசியலெல்லாம் உனக்கு யார் சொல்லித் தந்தது."

ஒரு வாடகைச் சாரதிகூட அரசியல் பேசுகிறானே என ஆச்சரியப்பட்டான்.

"ஒவ்வொரு வாரமும் ஏதோ சம்பவம் நடைபெறுகிறது. அதைப் பற்றி ஊரெல்லாம் பேசத்தானே செய்யும்."

அவன் கூறியதில் ஓரளவு உண்மை இருந்தது. அடிக்கடி அவர்கள் அன்றாட வாழ்க்கை பாதிப்படைகிறது.

அங்கு நடைபெறும் அசம்பாவித சம்பவங்கள் அவற்றைப் பற்றிப் பேசச் செய்து, அரசியல் விழிப்பை ஏற்படுத்துகிறது. இங்கு அரசியல் விழிப்பு வேகமடைந்து வருவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது உண்மையே. தங்கம்மா குடும்பத்தைப் பார்த்தாலே தெரியவில்லையா? அவ்வாறு உயிர்த்துடிப்பாக அரசியல் நிலை அங்கு இருக்கும் எனக் கனவில் கூட அவன் எண்ண வில்லை.

''பொலிசார் ஒருவரையும் ஊர்வலத்தில் காண வில்லையே''

''மக்களுக்குப் பொலிசார் இங்கே மட்டுமே பயம். பெடி யங்கள் சுட்டுவிடலாம் என்ற பயத்தில் வரமாட்டார்கள்.''

சிரித்தபடியே சாரதி கூறிவிட்டு மேலும் தொடர்ந்தான்:

''பெடியங்கள் ஒன்றுபட்டு எமக்கு நன்மை செய்தார்கள், முன்னர் எப்படியெல்லாம் அடித்து, உதைத்து பொலிசார் ஆணவம் காட்டினாங்கள். இப்போது எங்களை ஊரிலே தலை நிமிர்ந்து நடக்கப் பெடியங்கள் செய்து விட்டார்கள் இதுவே ஒரு பெரிய வெற்றியே. அதோடு பொலிசார் சில்லறை விஷயங்களில் தலையிட்டுக் காசு பறிப்பது, லஞ்சம் வாங்குவதெல்லாம் நின்று விட்டது.''

கார் சாரதி வழியாக இத்தனை உண்மைகளை அறிய முடிந்தது; ஆச்சரியமாக இருந்தது. அவன் வழியாகவே மற்றோர் விஷயத்தை அறிய ஆவலுடன் நடராசன் கேட்டான்:

'எவரோ' டாக்டரை விடுதலை செய்' என்று கத்திக் கொண்டு போனார்கள். யார் அது?''

''காயமடைந்த பெடியன் ஒருவனின் உயிரை டாக்டர் சின்னராசா என்பவர் காப்பாற்றினார். தற்போது பயங்கர வாதச் சட்டத்தின் கீழ் காயப்பட்டவனைத் தமக்குக் காட்டித் தரவில்லை என அவரை மிலிட்டரிக் காவலில் வைத்திருக் கிறார்கள். அந்தச் சட்டப்படி அவருக்கு ஏழு வருட மறியல் கிடைக்கும். அச்சட்டத்தை நீக்கும்படியும் சத்தமிட்டிருப் பார்களே.''

''ஆமாம்''

''இதில் வேடிக்கை என்னவென்றால் 'சமுத்திரத்தின் நடுவில்' என்று ஒரு சிங்களப்படம், முன் இருந்த சிறிமாவோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சியைக் கிண்டல் செய்யும் படம். அது இந்த அரசின் ஆதரவோடு வந்ததை நீங்கள் பார்த்தீர்களா?''

''கேள்விப்பட்டேன். பார்க்க நேரம் கிடைக்கவில்லை.'',

''அதில் டாக்டர் ஒருவரை லஞ்சக் குற்றத்தில் மாட்டி நீதி மந்திரி சிறைப்படுத்துகிறான். இங்கே சாகிற உயிரைக் காப்பாற்றியவனைச் சிறையில் வைக்கிறார்கள். சட்டப்படி ஏழு வருடம் கிடைக்கும். உண்மை பொய் தெரியாது அப் படத்தில் தனிப்பட்ட குரோதத்தைக் காட்ட டாக்டர் ஒருவர் தண்டிக்கப்பட்டதாக கதை. இங்கே சட்டமாக்கி அதை நீதி யாக்கி யிருக்கிறார்கள்.''

இத்தனை விவேகமாக சாரதி பேசுவது நடராசனுக்கே ஆச்சரியமாயிருந்தது. நீதிபற்றி அவன் கூறிய விளக்கம் நடராசன் இதயத்தைச் சிலிர்க்க வைத்தது.

''கொழும்பிற்குப் போனதும் அப் படத்தைப் பார்க் கிறேன். உன் விளக்கம் நல்லா யிருக்கிறது.''

''சில நாள் முன்பு நடந்த பொலிஸ்டேசன் தாக்குதலில் பெடியன் ஒருவன் காயப்பட்டானாம். அந்தப் பெடியனுக்கு மருந்து கட்டிய டாகடருக்கும் என்ன நடக்குமோ தெரியாது.''

நடராசன் நெஞ்சை எவரோ பலமாக அடித்தது போலி ருந்தது. அவன் மௌனமாக இருந்தான். நெற்றியும் கழுத்தும் வியர்த்தது. கைக்குட்டையால் துடைத்து விட்டுக் கார் யன்னலை மேலும் இறக்கினான். வெய்யில் ஏறியிருந்தது. வெப்பக்காற்றே வீசியது. அவ்வேளையில் அதுவும் இதமாயிருந்தது.

''அந்த டாக்டரை எப்படிக் கண்டுபிடிக்க முடியும்.''

தன் மனத்தைச் சாந்தப்படுத்த சாரதியின் கருத்தையும் அறிய முயன்றான்.

''அத்தனை சுலபமாகப் பிடித்து விடமுடியாது. பெடியங் கள் உயிர் போனாலும் காட்டிக் கொடுக்கமாட்டார்கள். எங் காவது இலட்சத்தில் ஒரு துரோகி காட்டிக் கொடுப்பான். இன்னும் ஒரு விஷயம்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரில் நுழைந்து கஸ்தூரியார் தெருவில் திரும்பிய போது சாரதி தொடர்ந்து சொன்னான்:

"அது என்ன விஷயம்?"

பெரிய கடைக்குச் செல்ல வசதியான இடத்தில் காரை நிற்பாட்டுவது பற்றிச் சொல்வதை மறந்து, அவன் பதிலை அறியும் ஆவலோடும் கேட்டான்.

"உடலில் பாய்ந்த சன்னத்தை ஆபரேசன் செய்து எடுத்து மருந்து கட்டத் தக்க டாக்டர்கள் யாழ்ப்பாணத்தில் யார், யார் இருக்கிறார்கள் என்பதை விரல்விட்டு எண்ணி விடலாம். எல்லோரையுமே இவர்கள் சந்தேகிக்கலாம். இலையானை அடிக்க 'டாங்கை'த் தெருவுக்குக் கொண்டு வருபவர்கள் இதைச் செய்ய மாட்டார்கள் என்று எப்படிக் கூற முடியும்?"

சாரதியின் விவேகமான கருத்துகள் நடராசனின் சிந்தனையை குழப்பின. ஓரளவு மறந்து ஆறியிருந்த நினைவும் சட்டத்தின் பயங்கரமும் நெஞ்சையும் உறுத்தின.

ஆஸ்பத்திரி வீதியின் நடுப்பக்கமாகக் காரை நிறுத்தினான். நடராசன் இறங்கிக் கடைத்தெரு வழியே நடந்தான்.

பொருள்கள் வாங்கும் நினைவையே மறந்துவிட்டான்.

"ஊர்வலம் ஆசுபத்திரி வீதியால் வரப் போகிறதாம்"

ஒரு கடை வாசலில் எவனோ கூறும் ஒலி கேட்டது. ஊர்வல நினைவு மனத்திற்குத் தெம்பு தத்தது. புதிய உணர்வு. தனக்குப் பின்னே ஓர் உயிர் மட்டுமல்ல; பல லட்ச மக்களின் குரல் ஒலிப்பதை உணர்ந்தான்.

புத்துணர்வோடு சென்று ஓர் ஓட்டலில் நுழைந்து குளிர் பானம் பருகினான்.

மீண்டும் தெருவில் இறங்கியபோது கடைகளின் கதவுகள் ஒருவர் நுழையத் தக்கதாக மட்டும் வழிவிட்டு அடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டன. பண்டம் வாங்குவோரின் சலசலப்பு தெருவெல்லாம் ஆரவாரமாகவே இருந்தது.

பாதி திறந்திருந்த பிரபலமான புடவைக் கடையுள் நடராசன் நுழைந்தான். இளம் பெண்களே அங்கு துணி வாங்குவதில் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருந்தனர். தான் வாங்க வேண்டியவற்றைத் தேர்ந்தெடுத்து வாங்க அரைமணி நேர மாகி விட்டது.

மற்றும் வீட்டிற்கு வாங்கி வரும்படி அன்னம் கூறிய பொருட்களைப் புதிய சந்தையைச் சுற்றிப் பார்த்துத்தேடி வாங்கினான். பின்னர் மருந்துக் கடை ஒன்றில் நுழைந்து, சில மருந்துகள், விட்டமின் மாத்திரைகள், தந்தைக்காக 'சஸ்டயின் டின்'கள் யாவும் வாங்கினான். அவற்றைக் காரில் வைத்துவிட்டு பொலிசாரால் எரிக்கப்பட்ட பொது நூலகத் தைப் பார்க்கச் சென்றான். புதிய கட்டிட வேலைகள் அருகே நடந்தபோதும் எரிந்த பகுதியைப் பார்த்த அவன் உடல் ஒரு கணம் சிலிர்த்தது.

## 18

---

மீண்டும் காரடிக்கு நடராசன் வந்தபோது ஊர்வலம் ஆஸ்பத்திரி வீதி வழியே வந்தது.

நடராசன் விரைவாக நடந்து காரடிக்கு வந்தான் காரை வெளியேஎடுத்து,கிராமத்துக்குப் புறப்பட்டு விடலாமா என்று பார்த்தான்.

ஊர்வலம் போன பின்னரே காரை எடுக்க முடியும் என்று சாரதி சொன்னான்.

''இன்னும் ஏதாவது வாங்க இருந்தால் அதையும் முடித்துவிட்டு வாருங்கள்'' என்றான் சாரதி.

''பத்திரிகைகள் மட்டுமே வாங்க வேண்டும்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ் நிலையத்தருகே இருந்த கடையில் பத்திரிகைகள், சஞ்சிகைகளை வாங்கினான். பின்னர் மீண்டும் வந்து நின்று ஊர்வலத்தின் உயிரோட்டத்தைப் பார்த்தான்.

கார் சாரதி ஏற்படுத்திய பயமெல்லாம் அவ்வேளை பறந்து விட்டது. தன் நெஞ்சம் சிறிது சிறிதாக நீதிக்காகப் போராட வேண்டும் என்ற மன நிலைக்கு மாறி வருவதை அவனால் உணர முடிந்தது.

ஆசுபத்திரிக்கு அண்மையில் மரநிழலில் நின்று ஊர் வலத்தையும், உணர்ச்சிக் குரல்களையும். சுலோக அட்டை களையும் மீண்டும் பார்த்தான். அவை புதிய எழுச்சியைப் பிரதி பலித்தது.

"டாக்டர்"

ஒரு குரல் கேட்டுத் திரும்பியபோது அருகே கல்லூரி நண்பன் குமாரசாமி நின்றான். பார்த்து எத்தனை வருடங் கள்! அவன் கல்லூரியில் காலையில் இனிமையாகத் தேவா ரம் பாடுவான். மருத்துவ உதவியாளனாக மலை நாட்டுப் பகுதியில் பணி புரிந்ததை நடராசன் அறிவான்.

"குமாரசாமி எங்கே இந்தப் பக்கம்?"

"இந்த ஆஸ்பத்திரிக்கு மாற்றலாகி விட்டேன், ஒரு வருடமாகிறது"

சுகநலம் விசாரித்துக் கொண்டனர். அரசியல் பேச்சும் தவிர்க்க முடியவில்லை.

"யாழ்ப்பாணத்தில் பெரிய மாற்றங்களைப் பார்க் கிறேன். பெண்கள் சைக்கிள் ஓட்டுகிறார்கள், முன் 'பாரி'ல் மற்றொரு பெட்டை. ஊர்வலத்தில் ஆர்ப்பாட்டம் செய் கிறார்கள். கடைகளில் துணிவாங்க நிறைந்து நிற்கிறார் கள்"

"பெண்கள் பாடசாலைகள், கல்லூரிகளிலெல்லாம் சைக் கிள் வைக்க 'செட்' போட்டிருக்கிறார்கள்."

"உயர் கல்வி, வேலை வாய்ப்பில் பாதிக்கப்படுகிறார்கள். இதனால் அரசியல் தவிர்க்க முடியாதது. ஆர்ப்பாட்டம் செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறார்கள். மற்றது வெளிநாட்டுப் பணம். முக்கியமாக மத்தியகிழக்கு நாட்டுப் பணமும் வந்து குவிகிறது. அவற்றைச் செலவு செய்யவேண்டுமே. கடைத்தெருவில் நிற்கிறார்கள்''

குமாரசாமியின் விளக்கம் நடராசனை நன்றாகக் கவர்ந்தது. தன் சந்தேகம் ஒவ்வொன்றிற்கும் அவன் பதில் கூறுவதாயிருந்தது. கல்லூரியிலும் அவன் விவேகமானவனாகவே இருந்தான். உயர்கல்விக்கு அனுப்பத்தக்க நிலை வீட்டில் கிடையாது. அக்கா ஒருத்தியும் மூன்று தங்கைகளும் அவன் பொறுப்பில் இருந்தனர். நடுத்தர விவசாயக் குடும்பம்.

''இங்கே எத்தனையோ அரசியல் கட்சிகள் இருப்பது போலத் தெரிகிறது. நீ எந்தக் கட்சி?''

நடராசன் கேட்டான் குமாரசாமி சிரித்தான்.

''இங்கே இரண்டு கட்சிதான் இருக்கின்றன. ஒன்று தேர்தல், பாராளுமன்றம், அகிம்சை பேசுகிற 71க்கு முதியவரின் கட்சி. மற்றது, செயலால்தான் எதையும் சாதிக்க முடியும் என்ற இளைஞரின் கட்சி இந்தக் கட்சியில் பிரிவுகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனாலும் வன் செயல் ஒன்று நடந்துவிட்டால், முதியவர்களும் ஆதரவு வழங்குவது தான் விசித்திரமாயிருக்கிறது. நாங்கள் கல்லூரியில் படிக்கும் போதும் எங்களுக்கும் துணிச்சல் இருந்தது தான். மரம் ஏறுவது, முள்ளுக்கம்பி வேலியைத் தாண்டுவது, மதில் ஏறிக்குதிப்பது மட்டுந்தானே. இவர்கள் 'மெஷின் கன்' எடுத்து பொலிசாரைச் சுடுகிறார்கள்; இராணுவ ஜீப்பையே தாக்குகிறார்கள். நினைக்கவே முடியவில்லை''

சிரித்தபடியே உறைப்பாகவும் குமாரசாமி சொன்னான். முன் போலவே விஷயங்களை நகைச் சுவையாகக் கூறும் சுபாவம் அப்படியே இருந்தது.

''எங்கே இவற்றுக்கெல்லாம் பயிற்சி பெற்றார்கள்?''

'லெபனனில் பயிற்சி பெற்றார்கள் என்று பொலிசாரின் கூற்றுகளை ஆதாரம் வைத்துப் பத்திரிகைகள் சொல்லுகின்றன''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரி நாட்களையும் குமாரசாமி நினைவூட்டினான். நடராசன் திடீரென நினைவு வந்ததும் சொன்னான்:

"எங்கள் தமிழ்ப் பண்டிதர் இறந்துவிட்டார். அறிந்து கவலைப்பட்டேன்,"

"ஆமாம் நானும் செத்த வீட்டிற்குச் சென்றேன். பழைய மாணவர்களும் வந்திருந்தனர். கொக்குவில் நடராசனை நினைவிருக்கிறதா? அவனும் வந்திருந்தான்."

'அவன் தானே மதிப்பெண் குறைத்துப் போட்டதாக மூக்குத் தூளில் மிளகாய்ப் பொடியைக் கலந்து பண்டிதருக்குக் கொடுத்து மறுநாள் அடிவாங்கியவன்."

"செத்த வீட்டில் அன்று அவன் விம்மி விம்மி அழுதான்"

"படிக்கும்போது அவரின் அருமை தெரியவில்லை. கொழும்பில் ஒரு சங்கத்தார் அனுதாபக் கூட்டம் போட்டார்கள். நானும் போயிருந்தேன். பண்டிதரிடம் தமிழ் கற்றேன் என்பதை அறிந்ததும் என்னையும் தமிழ்ப் பண்டிதர் போல அவர்கள் மரியாதை செய்தார்கள். அப்போதுதான் அவரின் சிறப்புத் தெரிந்தது. மூக்குப் பொடிக்கு மதிப்பெண் போடுபவர் என்று எவ்வளவு குறைவாக அப்போது பேசினோம்"

நடராசன் தவறு செய்த உணர்வோடு சொன்னான். ஆஸ்பத்திரியில் வேலை செய்யும் பிற துறை டாக்டர்கள், பற்றியெல்லாம் நடராசன் விசாரித்தான்.

"நீங்களும் இங்கே மாறுதல் எடுத்து வரலாமே சூடுபடும் பொலிசாருக்கு அவசர ஆபரேசன் செய்ய டாக்டரேயில்லை என்று கொழும்புக்கு உடனுடன் ஹெலிகாப்டரிலே ஏற்றுகிறார்கள்,"

"காயப்படும் பெடியங்கள் பற்றி நீங்கள் கவலைப் படுவதில்லையோ"

"அன்றிரவே காயமடைந்ததாகப் பொலிசார் கூறும் பெடியன் பற்றித்தான் பொலிசாரும் டாக்டர்மாரும் இங்கே பேசிக்கொள்கிறார்கள். ஆபரேசன் செய்திருந்தால் அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்டர் யார், அல்லது செத்திருந்தால் உடல் எங்கே, எரித்தார்களா என்று இப்பொழுது பொலிசாரும் இராணுவத்தினரும் தேடித் திரிகின்றனர்''

நடராசன் நெஞ்சு ஒரு கணம் துணுக்குற்றது. முகம் கறுத்தது. திரும்பி ஊர்வலத்தைப் பார்த்தான். கடைசிப் பகுதி கடந்து கொண்டிருந்தது.

''உயிரைக் காத்த டாக்டரை விடுதலை செய்''

ஒருவன் குரல் எழுப்பினான்.

''விடுதலை செய்''

பல குரல்கள் ஒருமித்து ஒலித்தன. நடராசன் சிந்தனை உயர்ந்து நின்றது.

குமாரசாமியிடம் விடைபெற்றுக் காரில் ஏறுவதற்கு நடைபாதையில் இறங்கினான்.

''கொழும்பிற்கு எப்பொழுது பயணம்?''

''நாளை இரவு''

நடராசன் வீடு சேர இரண்டு மணியாகிவிட்டது. தான் வாங்கி வந்த பொருட்களைக் குமாரனிடமும் அன்னத்திடமும் கொடுத்தான்.

குமாரனை உடைகளை மாற்றி உடுத்தியிருந்தவற்றைத் தோய்த்துக் காயப்போடும்படிச் சொன்னான் தந்தையின் வேட்டி துவாயைக் கொடுக்க அவரைத் தேடினான்.

''சித்தப்பாவிற்குக் கொஞ்சம் காய்ச்சல். சாப்பிட விருப்பமில்லை என்று சொல்லிப் படுத்து விட்டார்''

அன்னம் சொன்னாள். தந்தையின் தூக்கம் கலையாதபடி மெதுவாகத் தொட்டுப் பார்த்துவிட்டு வந்து சாப்பிட்டான். அன்னம் சமைத்த முருங்கைக்காய் கூட்டுக் கறியும் கசப்புக் குறைந்த பாகற்காயும் மாங்காய் சொதியும் சுவையாக இருந்தன. வயிறு நிறையச் சாப்பிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல் சிறிது சோர்ந்தது. வயிறு நிறைந்திருந்தத னால் தூங்கவேண்டும்போலத் தோன்றியது. வராந்தாவில் படுத்திருந்தபடியே வாங்கி வந்த பத்திரிகை, சஞ்சிகைகளை நோட்டம் போட்டான். அப்படியே சிறிது அயர்ந்துவிட்டான்.

## 20

திறந்திருந்த கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டு நடராசன் விழித்தான். சிறிது சோம்பலோடு எழுந்து பார்த்தான்.

இளம்பெண் ஒருத்தி, சேட் போட்டு அரையில் ஸ்கேட் அணிந்திருந்தாள். நெற்றியில் கறுத்தப் பொட்டு காதில் வளையம், இரட்டைப் பின்னல். வலிந்த சிரிப்பை வரவழைத் துத் தன் அழகான பல் வரிசையைக் காட்டிச் சிரித்தாள்.

அன்னத்திற்குப் பழக்கமான பெண் எவளோ தேடி வந் திருப்பாளா? சுற்றுமுற்றும் பார்த்தான், எவரையும் காண வில்லை.

''அன்னத்திடம் வந்தாயா? உட்கார், வந்துவிடுவாள்.''

நடராசன் சாவதானமாகக் கூறிவிட்டுத் திரும்பினான்.

''நீங்க பொன்னம்பலத்தின் மகன் டாக்டர் நடராசன் தானே.''

கல்லூரியில் படிக்கும் பெண்ணின் துணிச்சல் அவள் பேச்சில் ஒலித்தது:

''ஆமாம், நீங்கள் யார்? என்ன வேணும்?''

''மிஸ்டர் வசந்தனைப் பார்க்க வேண்டும்''

''இங்கு வசந்தன் என்று எவரும் இல்லையே''

''இங்கேதான் இருக்கிறாராம். அதுதான் பார்க்க வந்தேன்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் அழுத்தமாகச் சொன்னாள்.

நடராசனுக்கு ஆச்சரியமாயிருந்தது. குமாரனைத்தான் இவள் கேட்கிறாள். சிந்தனையில் பளிச்சென்று ஒரு நினைவு தோன்றியது.

"வசந்தன் என்று எவரும் இங்கேயில்லை. குமாரன் என்று மட்டும் ஒருவன் இருக்கிறான்."

"அவரைக் காட்டுங்கள் பார்க்கலாம்."

"வசந்தனுக்கு நீங்கள் யார்?"

அவள் உதடு ஓரத்தில் ஒரு புன்னகை ஓடி கன்னத்தில் சுழி விழுந்தது. அவள் எதுவும் பேசாது தலையைக் குனிந்து வலது கால் செருப்பால் விட்டம் வரைந்தாள். எந்தப் படித்த பெண்ணிடமும் சில வேளைகளிலாவது வெட்கமும் நாணமும் வந்துவிடுகின்றன.

இந்த அழகான படித்த பெண் பிதுங்கிய விழிகளுடன் கூடிய ஊமையைக் காதலிப்பதா? இதில் ஏதோ தவறு இருக்க வேண்டும். எப்படியும் குமாரனை அழைத்துக் காட்டி விட்டால் பிரச்சனை தீர்ந்துவிடும் என்று எண்ணினான்.

"உட்கார். வருகிறேன்"

நாற்காலியை மீண்டும் காட்டிவிட்டு வீட்டுக்குள், குசினி யில் பார்த்தான். அன்னத்தையும் காணவில்லை. கிணற் றடிப் பக்கமாகச் சென்றான்.

கிணற்றடியில் தன் சேட்டையும் சாரத்தையும் குமாரன் துவைத்துக்கொண்டிருந்தான் புதிய சாரம் கட்டியிருந்தான். அன்னம் உடனேயே தைத்துக் கொடுத்துவிட்டாள். புதிய சேட். குளித்துவிட்டுப் புதிய உடை. தூய்மையான புதிய தோற்றம்.

கையைக் காட்டி நடராசன் அழைத்தான். குமாரன் கையை அலம்பிவிட்டு அவனைத் தொடர்ந்தான். முன் வராந்தாவில் ஏறியபோது தயங்கித் தயங்கி வந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனைப் பார்த்து அதிர்ச்சியடைந்தவளாக அந்தப் பெண் எழுந்து நின்றாள். அவள் தேடி வந்த வசந்தன் அவன் அல்ல என்று ஏங்குகிறாளா?

அவள் கண்கள் அரும்பின. குமாரன் அந்தப் பெண்ணைப் பார்த்து விட்டு நடராசனையும் பார்த்தான். எதற்காக அழைத்தீர்கள் என்று கேட்பது போலிருந்தது.

அந்தப் பெண் குமாரனை நோக்கி முன்னே நடந்தாள்.

வசந்தன் . வசந்தன் இது என்ன கோலம்? என்னைப் பாருங்கோ.''

குமாரன் அவளைப் பார்த்தான். முன்னர் அறிந்திருந்த பெண்போல அவனிடமிருந்து எவ்வித செயலோ உணர்வோ ஏற்பட்டதாகத் தெரியவில்லை

''வசந்தன் என்னைப் பாருங்கோ. உங்களுக்கு என்ன விபத்து நடந்தது? ஏன் கண்ணெல்லாம் இப்படி வந்தது? வசந்தன் வசந்தன்.''

அவன் முகத்தை தன் இரு கரங்களாலும் பிடித்தபடித் திரும்பத் திரும்பக் கேட்டாள். அவனிடம் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை நடராசனையே 'இது என்ன' என்பதுபோல மிரண்டு பார்த்தான்?

''வசந்தன். என்னைத் தெரியேல்லையா. நான்தான் உங்கள் உமா வந்திருக்கிறேன். ஏன் பேசாமல் நிற்கிறீர் கள்? வசந்தன்''

உமா சத்தமிட்டுக் கேட்டாள் அவன் தோள்களைப் பிடித்துக் குலுக்கினாள். மயிரை வருடினாள். நெஞ்சைத் தடவினாள். அவனிடம் எவ்வித சலனமும் ஏற்படவில்லை. நடராசனின் சைகையை எதிர் பார்ப்பவன்போல் நின்றான்.

உமாவின் பேச்சு நின்றது. அவன் முன்னே நின்று விம்மி விம்மி அழத் தொடங்கினாள். கைக்குட்டையைவாயில் வைத்தபோதும் விம்மலை நிறுத்தமுடியவில்லை. கண்ணீர் கன்னத்தில் வழிந்தோடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராசனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. மெலோடிராமா போன்ற துன்பியல் நாடகம் ஒன்றை யதார்த்தமாகக் கண்முன்னே காண்பதுபோலிருந்தது.

உமாவின் விம்மலும் கண்ணீரும் குமாரனது உணர்வுகளை எவ்விதமும் பாதிக்கவில்லை. அவன் அவளைப் பாராது நடராசன் முகத்தையே மீண்டும் பார்த்தான்.

நடராசன் உமாவின் இரு தோள்களையும் பிடித்து நடத்தி வந்து ஒரு நாற்காலியில் அவளை உட்காரச் செய்தான். முதுகை வாஞ்சையுடன் தடவி விட்டு, அவள் கைக்குட்டையைப் பெற்று கண்ணீரைத் துடைத்து விட்டான். அவள் விம்மல் சிறிது சிறிதாகக் குறைந்தது.

அவளருகே ஒரு நாற்காலியைப் போட்டு உட்கார்ந்தான்.

''நீ ஒரு படித்த பெண்ணாகத் தெரிகிறது. இப்படி அழலாமா? என்ன நடந்தது என்று விபரங்களைச் சொன்னால் நான் என்னால் ஆனவற்றைச் செய்யமுடியும். எனக்கே எதுவும் தெரியாது. இப்பொழுது சொல்லு. உன் வசந்தன் யார்? பிறவியாக ஊமையா? இடைப்பட்டு வந்ததா?''

''அவர் ஊமையா யிருக்கவில்லை. கண்கள் இப்படிப் பிதுங்கவில்லை இப்படி என்னைக் கண்டும்..''

அதன் மேல் அவளால் பேசமுடியவில்லை. நெஞ்சு அடைக்க மீண்டும் விம்மி அழுதாள். அவள் பேசத்தக்க நிலை வர மேலும் சில நிமிடங்கள் ஆயின.

''என்னைப் பார்த்து இப்படித் தெரியாதவர் மாதிரி நிற்கிறாரே. ஆறுமாதமாக வீட்டிலிருந்து இவரைக் காணவில்லை. ஒரு நாள் இரவு இரண்டாவது காட்சி சினிமா பார்த்துவிட்டு வருவதாகச் சென்றவர்தான். பின்னர் வீடு திரும்பவேயில்லை. அவர் வீட்டுக்காரரும் நானும் ஏங்கித் தவித்தோம். ஏதாவது விபத்து நடந்திருக்க வேண்டும். அல்லது அவர் இந்தக் கோலத்தில் எல்லாவற்றையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறந்து ஊமையாக இருப்பாரா? அட்வான்ஸ் லெவல்பண்ணி விட்டு வேலை தேடிக்கொண்டிருந்தார்''

''காணவில்லை என்றதும் பொலிசாரிடம் அறிவிக்க வில்லையா?''

''முறைப்பாடெல்லாம் செய்தார்கள். பத்திரிகையில் கூட, 'அம்மா அழுதுகொண்டிருக்கிறார் உடனே வரவும்' என்று விளம்பரம் கூடப் போட்டார்கள். விபத்தில் இறந்த விபரம் தெரியாத நபர் என்று பொலிசார் ரேடியோவில் அறிவித்த வேளையெல்லாம் சென்று பார்த்தார்கள். அப்போதெல்லாம் நான் ஏங்கிக்கொண்டேயிருந்தேன் கடைசியில் அவரை இப்படிக் காண நேர்ந்ததே என்றுதான் கவலை.'

அதற்குமேல் அவளால் பேச முடியவில்லை. மீண்டும் விம்மி அழுதாள்.

''இங்கே இருக்கிறார் என்று யார் உனக்குச் சொன்னது?''

அவள் அழுகை சிறிது நேரத்தில் தணிந்ததும் கேட்டான்.

''என் தோழி ஒருத்தி அவரைப் போல ஒருவர் இந்த விலாசத்தில் இருக்கலாம் என்று தனக்கு எவரோ தெரிவித்ததாகக் கூறினாள். நானும் சந்தேகத்துடன்தான் வந்தேன். வீட்டுக்காரர் எவருக்குமே தெரியாது. வீட்டில் தாயார் இப்பொழுதும் அழுது கொண்டேயிருக்கிறார். இந்த நிலையில் பார்த்தால் என்ன செய்வாரோ தெரியாது.''

''யார்?''

''தாயார்''

''மாமி என்று சொல்லுவதுதானே''

நடராசன் மெல்லிய சிரிப்போடு சொன்னான்.

அவள் கண்ணீரிடை மெல்லிய நாணம் ஓடி மறைந்தது. நடராசன் மீண்டும் தொடர்ந்தான்.

''மாமிக்குத் தெரிந்த காதலா, தெரியாத காதலா?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தெரியாது, அவருக்கு வேலையே கிடைக்கவில்லை, வேலை கிடைத்த பிறகு தான் வீட்டில் தெரிவிப்பதாகச் சொல்லியிருந்தார்.'

''கல்லூரிக்குப் போகும் வேளை கண்ணம்மா என் காதலி என்ற பாரதி பாடல்களை அடிக்கடி என்னைக் கண்டதும் முணுமுணுப்பார். முதலில் வெறுத்தேன். பின்னர் அவர் குரலில் மயங்கினேன். 'வீணையடி நீ எனக்கு மேவும் விரல் நானுக்கு' என்று அடிக்கடி பாடி என்னை மயக்கிவிட்டார். பாரதி பாடலெல்லாம் அவருக்கு மனப்பாடம். அவருக்கு நல்ல ஞாபக சக்தி இருந்தது. தற்போது இனிய தமிழ்க் குரலும் போய், பழைய நினைவும் போய்விட்டது.''

''இந்த நிலையில் இனியும் காதலா?''

நடராசன் கேட்டதும் அவள் மீண்டும் அழுதபடிச் சொன்னாள்;

''நீங்கள் டாக்டர் தானே. ஏதாவது வைத்தியம் செய்து அவரைப் பேசப் பண்ணிவிடுங்கள். அதுவே போதும். மற்ற தெல்லாம் நான் பார்த்துக் கொள்வேன். ஏதோ விபத்து அதிர்ச்சியில் அவரால் பேச முடியாது போய் எல்லா வற்றையும் மறந்துவிட்டார். மருத்துவம் எவ்வளவு வளர்ச்சி யடைந்தாகச் சொல்லுகிறார்கள். இவரை மாற்றிவிடுங்கள், உங்களுக்குக் கோடி புண்ணியம் கிடைக்கும்''

'பார்க்கலாம்''

''அப்படிச் சொல்லவேண்டாம் டாக்டர். நீங்கள் நினைத் தால் மாற்றி விடலாம். இடையில் இவ்வாறு ஏற்பட்டது தானே. நான் நிம்மதியாக உறங்குவதற்கு உண்மையைச் சொல்லுங்கள்'

கெஞ்சிக் கேட்டாள். பல சினிமாக்களில் விபததில் பழையவற்றை மறந்து பின்னர் நினைவு பெற்ற கதைக ளெல்லாம் அவள் நெஞ்சத் திரையில் ஓடின.

''இடையில் ஏற்பட்டதானபடியால் மாற்றிவிடலாம் என்ற நம்பிக்கை எனக்கும் உண்டு எதற்கும் நான் மன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய் ஸ்பெஷலிஸ்ட் ஒருவருக்குக் காட்டி ஆலோசனை பெறுகிறேன்.''

நடராசன் கூறினான்.

யாவற்றையும் பார்த்தபடிக் குமாரன் அப்படியே நின்றான். அவனிடம் டீ வேண்டி சைகை செய்தான். அவன் சென்றான்.

உமா தன் படிப்புப்பற்றியும் பாங்கில் வேலைபெற முயல்வது பற்றியும் விபரமாகத் தெரிவித்தாள். அவனால உழைக்க முடியாது போனாலும் பழைய நினைவுவரின் போதும், தன்னால் காப்பாற்ற முடியும் என்றும் உமா சொன்னாள். குமாரனின் குடும்பம்பற்றியும் கல்லூரியில் படித்து விட்டு உயர் கல்விக்குப் போக முடியாததில் ஏற்பட்ட விரக்தி, தெருச்சுற்றுவதை வைத்து வீட்டில் ஏற்படும் முரண்பாடு பற்றியெல்லாம் சொன்னாள்.

குமாரன் டீ கொண்டு வந்தான்; என்றுமே அறியாத பெண்ணிற்குக் கொடுப்பது போல் நீட்டினான். அவள் கண் கலங்க பெற்றுக் கீழே வைத்து விட்டு எழுந்து நின்றாள். தன் காதில் தொங்கிய வளையத்தைப் பிடித்து அவனுக்குக் காட்டினாள். அவன் முகத்தில் அப்போதும் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை

''அவர்தான் இதை போன பிறந்த நாளுக்கு எனக்கு வாங்கித் தந்தார். இன்று அவருக்கு நினைவில்லை.''

''கண்ணின் மணி போன்றவளே கண்ணம்மா...'' என்றும் பாடினாள். எவ்வித உணர்வும் இல்லை. ''இது அவருக்குப் பிடித்த பாட்டு, என்னைப் பார்த்து அடிக்கடி பாடுவார். கண்ணம்மா என்றும் செல்லமாக அழைப்பார்'' மீண்டும் கலங்கினாள். மார்கழி மாத தெற்கோட்ட மழை போல விட்டு விட்டு அழுதாள்.

நடராசன் அவளுக்கு ஆறுதல் கூறினான்.

'பொழுது கருகிறது. தின்னவேலிக்குத் தனியப் போவாயா?''

''பஸ்ஸில் நான் போய் விடுவேன்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தெருவில் இராணுவ லாரிகளுக்குப் பயமில்லையா?"

"மூட்டைப் பூச்சி, கொசுத் தொல்லைபோல இவற்றோடும் நாங்கள் வாழப் பழகி விட்டோம்."

உமாவின் பதிலில் அலட்சியம்.

உமாவைப் படலை வரை அழைத்துச் சென்று வழியனுப்பினான். அவள் கடைசியாகச் சொன்னாள்:

"வீட்டார் எவருக்குமே சொல்ல மாட்டேன். என்னுடைய வாழ்க்கை உங்கள் கையில்தான் இருக்கிறது..."

நெஞ்சடைத்து அவள் சிவந்த கண்களில் மீண்டும் நீர் நிறைவதை மங்கிய ஒளியில் நடராசன்பார்த்தான். நனைந்த கைக்குட்டையால் கண்களைத் துடைத்தபடி அவள் சென்றாள்.

நடராசனின் மருத்துவ வாழ்க்கையில் எத்தனையோ விபத்துகள், ஆபரேசன்கள், மரணங்கள், அவை ஏற்படுத்தும் கண்ணீரையெல்லாம் பார்த்திருக்கிறான். ஆயினும், இச் சம்பவமும் அப் பெண்ணும் அவன் நெஞ்சில் ஏற்படுத்திய தாக்கம் போல எதையும் அவன் நெஞ்சு அனுபவித்ததில்லை.

புண்பட்ட நெஞ்சோடு சென்று தந்தையைப்பார்த்தான். அவரது காய்ச்சல் அதிகரித்திருந்தது. எழுப்பிச் சில பில்லைகளைக் கொடுத்துக் குடிப்பதற்கு நீரும் கொடுத்தான்.

தன் வீட்டுக்குச் சென்ற அன்னம் ஏழுமணி அளவில் திரும்பினாள்.

"நீங்க நித்திரையாயிருந்தீங்க சொல்லி விட்டுப் போக முடியவில்லை. டீ சாப்பிட்டீங்களா?"

"ஆமாம்"

அன்னம் தந்தையாரைக் கவனிக்கச் சென்றாள்.

குமாரனது வைத்தியத்திற்கு மறுநாள் எப்படியும் உரிய டாக்டர் எவரையாவது தேடிஇங்கேயேஉடனடியாக ஏற்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய வேண்டும் என்ற எண்ணம் நடராசன் மனத்தில் உறுதியாயிற்று.

## 21

குமாரன்-உமா பற்றிய சிந்தனை எவ்வேலையையும் செய்யவிடாது நடராசனின் மனத்தை உறுத்தியது. அந் நினைவுத் தொடர் அறுந்து போகும் விதமாகத் திடீரென மகாதேவன் அங்கு வந்தான்.

அவர்கள் வீட்டிற்கு இரு தடவை சென்றதற்கு மரியாதை காட்டுவதற்காக வந்ததாகவே நடராசன் எண்ணினான். துன்ப நினைவிலிருந்து விடுபட்டு ஏதாவது அரசியல் விஷயங்கள் பற்றி அறியலாம் என்ற நினைவுடன் உட்காரச் செய்தான்.

''அம்மாவிற்குக் காய்ச்சல் அடிக்கிறது. வாந்தியும் எடுக்கிறார். சாப்பாட்டுக்கு மனமேயில்லை. அதுதான் வந்தேன்''

''இது மூன்று நாள் புளூ. யாழ்ப்பாண ஆஸ்பத்திரியிலேயே சொன்னார்கள். அப்பாவிற்குக்கூட காய்ச்சல். படுத்திருக்கிறார். கவலைப்பட எதுவும் இல்லை. இரண்டு நாளில் சரியாகிவிடும். போதிய தண்ணீர் குடிக்க வேணும்''

சர்வ சாதாரணமாகச் சொல்லிவிட்டு உள்ளே சென்று வைட்டமின் பில், பனடோலுடன் சஸ்டயின் டின் ஒன்றையும் கொண்டு வந்து விபரம் கூறி நடராசன் கொடுத்தான்.

''இது அதிக விலையாயிருக்குமே. நாங்களே வாங்கிக் கொடுப்போம்.''

மகாதேவன் டின்னை வாங்கத் தயங்கினான்.

''பரவாயில்லை''

வற்புறுத்தி நடராசன் திணித்துவிட்டுச் சொன்னான்:

''இன்றைக்கு ஊர்வலம் பார்த்தாயா''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பார்த்தேன். நாளை தொடக்கம் யுனிவர்சிட்டியில் உண்ணாவிரதம் இருக்கப் போகிறார்கள்.''

''அதற்கு நீங்கள் எதிர்ப்போ''

''அது பாட்டாளி வர்க்கத்தின் போராட்ட முறையல்ல. குட்டி பூர்ஷ்வாக்களின் போராட்ட வடிவம் மகாத்மா காந்தி கற்றுக் கொடுத்தது. உண்ணாவிரதம் இருப்பதன் வழியாகத் தாம் பாட்டாளிகளல்ல குட்டி பூர்ஷ்வாக்கள் என்ற தம் வர்க்க சுபாவத்தையும் அவர்கள் காட்டிக்கொள் கிறார்கள்.''

''எப்படியும் இந்த முறையாலும் தம்மை வருத்தி அதன் மூலம் சமுதாயத்தின் அரசியல் உணர்வை உயர்த்த முடி கிறதுதானே. நான் சிறுவனாக இருந்தபோது நடந்தது இன்றும் நினைவில் இருக்கிறது. மகாத்மாகாந்தி உண்ணா விரதமிருக்கிறார் என்றால் இந்தியா பூராவும் பொங்கி எழும். அதற்கு ஆங்கில ஏகாதிபத்தியமே நடுங்கியது''

நடராசன் உணர்ச்சியோடு சொன்னான்.

''அதனால்தான் அங்குள்ள முதலாளிகளிடம் அரசைக் கொடுத்து விட்டுத் தன் மூலதனத்தை வைத்து வெள்ளைக் காரன் ஆளத் தொடங்கினான். இன்றும் பாட்டாளி அங்கே தலையெடுக்கவே முடியவில்லை. ஒரு வேளைச் சோற் றோடு அங்கும் இங்கும் பாட்டாளி உண்ணாவிரதமிருக் கிறான். அந்த நிலை இங்கு வேண்டாம் என்று பார்க்கி றோம். இத்தகைய போராட்ட முறைகள் பாட்டாளியின் போர்க் குணத்தை மழுங்க அடிக்கின்றன.''

எந்தக் கேள்விக்கும் பதில் வைத்திருப்பதுபோல மகா தேவன் பேச்சு இருந்தது.

''இதையும் எதிர்த்துப் பேசுகிறாய். ஆயுதம் எடுத்துக் கெரில்லாத் தாக்குதல் நடாத்துவதையும் எதிர்க்கிறாய். இளம் வயதினர் கொடுமைகளைக் கண்டு கொதிக்கின்றனர். துடிக்கும் இளவயதில் அவர்களை ஞானியாகப் போகச் சொல்லுவதா?''

''இது எப்படிக் கெரில்லா யுத்தமாகும்? அது பாட்டாளி களின் போர்த் தந்திரம். போராட்டத்தின் ஆரம்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டத்தில், பலமான எதிரியை நேரடியாகத் தாக்க முடியாத காலத்தில், திடீர்த் தாக்குதலால் எதிரியைப் பலவீனமாகக்கும் முறையாகும். ஒரு கால கட்டத்தில் பெரிய படையைக் கட்டி எதிரியுடன் போர் தொடுத்து, நேரடிப் போரில் அழித்தொழிக்கும் நோக்கம் கொண்ட ஆரம்ப ஏற்பாடுதான் கெரில்லா போராட்டம். இது என்ன, சிறு சிறுக் குழுவாகப் பிரிந்து இப்போதே அவர்களுக்குள்ளேயே கெடுபிடி தொடங்கி விட்டது.'

"மற்றக் கட்சிகளில் பிரிவு இல்லையென்று கூற முடியுமா?"

"சித்தாந்த கட்சிகளில் கோட்பாடுகளில் பிரிவது வேறு. தனி நபர் குரோத, விரோதங்களில் புகழைத்தேடிப் பிரிவது வேறு. பாட்டாளிகளின் கட்சி விஞ்ஞான பூர்வமான கட்சி. உழைப்புச் சுரண்டலால் பாதிக்கப்பட்ட பகைமை உறவு கொண்ட கட்சி. ஆனால் இவர்களது கட்சிக்கு விஞ்ஞான கோட்பாடு எதுவும் கிடையாது. அதனால்தான் போராட்டத்தில்கூட ஒழுங்கு முறையே இல்லை. ஒரு புறம் மரக்கறி உண்ணாவிரதம்; மறுபுறம் தீவிரவாத வன்செயல் இவர்கள் கூட உண்ணாவிரதத்தை எதிர்ப்பதில்லை. அதுதவிர, தலைமைப் போட்டியில் ஒருவரை ஒருவர் தாக்கி தம் இயக்கத்தையே பலவீனமாக்கிக் கொள்கிறார்கள்."

"நீங்கள் விஞ்ஞானக் கோட்பாடு என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே தவிர, நடைமுறையில் ஒன்றையும் செய்யவில்லையே"

"நாங்கள் நீண்டகாலத் திட்டத்தில் வேலை செய்கிறோம். கிராமப்புறப் பட்டாளிகளைத் தொழிலாளரோடு ஒன்றிணைப்பது அத்தனை சுலபமல்ல"

மகாதேவன் விடைபெற இருந்தவேளை, அன்னம் வந்து டீ கொடுத்து விட்டுச் சென்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22

அவ்வேளை படலைத் திறக்கும் சத்தம் கேட்டது' தொடர்ந்து காலடி ஓசை, ஓர் உருவம் இருளிலிருந்து வெளிச்சத்தில் வந்து நின்றது. நடராசன் உற்றுப் பார்த்தான். முன்னர் பார்த்த முகம்.

அன்று இரவு ரிவால்வரைக் காட்டி அழைத்துச் சென்றவன், கையில் ரிவால்வரில்லை. வேறு நபர் அங்கு இருப்பதைப் பார்த்து விட்டுத் தயங்கித் தயங்கி நின்றான்.

நடராசன் நிலைமையைப் புரிந்து கொண்டு எழுந்தான்.

"வாங்க, உட்காருங்க. இவர் அயல் வீட்டுக்காரர்."

மகாதேவனைக் காட்டி அறிமுகப்படுத்தினான்.

"இவர் நண்பர் என் பேசன்ட். அதுதான் வந்திருக்கிறார். இவரது பெயர்... மறந்து விட்டேன்..."

நடராசன் இழுத்தான்.

' செல்வராசா"

"யெஸ் செல்வராசா... இப்பொழுதுதான் நினைவு வந்தது நாங்கள் அரசியல் பேசிக் கொண்டிருக்கிறோம். இன்று நடந்த ஊர்வலம் பற்றி, நாளை உண்ணா விரதமாம், அதை இவர் வரவேற்கவில்லை"

செல்வராசா என்பதே அவன் தற்காலிகப் புனை பெயர் என்பதை நடராசன் அறிவான்.

மகாதேவனைத் திருப்திப் படுத்தவே ஒரு பெயரைக் கூறச் செய்தான்.

செல்வராசா எதுவும் கூறாது ஒரு வரட்டுப் புன்னகையை உதிர்த்தான்.

"உங்கள் கட்சி அமைப்பு, போராட்டம் விஞ்ஞான பூர்வமானதல்ல, தேசிய விடுதலைப் போராட்டத்தோடு சோஷ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசப் புரட்சியையும் ஒன்றிணைக்க வேண்டும் என்கிறார் இவர். உங்கள் கருத்து என்ன?''

எதுவும் பேசத் தயங்க வேண்டியதில்லை என்ற விதமாக நடராசன் அடி எடுத்துக் கொடுத்தான்.

''எங்கள் கட்சியிலேயே அப்படிப்பட்ட கருத்து இல்லையென்று சொல்லமாட்டேன். ஆனால், நடைமுறையில், தேசிய விடுதலையின் பின், அடுத்தபடியாகத்தான் சோஷலிசப் புரட்சியை நடத்த முடியும்.''

செல்வராசா சாந்தமாகவே கூறினான்.

''தேசிய விடுதலைக்குத் தலைமைதாங்க தமிழ்த் தேசிய முதலாளிகள் இருக்கிறார்களா? ஒரு சில தமிழ் முதலாளிகளும் சிங்களச் சந்தையையே நம்பியிருக்கிறார்கள். சோஷலிசப் புரட்சியை நடத்த தொழிலாளர்கள், பாட்டாளிகள் உங்கள் அணியில் இருக்கிறார்களா?''

உடனே புதியவரின் அரசியலைக் கண்டு கொண்ட மகாதேவன் கேட்டான்.

செல்வராசா போன்றவரின் கருத்துகள், விவாதங்கள் அவனுக்குப் பழக்கமானவையாகவே தெரிந்தது.

''அரசுக்கு அடிக்கடி தொல்லை கொடுப்பதனால் அதைப் பலவீனப் படுத்த முடியும். இளைஞர்கள், மாணவர்களால் கூடத் தேசிய எழுச்சியை ஏற்படுத்தி மக்களின் ஆதரவுடன் வெற்றி பெறலாம். இன்று உலகிலே எத்தனையோ நாடுகளில் மாணவர்களே மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஈரானைப் பார்க்கலாம். மாணவர் போராட்டமே வலுப் பெற்று ஷாவின் ஆட்சியை வீழ்த்தியது.''

செல்வராசா சிறிது உணர்வோடு இத்தடவை பேசினான்.

'மாணவரின் ஆர்ப்பாட்டம், இளைஞரின் தீவிரவாதம் மூலம் தேசியவிடுதலை பெற கனவு காண்கிறார்கள். ஏகாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தியங்கள் நுழைந்து நாட்டைப் பிரிப்பதற்குத் தான் தீவிர வாதிகள் வழி வகுக்கிறார்கள்''

''எப்படியென்றாலும் எமக்குத் தமிழ் ஈழம் கிடைத்தால் போதும்''

செல்வராசாவின் பதில் மகாதேவனைத் திகைப்படையச் செய்தது. சிறிது நேரம் பேசாமல் இருந்தான்.

''என்ன பதில் கூற முடியவில்லையோ?''

நடராசன் சிறிது கேலியாகவே மகாதேவனைப் பார்த்துக் கேட்டான்.

''அந்தளவிற்கு இறங்குவதென்றால் நான் எதுவும் கூறுவதற்கில்லை. இது குரங்கிடம் அப்பத்தைப் பகிரப் பூனைகள் தந்தது போன்ற கதையாகத்தான் முடியும்''

மகாதேவன் 'இப்படிக் கூறுபவரோடு என்ன விவாதம்.' என்று காட்டுவதாக எழுந்தான். நடராசனும் அவனைத் தடுக்கவில்லை. செல்வராசா ஏதாவது காரணமாகவே வந்திருப்பான் என்பதை நினைத்து, மகாதேவன் விரைவில் புறப்படுவதையே நடராசனும் எதிர்பார்த்திருந்தான்.

''காலையில் வந்துபார்ப்பதாக அம்மாவிடம் சொல்லு.''

மகாதேவன் படலையைத் திறக்கும் வேளை நடராசன் சொல்லி அனுப்பினான். பின்னர் வந்து செல்வராசா அருகே உட்கார்ந்தான்.

''விஷயம் என்ன? இனிச் சொல்லலாம். பேஷண்ட் எப்படி?''

அடித்தொண்டையால் மென்மையாகக் கேட்டான்.

''அதற்காகத்தான் வந்தேன். இன்னும் எழுந்து நடக்க முடியாத நிலை.''!

''அண்டிபயட்டிக்ஸ் ஒழுங்காகக் கொடுக்கிறீர்களா?''

''ஆமாம், காய்ச்சலும் இருக்கிறது. சீழ் பிடித்திருக்கலாமோ என்று பயப்படுகிறோம்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அன்றிரவு போதிய பாதுகாப்பில்லாமல் தானே ஆபரேசன் செய்தோம். என்றாலும் இளம் வயது. விரைவில் காயம் ஆறிவிடும் கவலைப்பட எதுவும் இல்லை."

"அதுவரை நீங்கள் எங்கும் போக முடியாது. ஆபத்துக்கு எமக்கு வேறு டாக்டர் எவரும் இல்லை. அது தவிர மற்றோர் டாக்டரையும் ஆபத்தான பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துள் மாட்டி விடுவதும் நல்லதல்ல."

நடராசன் அத்தகைய ஆணை ஒன்று வரும் என்று கன விலும் எண்ணவில்லை. மறுநாள் பயணத்திற்காக டிக்கெட் கூட வாங்கி வீட்டுக்கும் அறிவித்திருந்தான் எப்பதிலும் கூறாது ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கினான்.

"இது என் முடிவு மட்டுமல்ல எங்கள் குழுவினது முடிவு. அது தவிர எல்லா டாக்டர் மேலும் பொலிசார் கண் வைத்திருக்கிறார்கள். நீங்கள் லீவில் வந்து நிற்பது எமக்கு வாய்ப்பாக உள்ளது."

செல்வராசா மீண்டும் வறுபுறுத்தினான்.

அவர்கள் நிலமையை நடராசன் எண்ணினான். திடீர் திடீரென சினிமாவில் காட்டப்படும் 'மொன்ராஜ்' போல பல சம்பவங்கள் மனத்திரையில் ஒன்று மாறி ஒன்றாக ஓடின காயமடைந்தவன் முகுந்தனாயிருந்தால்! மகனை இழக்கும் தங்கம்மாவின் கதறல், குமாரனைக் குணப்படுத்தும்படி உமா அழுது வேண்டியது அவளின் கண்ணீரும் நம்பிக்கையும். அப்பாவின் காய்ச்சல். தங்கம்மா நோயாகப்படுத்திருப்பது.

கொழும்பிலுள்ள அப்போயின்மெண்ட் யாவும் சிறிது சிறிதாக மறைந்து, இங்கு நிற்க வேண்டிய தேவை பூதாகார மாக மனத்தில் எழுந்தது.

"ஒரு வாரம் தங்கினால் போதும், அதற்கிடையில் நாம் வேறு ஏற்பாடு செய்து விடுவோம். கடற்கரைப் பக்கமெல் லாம் வலைபோட்டிருக்கிறார்கள். இன்னும் சில நாளில் எல்லாம் பழசாகிவிடும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் நயமாகச் சொன்னான்.

''சரி. நான் எழுதித்தரும் புதிய மருந்தையும் கொடுங்கள்.''

உள்ளே சென்று தன் லெட்டர் ஹெட்டில் மருந்தின் பெயரை எழுதி வந்தான்.

நன்றி கூறிவிட்டுச் செல்வராசன் புறப்பட்டான். படலை வரை சென்று வழியனுப்பி வந்தான்.

இரவு பூராவும் நடராசனால் தூங்க முடியவில்லை. ஒரே நாளில் ஏற்பட்ட புதிய நெருக்கடிகளெல்லாம் சிந்தனையை மொய்த்துக் கொண்டிருந்தன. சிறிது தூக்கம் வந்த போதும் கனவுகளில் பல சம்பவங்கள் வந்து மோதின.

ஒரு கனவில் காயமடைந்தவன் போல ஒருவன் வந்து தன் தோளைக் காட்டுகிறான். இரத்தம் வடிந்து ஓடுகிறது. அவன் சொல்லுகிறான் :

''நான்தான் முகுந்தன். அம்மாவின் உயிருக்காக என்னைக் காப்பாற்றுங்கள்.''

எம் விருப்பங்களே பெரும்பாலும் கனவாகத் தோன்றுகின்றன என்று பிராய்டு கூறிய கருத்து அவன் நினைவில் ஓடி மனத்தைச் சாந்தப்படுத்தியது.

## 23

காலை உணவு முடிந்ததும் தங்கம்மாவைப் பார்க்க நடராசன் சென்றான்.

சத்தியன் அவனைத் தாயார் படுத்திருந்த அறைக்கு அழைத்துச் சென்றான்.

முதுகுப் புறத்திற்குத் தலையணையை வைத்துச் சுவரில் சாய்ந்தபடிக் கட்டிலில் உட்கார்ந்திருந்தாள். அங்கோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றோர் பெண்ணும் நின்றாள். தன் மகள் கமலம் என்று தங்கம்மா அறிமுகப்படுத்தினாள்.

''அம்மாவின் செத்த வீட்டில் உங்களைப் பார்த்தேன்.'

கமலம் சிரித்தபடிக் கூறினாள். நடராசன் உட்கார ஒரு நாற்காலியை எடுத்துப் போட்டாள்.

நடராசன் தங்கம்மாவைப் பரிசோதித்தான். கண், நாவைப் பார்த்துவிட்டு ஸ்ரெதாஸ்கோப்பை காதில் மாட்டி நெஞ்சு, முதுகுப்புறத்தைப் பரிசோதித்தான்.

''ஒன்றும் இல்லை. டீ, தண்ணீர் குடித்துக் கொண்டு படுத்திருங்கள். நாளை எல்லாம் சுகமாகிவிடும்.''

''வாயெல்லாம் கச்சலாயிருக்கு. சாப்பாட்டிற்கே விருப்பமில்லை.''

''அப்படித்தான் இருக்கும்.''

''அப்பாவிற்கும் காய்ச்சலாம். எப்படி இருக்கிறார்?''

தங்கம்மா கேட்டாள்.

''உன்னைப் போலவேதான், மூன்று நாள் புளு. நாளைக்குச் சுகமாகிவிடும். என்ன தங்கம் உனக்குச் சுகயீனமென்றால் மகளைக் கூப்பிட வேண்டியிருக்கு. பெடியங்களுக்கு வயதாயிற்று. உன்னைப் பார்க்கவும் இரண்டு மூன்று மருமகள்களைக் கொண்டு வந்து வீட்டிலேயே வைத்திருப்பது தானே ''

''நாங்கள் சொல்லுவதை இந்தப் பிள்ளைகள் கேட்கிறார்களா? மூத்தவன் சவுதி அரேபியாவில். அவனுக்குக் கலியாணம் முடியாமல் எனக்கு எதற்கு என்று சத்தியன் சொல்லுகிறான். மூத்தவன் போன மாதம் வந்த போது வீட்டிலை பெண் துணையில்லை ஒரு கலியாணத்தை முடிப்பமென்றால், 'அம்மாவிற்கு வேலைக்காரி வேணுமென்றால் ஐநூறு ரூபா சம்பளத்திலை ஒரு வேலைக்காரியை வையுங்கோ. நான் காசு அனுப்புகிறேன்' என்று சொல்லிக் கேலி செய்துவிட்டுப் போய்விட்டான். முகுந்தன் இப்பிடிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்விட்டான். அவனைப் பற்றித்தான் ஒரே கவலை. சோர்ந்து படுத்தால் கனவில் அவன்தான் வருகிறான்.''

''அவனைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்பட வேண்டாம் என்று சொன்னேனே.''

''உங்களுக்குத் தெரியாது. யாழ்ப்பாணத்தில் ஒரு காலத்தில் குமர்ப் பெண்களை வீட்டில் வைத்திருப்பதைப் பற்றித்தான் தாய்மார் கவலைப்பட்டார்கள். இப்பொழுது இளம் பொடியங்களை வைத்திருப்பதுதான் பெரும் கவலை யான விஷயம். இளையவன்கூட எப்பொழுது மாட்டுப்பட்டு விடுவானோ தெரியவில்லை. அது மற்றொரு பயம்.''

'இளம் வயதில் துணிச்சலாகத்தானே இருப்பார்கள். நீங்கள் பயப்பட என்ன இருக்கிறது?''

''உங்களுக்கு இங்கே நடப்பது எதுவும் தெரியாது. திடீரென டிரக்கில் வந்து ஒரு படை இங்கே குவியும் வீடெல்லாம் தேடுவார்கள். வீட்டின் காவல் நாய்கள் குரைத்தால் எவ்வித இரக்கமுமின்றி ஒரேயடியாகச் சுட்டுக் கொன்று விடுவார்கள். சிங்களத் தமிழிலும் அதட்டி அட்ட காசம் செய்வார்கள். 'முகுந்தன் எங்கே, காட்டித் தா' என்று எங்களைக் கேட்கிறார்கள். வெளியே தூங்கும் படம் சிவகுமாரனுடையது என்றதும் உடைக்கப் போனார்கள். சத்தியன் 'தொடப்படாது' என்று சண்டைக்குப் போய் விட்டான். பிறகு விட்டு விட்டுப் போன போதும் அதை நினைத்தாலே தூக்கம் வராது. 'நீ மற்றொரு புலியா' வேட்டையாட வருவோம்' என்று சொல்லிவிட்டுப் போனார் கள் ஆர்மிக்காரர் செய்யிற கொடுமைகளைப் பார்த்தால் முகுந்தன் செய்கிறது சரிபோலவும் தெரியுது.''

தங்கம்மா தன் நோயையும் மறந்து சொன்னாள். பின்னர் பல்கலைக் கழக மாணவர்கள் விடுதி இல்லாததால் கிராமத்தி லுள்ள வீடுகளில் தங்கியிருந்து படித்து வருவதையும் ராணுவத்தினர் அந்த வீடுகளில் நுழைவதால் எல்லோரை யும் வெளியேறும்படி வேண்டுவது பற்றியும் சொன்னாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது அச்சத்திற்கு நியாயமான காரணங்கள் இருந்த போதும் நடராசன் சமாளித்து ஆறுதல் கூறினான்:

"பிள்ளைகள் வளர்ந்து விட்டால் தங்கள் வழியாகவே போவார்கள். அவர்கள் போக்கை எவராலும் மாற்ற முடியாது. எப்படியானாலும் தங்கம் உன் பிள்ளைகளைப் பார்த்து நானே பொறாமைப்படுகிறேன்"

"உங்க பிள்ளைகளுக்கு என்ன குறை. ஒன்று டாக்டர், மற்றவன் இஞ்சினியர், மறுதடவை வரும்போது அவர்களை அழைத்து வந்து காட்டுங்கோ, பார்க்க ஆசையாயிருக் கிறது."

"அவர்கள் ஆற்றோடு ஓடும் சருகாக இருக்கிறார்கள். எதிர் நீச்சல் போடும் உன் பிள்ளைகள் போல என்னால் வளர்க்க முடியவில்லை."

"இரண்டு வயதான பிள்ளை ஒன்றை நோய்க்குப் பறி கொடுத்தேன். பதினெட்டு வயதில் மற்றொருவன் வீட்டை விட்டே போய்விட்டான், மகாதேவனிலும் எனக்கு நம்பிக்கை யில்லை. பெற்ற தாய்க்குத்தான் பிள்ளைகளைப் பறிகொடுக் கும் துன்பம் தெரியும்."

கமலம் கோப்பி கொண்டுவந்து கொடுத்தாள். அத னோடு பயித்தம் பணியார உருண்டையும் இருந்தது. இவற் றைச் சாப்பிட்டு எத்தனை வருடம் ஆயிற்று என்ற எண்ணத் தோடு சாப்பிட்டான். கமலத்தின் குடும்பம், பிள்ளைகள் பற்றி விசாரித்தான். பின்னர் விடை பெற எழுந்தான். அப் போது தங்கம்மா மீண்டும் சொன்னாள்:

"அந்தப் பிள்ளை குமாரனை மறந்துவிட வேண்டாம். காலையில் கிணற்றடிப் பக்கமாகக் கடந்து வந்து என்னைத் தொட்டுப் பார்த்து விட்டுப் போனான். அதுவும் என்னுடைய மற்றொரு பிள்ளை போலத்தான்."

தங்கம்மாவின் குரல் நயமான வாஞ்சையுடன் ஒலித்தது.

"உன் வேண்டுதலை நான் மறக்கவில்லை. அவன் நோய் பற்றி மனநோய் டாக்டர்களுடன் ஆலோசனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தி அறிந்து கொள்ளும் விஷயமாகவே இப்பொழுது யாழ்ப்பாணத்திற்குப் புறப்படுகிறேன். அவன் யாழ்ப்பாணத்திற்கோ, கொழும்பிற்கோ வரத் தயாராயில்லை. அதுதான் பெரிய பிரச்சனை.''

''அந்தப் பிள்ளையின் செய்கை எல்லாமே விசித்திரமாகவே இருக்கிறது. தபாற்காரனைக் கண்டாலே பயந்து, நடுங்கி, ஓடி ஒளிக்கிறான்.''

''அப்பிடியா?'' என்று வியப்போடு கூறிவிட்டு நடராசன் தொடர்ந்தான்:

''இது இடையிட்டு வந்த மனநோய்தான். எப்படியும் அவனை நன்கு பரிசோதித்த பிறகே நலமாக்குவது பற்றிச் சொல்ல முடியும்.''

''நீங்கள் எப்பொழுது பயணம்?''

''அப்பாவிற்கும் காய்ச்சல். சிலநாள் பார்த்துப் போகலாம் என்றிருக்கிறேன்.'

தன்னையும் நினைத்தே 'உம்' கூட்டிச் சொன்னான். தனக்காகவுமே நடராசன் பிரயாணத்தைத் தள்ளிப் போடுகிறான் என்று தங்கம்மா உள்ளூற எண்ணிக் கொண்டாள். முதற்காதல் என்றும் அழியாது. இதயத்தின் அடியில் எங்காவது ஒட்டிக் கொண்டேயிருக்கும். நடராசன் மட்டும் அதற்கு விலக்கல்ல என தங்கம்மா எண்ணினாள். அவள் இதய மூலையில் எங்கோ ஒரு குளிர்ச்சி ஒரு கணம் ஏற்பட்டது.

சோர்வோ துயரமோ ஏற்படுகின்ற கணங்களிலெல்லாம் தங்கம்மாவின் நினைவு அவனை வந்து அலைக்கழித்திருக்கின்றது. அந்த இளமைக்காலம் எத்தகைய ஆவேசமான ஆசைகளையெல்லாம் தன்னுள்ளே உள்ளடக்கியிருந்தது. தங்கம்மாவின் ஒவ்வொரு செயலிலும், அசைவிலும் ததும்பியிருந்த உற்சாகமெல்லாம் இப்போதும் நேற்றைய நிகழ்வுகள்போல மனத்தினுள்ளே குறுகுறுக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குச் சென்று குமாரனைப் பற்றி சரியான ஆலோசனை பெற்று, தக்க வைத்தியத்திற்கு ஏற்பாடு செய்ய நடராசன் எண்ணினான். எப்படியும் சில நாட்கள் தங்கியே தீரவேண்டும். குமாரனை வெளியே அழைத்துச் செல்லவும் முடியாது. ஆகவே இங்குள்ள டாக்டர் களையே ஏற்பாடு செய்யவேண்டும். வேறு வழியே இல்லை.

யாழ்ப்பாணம் போகும் வழியில், முதல் வேலையாக, அன்றுதான் கொழும்பிற்குப் புறப்படவில்லை என நடராசன் தன் மனைவிக்குத் தந்தி அனுப்பினான். பின்னர், வழியில், பல்கலைக் கழகத்தில் உண்ணாவிரதம் இருக்கும் மாணவர் களைப் பார்ப்பதற்காகச் சென்றான்.

தற்காலிகத் தட்டிப் பந்தல் போட்டு ஒரு பகுதியில் மாணவர்களும் மறுபகுதியில் மாணவியருமாக ஐம்பது பேர் வரை இருந்தனர். முன்புறமெல்லாம் சுலோக அட்டைகள்.

—பயங்கரவாதத் தடைச்சட்டத்தை உடனே நீக்கு.

—இராணுவ முகாமில் தடுத்து வைத்திருக்கும்
மாணவர்களை உடனே விடுதலை செய்.

—எங்கள் விரிவுரையாளரையும் அவர் மனைவியையும் விடுதலை செய்.

—சித்திரவதைகளை நிறுத்து.

—இராணுவத்தளபதி என்ன நீதிபதியா?

—மதகுருமாரை விடுதலை செய்.

இவற்றைப் பார்த்தபோது சமூக நீதி, மனித உரிமை களுக்காக அவர்கள் போராடுகிறார்கள், இது தேவையானது என்றே அவன் மனத்தில் தோன்றியது. மகாதேவன் இப் போராட்ட முறையை ஏற்காதது பற்றியும் எண்ணிப் பார்த் தான். எதுவும் செய்யாது சும்மா இருப்பதிலும் பார்க்க, அவரவர் தகுதிக்கு ஏற்றபடி சிறிதாவது எதிர்ப்புத் தெரிவிப் பது வரவேற்கத்தக்கதே என எண்ணினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனைத் தெரிந்தவர் எவரும் அங்கில்லை. உண்ணா விரத நிகழ்ச்சியைப் பார்ப்பதற்காகப் பலர் வந்து போயினர். அதை நடைமுறைப்படுத்தும் மாணவ மன்றத்தவர் துண்டுப் பிரசுரங்களை வி நியோகித்தனர். அவன் கையிலும் ஒன்று வழங்கப்பட்டது

பிரித்துப் படித்தான். பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் பற்றி அவன் அறியாத சில செய்திகள் அதில் இருந்தன:

பயங்கரவாதத் தடுப்புச் சட்டப்படி எவரையும் பயங் கரவாதி எனக் கைது செய்து 18 மாதங்கள் தடுத்து வைக்கலாம், சித்திரவதை செய்யலாம். சாதாரண சட்டப்படி 24 மணிநேரங்களே பொலிசாரால் தடுத்து வைக்க முடியும்.

நள்ளிரவிலோ அதிகாலையிலோ உங்கள் வீட்டின் முன் ஒரு ஜீப் வந்து நிற்கலாம ஆயுதங்களுடன் இராணுவத்தினர் அதிலிருந்து குதிப்பர். உங்கள் சகோதரனை, மகனை, கணவரை, ஏன் உங்கள் மகளை, தாயைக் கூட உங்கள் முன்னிலையிலேயே தூக்கி ஜீப்பி னுள் எறிவார்கள். எந்த இராணுவ முகாமிற்குக் கொண்டு செல்லப்படுகிறார், குரு நகருக்கோ, ஆனை யிறவுக்கோ, பனாகொடைக்கோ என்பது எதுவுமே உங்களுக்குத் தெரியாது. தர்மகுலசிங்கம் தாயார் இந் நிலையில்...

புதுக்கவிதை போல நீண்ட சுலோகமாக எழுதப்பட் டிருந்த ஒரு பகுதி அத்துண்டுப் பிரசுரத்தில் தடித்த எழுத்து களில் அச்சிடப்பட்டிருந்தது.

**என் அயலவனைக் கைது செய்தார்கள்**
**நான் ஏன் என்று கேட்கவில்லை**
**என் நண்பனைக் கைது செய்தார்கள்**
**நான் ஏன் என்று கேட்கவில்லை**
**இறுதியில் என்னைக் கைது செய்தார்கள்**
**ஏன் என்று கேட்க யாருமே இருக்கவில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வதை சிறிது சிறிதாகப் பரவி உங்கள் வீட்டிலும் நுழையலாம். ஆகவே அதை எல்லோரும் சேர்ந்து எதிர்க்க வேண்டும்' எங்கோ இதைப் போன்ற கருத்தை ஒரு நாவலில் படித்த நினைவு நடராசனுக்கு வந்தது.

புதிய உணர்வுடனும் சிந்தனையுடனும் ஆஸ்பத்திரியைச் சென்று அடைந்தான். நேரே டாக்டர் இராசநாயகத்திடமே சென்றான்.

டாக்டர் இராசநாயகம் நடராசன் மேல் நல்ல மதிப்பு வைத்திருந்தான். ஒரு காலம் நடராசனின் உதவியாளராகவும் பணியாற்றினான். அது தவிர சத்திர சிகிச்சையில் நடராசனுக்கிருந்த திறமையை மட்டுமல்ல நேர்மையைக் கூட நன்கு அறிந்திருந்தான். நடராசன் விரும்பின் தன்னிலும் பார்க்க பல ஆயிரம் ரூபா மாதந்தோறும் தனியார் ஆஸ்பத்திரிகளில் ஆபரேசன் செய்து உழைக்க முடியும். மருத்துவச் சங்கத்தில் இருந்தாலும் அரசாங்க டாக்டர்கள் தனியார் மருத்துவமனைகளில் பணத்திற்காக ஆபரேசன் செய்வதை நடராசன் எதிர்த்து வந்தான். நடைமுறையிலும் அக்கொள்கையைக் கடைப்பிடித்தான். ஆடம்பர வாழ்விற்குப் போதிய பணம் கிட்டாதபோதும் கொள்கைப் பிடிப்பால் அவனுக்கு எங்கும் தனி மதிப்பும் மரியாதையும் இருந்தது. பல டாக்டர்கள் காட்டும் ஆடம்பர வாழ்க்கையை அவனிடம் காண முடியாது.

இராசநாயகத்திடம் தந்தையின் காய்ச்சலால் பிரயாணம் சில நாட்களுக்குத் தடைப்பட்டுள்ளது எனக் கூறினான். அவ்வேளைகுமாரனின்நோய்க் குணங்கள்பற்றியும்கூறிதான் உதவவேண்டியுள்ளது பற்றியும் அவனிடம் சொன்னான். பிறரிடம் அவ்வாறு உதவி கேட்டே அவன் அறியான். அத்தகைய தேவையும் அவனுக்கு ஏற்பட்டதில்லை. இராசநாயகம் உடனே உதவ முன் வந்தான்.

''இது சின்ன விஷயம். காங்கேசன் துறை மனநோய் நிலைய டாக்டர் சற்குணத்தின் 'கிளினிக்' இன்று இங்கு இருக்கிறது. அறிமுகப்படுத்தி ஏற்பாடு செய்கிறேனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாருங்கள்'' என்று கூறியபடியே எழுந்தான். நடராசன் அவனைத் தொடர்ந்து நடந்தான்

டாக்டர் சற்குணத்தின் அறைக்குள் கதவைத்தட்டி விட்டு இருவரும் நுழைந்தனர். இராசநாயகம் மிக உயர்வாகக் கூறி நடராசனை அறிமுகம் செய்தான்.

''உங்களைப் பற்றி ரொம்பக் கேள்விப்பட்டிருக்கிறேன். கண்டதில் பெரும் மகிழ்ச்சி.''

சற்குணம் கைகுலுக்கி வரவேற்று உட்காரச் செய்தான். தான் கவனித்துக்கொண்டிருந்த நோயாளியை வேறு இடத்தில் உட்காரச் செய்தான்.

''நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்.''

குமாரன் பற்றிய நிலைமையையும் தன் நிலைமையையும் நடராசன் கூறி விளக்கினான். 'அழைத்து வாருங்கள்' என்று சற்குணம் கூறுமுன்னரே, நடராசன் நயமாகக் குமாரனை அழைத்து வரமுடியாத சூழலையும் விரித்துச் சொன்னான்.

''எல்லாவற்றிலும் பெரிய பிரச்சனை, அவனை இங்கு அழைத்து வருவதுதான்.''

நடராசனின் வேண்டுதலை சற்குணம் ஓரளவு உணர்ந்து கொண்டான்.

''பரவாயில்லை. நானே உங்கள் வீட்டுக்கே வந்து பார்க்கிறேனே. கிழக்குப்புறமாகச் சுடலைக்குச் செல்லும் தெரு தானே'' என்று தயக்கம் எதுவும் இன்றிக் கூறியபடியே தன் டயரியைப் புரட்டிப் பார்த்தான். பின் தொடர்ந்தான்:

''நாளைக்கு மாலை நாலரை மணிக்கு வரலாம். உங்களுக்கு வசதியா யிருக்குமா?''

''அதே தெருதான். மூன்றாம் வீடு. இதைவிட முக்கியமான வேலை எனக்கு எதுவுமில்லை. இதற்குள்ளேயே மிகவும் சோகமான காதல் கதையும் ஒன்றிருக்கிறது. நாளைக்கு ஓய்வாகச் சொல்லுகிறேன். எங்கள் வீட்டில் நாளைக்கு டீ சாப்பிடுவீர்கள்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மிகவும் சந்தோசம்''

''நோயாளரைப் பார்க்கும் வேளையில் தடைசெய்ததற்கு மன்னிக்கவும்''

நடராசன் தன் கொள்கைப் பிடிப்பின் சிறப்பை அவ்வேளையும் காட்டியபடி எழுந்தான்.

இராசநாயகத்திடமும் நன்றி கூறி வீட்டிற்குப் புறப்பட்டான்.

## 25

மறுநாள் மாலை நாலரை மணிக்குச் சற்குணம் நடராசன் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். சிறிது களைப்பாகவே காணப்பட்டான்.

''களைத்திருக்கிறீர்கள் முதலில் டீ சாப்பிடுங்கள்.''

''இல்லை. பேஷண்டை பார்த்த பின்னர் சாப்பிடலாம்.'',

நடராசன் உள்ளே சென்று குமாரனை அழைத்து வந்தான்.

குமாரனின் கண் மடல்களைக் கீழே மடித்து சற்குணம் பார்த்தான் பின்னர் வாயைத் திறக்கச் செய்து நாக்கை நீட்டச் செய்தான். தன் பாக்கெட்டிலிருந்த 'ரோச் லைட்'டை அடித்து அடி நாக்கைப் பார்த்தான்.

''பெயரென்ன, ஊரென்ன'' என்றெல்லாம் சத்தமிட்டுக் கேட்டான்.

''ஆ...ஏ'' என்ற குரலோசை தவிர எவ்வித பதிலும் வரவில்லை.

''உள்ளே கட்டில் இருக்குத்தானே''

''ஆமாம்''

இருவரும் எழும்பு முன்னர் அன்னம் டீயும் ஒரு தட்டில் கொழுக்கட்டையும் கொண்டு வந்தாள் செம்பிலே தண்ணீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்குணம் கையைக் கழுவிவிட்டு வந்தான். இருவரும் கொழுக்கட்டையைச் சுவைத்துச் சாப்பிட்டனர்:

அவ்வேளை நடராசன் உமா, குமாரனது காதற் கதையையும் பிரிவு, ஏமாற்றம் பற்றியும் சுருக்கமாகக் கூறினான்.

''நானும் இப்படியான ஒரு விசித்திரமான கேசை இது வரை பார்க்கவில்லை. எப்படியும் இவனைப் படுக்க வைத்து உடலைப் பரிசோதிக்க வேண்டும்.''

குமாரனை அழைத்துச் சென்று சேட்டைக் கழட்டச் செய்து கட்டிலில் படுக்க வைத்தனர். பின்னர் கால் விரல் நுனிகளில் குதிக்காலில் ஏற்படும் உணர்ச்சி நிலைபற்றி தட்டி, கிள்ளி சற்குணம் பார்த்தான். குதிக்காலருகே ஆறிய காயம் ஒன்று இருந்தது வியப்பளித்தது. கை விரல்களை நீட்டச் செய்து நகக் கண்களைப் பார்த்தான் குப்புறப் படுக்கச் செய்து பிடரிப் பாகத்தைப் பார்த்தான். அங்கே ஆறிய வடு ஒன்றிருந்தது. பின்னர் நிமிர்ந்து படுக்கச் செய்து அரையில் கட்டியிருந்த சாரத்தை நீக்கி விட்டு முழங்காலில் தட்டினான் அத்துடன் நிறுத்தி விட்டுத் திரும்ப எண்ணிய சற்குணத்தின் மனத்தில் பளிச்செனஒரு சந்தேகம் ஓடியது.

சாரத்தை இழுத்து விட்டு அவன் ஆண் குறியைப் பார்த்தான். அவன் உடல் சிலிர்த்தது. விதைகள் கருகி, காயப் பட்டு ஆறியிருந்தது. நடராசனுக்கு அதைக் காட்டிவிட்டு மேலும் பார்ப்பதற்காகத் தன் சிறு ரோச்சை எடுதது சிதைந்த நிலையிலிருந்த ஆண் குறியைச் சிறிது விலக்கினான்

ஆ, ஊ, ஆ, ஊ' என்று பலத்த சத்தமிட்டபடி, குமாரன் எழுந்து சாரத்தைக் கட்டியபடி ஓடினான். அவர்கள் ஸ்தம்பித்து நின்றனர். இருவரின் மனத்தினுள்ளும் பொங்கிய அதிர்ச்சியினை முகங்கள் காண்பித்தன. பின்னர் தங்களைச் சமாளித்தவாறே சோர்ந்த முகத்துடன் இருவரும் வெளியே வந்து உட்கார்ந்தனர். இருவரும் வெவ்வேறு முறையான சிந்தனையில் ஈடுபட்டனர். இருவர் முகங்களும் சோர்ந்திருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்குணம் மௌனத்தைக் கலைத்தான்.

' இது பயங்கரமான கேசாக இருக்கிறது.'

"நானும் இப்படியிருக்கும் எனக் கனவிலும் எண்ண வில்லை."

நடராசன் கூறினான்.

"ஒன்று மட்டும் உறுதி. பொலிஸார் அல்லது இராணுவத்தினரின் ரோச்சர், வதையாலேயே இந்த நிலை ஏற்பட்டது"

"விதைகள் எப்படிக் காயமடைந்தன"

"எரியும் எலக்டிரிக் பல்பை விதையின் கீழ் வைப்பதும் வதையில் ஒரு முறையாகும்."

நடராசனின் நெஞ்சு ஒரு தடவை அதிர்ந்து இரத்தம் உறைந்தது

"இதனால் பழைய நினைவுகளை இழந்துவிட முடியுமா?"

"பலவிதமான வதைகள் நடைபெறுகின்றன நகக் கண்கள், குதிக்கால்கள், பிடரி, விதைகள், ஆண்குறி எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன."

"இது வெறும் பைத்திய நிலையாக இல்லையே. இப்படி யான நோயாளர் எவரையும் நீங்கள் பார்த்ததில்லையா'

"வதையால் ஏற்பட்ட ஒரு சில ஆரம்ப மனநோயா ளரைப் பார்த்திருக்கிறேன். எவரும் பழைய நினைவை மறந்தவராக இருக்கவில்லை இதே போன்ற விசித்திர கேசை என்றும் நான் பார்த்ததில்லை ஆனால் கொழும்புத் திட்ட ஸ்கொலர்ஸிப்பில் 'சைக்கியாற்றி'யில் ஸ்பெஷலைஸ் பண்ண லண்டனில் படிக்கும் போது எங்கள் புரொபெஷர் இதேபோன்ற சில கேஸ் பற்றிக் கூறியது நினைவுக்கு வரு கிறது. இரண்டாவது உலகயுத்தத்தின் போது, கிட்லர் பிரான்சைக் கைப்பற்றி ஆண்ட காலத்தில், விடுதலைப் படையைச் சார்ந்தவர்கள் பலர் ஜெர்மன் இராணுவத் தினரின் வதையினால் இதே போன்ற குணங்கொண்டவராக மாறியிருக்கிறார்கள். தப்பி ஓடிய ஒரு சிலரைக் கொண்டே இந்த உண்மையை அறிந்தார்கள். புதிய வதைமுறைகளை எல்லாம் விடுதலைப் படையினர் மேல் ஜெர்மன் இரகசிய

இராணுவப் படையினர் பயன்படுத்தினர். பின்னர் நூலகப் புத்தகத்திலும் படித்துப் பார்த்துள்ளேன். இதைப் பற்றிய சினிமாப் படம் ஒன்றையும் பார்த்திருக்கிறேன். பிரெஞ்சுக் காரருக்கும் தம்மொழி இனிமை, பழமைப் பற்று அதிகம். அதற்காகவே ஜெர்மனியர் அவ்வாறு வதை செய்து மறக்கச் செய்தனர் என்றோர் கதையும் உண்டு'

''எத்தகைய வதைகள் பழைய நினைவுகளை மறக்கச் செய்திருக்கலாம்?''

''சரியாகக் கூறமுடியாது. அதுவே எனக்கும் குழப்பமாக இருக்கிறது, விதைகளை எரித்ததினால் பைத்திய நிலை ஏற்பட்டிருக்கலாம். ஆனால் அப்படி இல்லையே. ஆண் தன்மையை இழந்ததால் இப்படி நடிப்பதாகவும் இருக்கலாம் தானே. காதலியும் ஒருத்தி இருக்கும்போது அவளை நேரில் காண்பதும் பிரச்சனையா யிருக்கலா மல்லவா?''

''நான் பல தடவை சோதித்துப் பார்த்துவிட்டேன். அப்படி நடப்பதாகச் சிறிதும் கூறுவதற்கில்லை''

''வதையில் ஒருமுறை இருக்கிறது. ஒரு தட்டில் இருத்தி தொடர்ந்து சுற்றிக் கொண்டே யிருந்தாலும் பழைய நினைவுகளை மறக்க நேரலாம். ஜெர்மன் இரகசியப் பொலிசாரும் இம்முறையைப் பயன்படுத்தி யிருக்கிறார்கள்.''

நடராசன் ஆர்வமாகக் கேட்டான். தான் படிக்கும் காலத்திலும் எவரோ கூறியது அவன் நினைவில் வந்தது.

''தபாற்காரனைக் கண்டே ஓடி ஒளிவதாக எங்கள் வீட்டிலேயும் சொன்னார்கள்.''

நடராசன் திடீரென நினைவு வந்து கூறினான்.

''காக்கி உடையைக் கண்டே பயந்து ஓடியிருப்பான் அதைக் கண்டதும் பொலிசார் அல்லது இராணுவத்தினரின் வதையின் நினைவு வந்திருக்கும். அப்போது ஓடினானே. அதுவும் வதையின் நினைவாலேதான். ஆகவே மனத்தில் மிகவும் தாக்கம்ஏற்படுத்திய நினைவுகள் மட்டும் இடையிடை வருகின்றன. நினைவிலி மனத்தில் படிந்தவை தூக்கத்தில் வரலாம்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அவன் காதலியான உமாவைச் சிறிதும் இவனால் அடையாளம் காண முடியவில்லை. காலப் போக்கில் பழைய நினைவைப் பெற சாத்தியமிருக்கிறதா?''

''எனக்கு நம்பிக்கையில்லை. மற்றொன்று நான் சொல்ல வேண்டும். இவனும் காவலிலிருந்து தப்பியே ஓடி வந்திருக்கிறான். ஆனபடியால் தலைமறைவாகக் கவனமாகவே வைத்திருக்க வேண்டும்.''

சற்குணம் கூறியது நடராசனைச் சிந்திக்க வைத்தது. முகுந்தன் தங்கள் வீட்டில் தன்னைத் தேடி இராணுவத்தினர் இடையிடை பாய்வதைச் சொல்லியதன் காரணமாகவே தங்கம்மா அவனைத் தங்கள் வீட்டிற்கு அனுப்பியதும் நினைவிற்கு வந்தது. தங்கம்மா அப்பாவி. அவளுக்குக் காரணமே தெரியவில்லை. இக் கொடுமைகளை அறிந்தால் குமாரனுக்காகக் கவலைப்படுவது மட்டுமல்ல முகுந்தனுக்கும் இவ்வாறெல்லாம் நடக்கலாம் எனப் பயந்துவிடுவாள். அவன் மனம் பலவாறு எண்ணி சஞ்சலப்பட்டது.

''இவனுக்கு என்ன வைத்தியம் செய்யலாம் என்று சொல்லுகிறீர்கள்.''

நடராசன் கேட்டான்.

'எவரும் அறியாது கவனமாக வைத்திருங்கள். மற்றும் நண்பர்களோடு நான் கலந்து பேசி ஏதாவது செய்ய முடியுமா என்று பார்க்கிறேன். நீங்கள் கொழும்பிற்குப் போகும் போதும், இங்கு வீட்டில் சொல்லிவிட்டுப் போனால்போதும். நான் வந்து கவனித்துக் கொள்ளுகிறேன்.''

''நீங்கள் பொறுப்பெடுப்பது ஓரளவு ஆறுதலாயிருக்கிறது. உங்கள் உதவிக்கு நன்றி.''

குரல் தளதளத்தது நடராசனுக்கு.

''இதெல்லாம் என்ன உதவி. நான் கொழும்பிற்கு வரும் வேளைகளில் உங்களைப் பார்க்கிறேன். அல்லது நிச்சயம் டெலிபோன் செய்வேன்.''

சற்குணம் புறப்படும் போது சுவரோடு ஒட்டி நின்று குமாரன் அவனைப் பார்த்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராசன் நாற்காலியில் அப்படியே அசந்து விட்டான். அவன் நம்பிக்கையெல்லாம் சிதறி விட்டது. தங்கம்மாவின் வாஞ்சையான வேண்டுதல் ஒருபுறம். உமாவின் கண்ணீரும் நம்பிக்கையும் மறுபுறம்.

இது என்ன கொடுமை. இயற்கையால் அல்லது விபத்தால் மனிதனுக்கு உடல் துன்பம் ஏற்படுகிறது. அவற்றைக் குறைக்க சமூகமும் மருத்துவ விஞ்ஞானமும் வளர்கிறது. ஆனால் இது மனிதனுக்கு மனிதனால் சட்ட அனுமதியோடு வேண்டுமென்றே செய்யும் கொடுமை. நீதிமன்றத்தில் நிரூபிக்க முடியாத அக்கிரமம். சில உண்மைகளையோ, தாம் வேண்டும் சில ஒப்புதல்களுக்குக் கையெழுத்துப் பெறுவதற்காகவோ ஒருவனை இம்சைப்படுத்தி, வாழா வெட்டியாக்கிப் பின் சிறைக்குள் அனுப்ப முயல்வதா? இவர்களே மதப்பிரச்சாரமும் செய்கின்றனர். புத்த தர்ம ஆட்சி பற்றியும் மேடைகளில் முழங்குகின்றனர். காதல், அன்பு, கருணை பற்றிப் பேசி அகிம்சைப் பிரசாரம் செய்துகொண்டே கசாப்புக்கடை வியாபாரமும் செய்கிறார்களே. நீதி தேடி மனம் பலவாறு அலைந்தது.

தங்கம்மாவும் உமாவும் மாறிமாறி அவன் நினைவில் வந்தனர்.

அமைதியின்றி வீட்டு முற்றத்தில் உலாவியபடிச் சிந்தித்துச் சிந்தித்து அவனால் எவ்வித முடிவும் வழியும் காண முடியவில்லை.

தந்தையின் காய்ச்சல் குறைந்திருந்தது. அன்னம் சாப்பிட அழைத்தாள்.

அவளைத் திருப்திப்படுத்த சிறிது உண்டுவிட்டுப் படுத்துக் கொண்டான். தூக்கமே வரவில்லை, புரண்டு புரண்டு படுத்தான், உமாவின் கண்ணீர் வடிந்த முகமும் அவள் வாஞ்சையோடு கூறிய வார்த்தைகளும் அவன் கண் முன்னே தோன்றிக் காதில் ஒலித்தன.

நான் ஒரு பெண்ணைப் பற்றியே கவலைப்படுகிறேன். இப்படி எத்தனை இளைஞர்களுக்கு நடந்திருக்குமோ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனைகாதல்கள் கண்ணீராய் மாறியிருக்குமோ. வெளியே சொல்ல முடியாது ஊமைகளாய் எத்தனை இளைஞர்கள் வாழ்கின்றனரோ. மனம் சோர்வடைந்து, கண்கள் அயரும் வரை இவ்வாறெல்லாம் பல சிந்தனைகள் ஓடிக்கொண்டே யிருந்தன.

## 27

கனவில் டிரக்குகள், ஜீப்புகள் வெளியே பிரேக் போட்டு நிறுத்துவது போன்ற ஓசை. பூட்ஸ் கால்கள் அங்கும் இங்கும் ஓடுகின்றன. படலையை எவரோ படபட எனத் தட்டும் ஒலி. பயங்கர ஒலிகள்.

கனவு நிலைமாறி திடுக்குற்று நடராசன் நினைவுக்கு வந்தான். செவியைக் கூர்மைப்படுத்தினான்

படலையைத் தட்டும் பயங்கர ஓசை அப்படியே கேட்டது. பண்பாடில்லாத விதமாகப் படலை உடைந்துவிடும்படியாகத் தட்டும் சத்தம். நாய்கள் விடாமல் பயங்கரமாகக் குரைத்தன. இடையே ஒரு நாயின் அலறல், வெடிச்சத்தத்தின் நடுவே தீனமாகக் கேட்டு மறைந்தது.

எழுந்து மின் விளக்கைப் போட்டான். வீட்டில் அப்பா, அன்னம் குமாரனின் முகத்தில் பயமும் வெருட்சியும். அவன் கிணற்றுப் பக்கமாக நிற்பது மங்கிய ஒளியில் தெரிந்தது. வெளியே இருள் முற்றாக நீங்கவில்லை.

நடராசன் நிலைமையைப் புரிந்து கொண்டான். படலையைப் பாதி திறந்தபடியே 'யார்' என்றபடி எட்டிப் பார்த்தான்.

சுழல் துப்பாக்கி ஏந்தியபடி, காக்கி உடையுடன் இராணுவத்தினர் பலர் அவனை இடித்தபடி உள்ளே நுழைந்தனர். மூன்று இராணுவ டிரக், ஐம்பது இராணுவத்தினர். துப்பாக்கிகளுடன் வீட்டைச் சுற்றி நின்றனர், ஒரு கோட்டையை முற்றுகையிடத் தயாரானவர் போல, நடராசன் திரும்பிப் பார்த்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏ, ஏ, ஏ, ஏ'' என்ற பலத்த ஒலியுடன் குமாரன் கிணற்றுப் பக்கமாக ஓடினான். சில இராணுவத்தினர் அவனைத் துரத்தினர். குமாரன் கிணற்றைக் கடந்து ஓடி விட்டான். இராணுவத்தினரால் கிணற்றைக் கடக்க முடியவில்லை. மீண்டும் படலை வழியே வந்து ஒழுங்கைப் பாதையால் ஓடினர். சுழல் துப்பாக்கியுடன் இராணுவ அதிகாரி ஒருவன் நடராசனிடம் வந்து ஆங்கிலத்தில் அதிகாரத்தோரணையில் சொன்னான்:

''வா, டிரக்கில் ஏறு''

நிலைமையை உணர்ந்து தன்னைச் சுதாகரித்துக் கொண்ட நடராசன்.

''எதற்காக. உன்னிடம் அரஸ்ட் வாரண்ட் ஏதாவது இருக்கிறதா?'' என்று அழுத்தமாகக் கேட்டான்

அந்தர் கேள்வி மூட்டிய எரிச்சலுடன் ''அது எதுமே வேண்டியதில்லை. பயங்கரவாதத் தடுப்புச் சட்டப்படி நாம் சந்தேகிக்கும் எவரையும் அழைத்துச் செல்லலாம்'' என்று ஏளனமாக இராணுவ அதிகாரி பதிலளித்தான்.

''நான் படிக்காதவனல்ல. நான் ஒரு டாக்டர்''

அதிகாரி தன் இடையிலிருந்த பட்டியில் செருகியிருந்த ரிவால்வரை அழுத்தியவாறு எரிச்சலோடு அவனைப் பார்த்தான்.

''அதனால் தான் இவ்வளவு விளக்கம் கூறினேன். ஏறு என்றால் ஏறு.''

''உடுப்பு மாற்றி வருகிறேன்''

''எதற்கும் அனுமதி தர முடியாது, ஏறு''

அதிகாரத் தொனியில் மரியாதையின்றி அதட்டினான். பின்னர் சிப்பாய்களுக்குச் சிங்களத்தில் பணித்தான். சுழல் துப்பாக்கிகளுடன் இருவர் வந்து அவனை முன்னே தள்ளினர்.

அவன் நோயாளித் தந்தையும் அன்னமும் ஏங்கியபடி பார்த்தனர்.

நடராசன் எதுவும் பேசாது டிரக்கின் பின்புறத்தில் ஏறினான். வெளியே தலைதெரியாதபடி உள்ளே இருக்கச்செய்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னர். இரண்டு இராணுவத்தவர் காவலாக இருந்தனர். டிரக்கின் முன் ஆயுதம் தாங்கிய கோஷ்டி கொண்ட ஒரு ஜீப்பும் பின்புறமாக மற்றிரு டிரக்குகளும் தொடர்ந்தன.

ஒழுங்கை முகப்பில் சில இராணுவத்தினர் ஏறிக் கொண்டனர்

''அவன் ஓடி விட்டான்'' என்று சிங்களத்தில் ஒருவன் கப்டனிடம் கூறுவது கேட்டது.

இத்தனைப் பாதுகாப்புடன் அழைத்துச் செல்ல வேண்டிய பயங்கரவாதியா நான் என்று நடராசன் தன்னையே கேட்டுக் கொண்டான் அத்தனை அவமரியாதை அதிகாரம், இழிவான நடவடிக்கையின் போதும் அடிமனம் இந்நாடகத்தைப் பார்த்துச் சிரித்தது.

# 28

நடராசனின் மனத்தை நிலைகுலையச் செய்யும் நிகழ்ச்சிகள் இராணுவ முகாமில் முதற்பாடமாக நடந்தது. கட்டியிருந்த சாரம், போட்டிருந்த 'சேட்' தவிர எப் பொருளும் அவனிடம் இருக்கவில்லை. காலையில் பல் துலக்கி முகம் கழுவவில்லை. கழிவறை செல்லவில்லை இரண்டு, இராணுவத்தினர் சுழல் துப்பாக்கியுடன் முகாம் உள்ளே அழைத்துச் சென்றனர்.

ஒரு சிறு மண்டபத்துள் நுழைந்தனர். காவல் புரிந்த. இராணுவ வீரன் நிமிர்ந்து நின்று சலூட் அடித்து வழி விட்டான். ''கொட்டியா'' என்ற குரல் அவர்களிடமிருந்து வெளியாகிற்று இரு புறமும் சிறுசிறு அறைகள் கொண்ட நடுவராந்தா வழியே நடராசன் அழைத்துச் செல்லப் பட்டான். இருபுற அறைகளிலும் இளைஞர்கள், சிலர் நிர்வாண நிலையில் இறந்தவர்களைப் போல அறையோரங் களில் கவிழ்ந்து கிடந்தனர்.

பூட்ஸ் சத்தம் கேட்டு எட்டிப் பார்த்த இளைஞர்கள் முகத்தில் அனுதாபமும், ஆத்திரமும் தோன்றி மறைந்தது.

நிர்வாண நிலையில் கிடந்தவர்களைப் பார்த்ததும் நடராசனின் இதயம் ஒரு தடவை குளிர்ந்து நடை தளர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சிறு அறையில் அவன் அடைக்கப்பட்டான். போதிய வெளிச்சமற்ற அறை, ஒரு மூலையில் ஒரு வாளி மட்டும் இருந்தது. ஒரு பழைய கிழிந்த பாய் கீழே கிடந்தது. மூத்திரவாடை அடித்தது. வயிற்றைக் குமட்டி ஓங்காரித்தது. குடலே, புறப்பட்டு வெளியே வருவதுபோல அருக்களித்தான். அறைச்சுவரின் சில இடங்களிலே இரத்தக்கறைகள் தெரிந்தன. வசந்தன் நினைவிலே தோன்றினான்.

தன்னை எவராவது கவனிப்பார்கள், விசாரணைக்கு அழைப்பார்கள் என நடராசன் எதிர்பார்த்திருந்தான். எவ் விசாரணை நடைபெறும், எவ்வாறு பதில் சொல்லவேண்டும் என்றெல்லாம் கற்பனையில் எண்ணிப் பார்த்தான் நேரம் கழிந்தது. எவரும் அவனைக் கவனிககவோ, விசாரணை செய்யவோ வரவில்லை.

நாவறண்டது, பசிகூட எடுத்தது. காலைக் கடன்களை முடிக்காதது உடை மாற்றாதது ஒருவித அமைதி யின்மையை ஏற்படுத்தியது. தலை விண்விண்ணென்று வலித்து, மூளையே பற்றி எரிவது போன்ற பிரமை ஏற்பட்டது.

சிந்தனை பலவாறு வட்டமிட்டது குடும்பம், நண்பர் கள், நோயாளர் பிணைப்பிலிருந்து விடுபட்டுத் தனி மனிதனாக வந்துகொண்டிருந்தான். குமாரன், உமா, முகுந்தன் நினைவும் அங்கே அடைபட்டுக் கிடக்கும் இளைஞர்கள் பற்றியுமே வட்டமிட்டு வட்டமிட்டுச் சிந்தித் துக் களைத்து விட்டான்.

நண்பகல் அளவில் முகத்திலே வெறுப்புணர்வு கொப் பளிக்க ஒருவன் ஒரு தட்டில் சம்பலுடன் பாண் (ரொட்டி) துண்டுகளையும் ஒரு கிளாசில் தண்ணீரையும் வைத்து விட்டுச் சென்றான். அதைச் சாப்பிடுவதா விடுவதா என அவன் மனம் போராடியது.

தன் வாழ்க்கையில் முதன்முதலாக ஏற்பட்ட இந் நிலையை நடராசன் எண்ணிப்பார்த்தான். அருவருக்கும் சூழ்நிலை, கரடு முரடான தரை, தலையணையும் இல்லாத பாய், சம்பலும் ரொட்டியும்... வீட்டிலுள்ள ஸ்பிறிங் பெட் காற்றோட்டமான அறைகள், நினைத்த வேளை எதுவும் சாப்பிடத்தக்க, குடிக்கத்தக்க பிரிட்ஸ், சாப்பாட்டு மேசை யாவும் நினைவில் வந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கணம் தோன்றிய மனக்கொதிப்புடன் அறைக் கம்பிகளை இறுகப் பிடித்தான் பின்னர் கைகளை விரித்து அதில் ஏறியிருந்த துருப்பிடித்த இரும்புத்துகளைப் பார்த்தான்.

தங்கம்மா ஒரு நாள் அவன் கரங்களைப் பார்த்துக் கூறியது அவன் நினைவில் வந்தது.

' பிள்ளையார் கோவில் அரளிப் பூப்போல உங்கள் உள்ளங்கை...என்றைக்கும் இப்படியே இருக்குமா?''

உள்ளூற மெல்லிய சிரிப்பு. ஒரு கணமே. பின் மனம் நெருப்புச் சூடுபட்ட எறும்புபோல அங்குமிங்குமாகத் துடித்தது.

எப்படியும் உயிர் வாழவேண்டும், விசாரணையாயினும் சோர்வில்லாமல் நிற்பதற்கு உணவு உண்ண வேண்டும் என்ற நினைவும் எழுந்தது. பலருக்குத் தட்டில் சோறும் போதிய நீரும் எடுத்துச் செல்லப்படும்போது தனக்குமட்டும் ஏன் ரொட்டி தர வேண்டும் எனவும் எண்ணிப் பார்த்தான். தன் அந்தஸ்தை உயர்வாக எண்ணி, பட்டினியிருப்பது தவறு என மனதில் பட்டது.

மனப்போராட்டம் அமைதி யடைந்தும் பாண் துண்டுகளை நீரில் நனைத்து உண்டான். நீரினால் வறண்ட தொண்டையை நனைத்துக் கொண்டான்.

இரவும் அதுவே நடந்தது. காலைக் கடன்களை மனம் அருவருக்க அவ்வறைக்குள்ளிருந்த வாளியினுள்ளே முடித்துக் கொண்டான். ஓங்கரித்து வாளிக்குள்ளே துப்பியபோது கண்களில் நீர் மல்கிற்று.

சிந்தித்து சிந்தித்து மூளை களைத்துவிட்டது அங்கும், பிற இராணுவ முகாம்களிலும் சிறைச்சாலையிலும் இளம் வயதில் துன்புறும் வாழவேண்டிய நூற்றுக்கணக்கான இளைஞர்களை எண்ணிப் பார்த்தான். மனிதர்களின் மனத்தையும், உடலையும் நொறுங்கிச் சிதைக்கிற இந்த வதைக் கூடங்களை வைத்துக் கொண்டு, தர்ம நியாயங்கள் பேசுகிறவர்களின் போக்குகளுக்கு எப்போது முடிவு வரும் என மனம் கொதித்தது.

தன் நிலையை அவர்களோடு ஒப்பிட்டுப் பார்த்தான் தான் குற்றம் செய்தேனா என்ற வினாவும் அவன் அடிமனத்திலிருந்து எழுந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்டரின் விடுதலை வேண்டி நடைபெற்ற இளைஞர்களின் ஊர்வலம், உண்ணாவிரதம் அவன் கண்முன் தோன்றின. வெளியே இவர்களுக்காக நடைபெறும் ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங்களையும் எண்ணினான். உள்ளத்திற்குத் தெம்பு தந்தது. தானும் நியாயத்தின் பக்கமே நிற்பதாக மனம் துணிந்தான்.

மூளைக் களைப்பில் அப்படியே சாய்ந்துவிட்டான்.

கண்ணீரும் கம்பலையுமாக ஒரு கூட்டம். இளம் பெண்கள். சிலர் சேலையுடன். வேறு சிலர் பாவாடை சட்டையுடன். மற்றும் சிலர் சேட்டும் ஸ்கேட்டும். அவர்களுக்கு உமா தலைமை தாங்குகிறாள். அவள் பின்னே செல்லச் செல்ல அந்த இளம் பெண்கள் கூட்டம் அவனை நெருங்குகிறது. கண்களிலிருந்து கன்னங்களின் வழியாக கண்ணீர் வழிகிறது. சிலர் விம்மி அழுகின்றனர். உமா முன்னே வருகிறாள். "என் வாழ்விற்கு என்ன கூறுகிறீர்கள் வசந்தனைக் குணமாக்கித் தருவதாக நீங்கள் கூறிய உறுதிமொழி எங்கே? வசந்தன், வசந்தன், வசந்தன்...' எல்லாப் பெண்களும் கத்துகிறார்கள். காது செவிடாவது போன்ற ஒலி.

நடராசன் திடுக்குற்று விழித் தெழுகிறான். கழுத்தில் வியர்வை வடிகிறது. சேட் தெப்பமாய் நனைந்து விட்டது. ஒரே இருள். வாராந்தாவில் மட்டும் தூரத்து மின் விளக்கின் வெளிச்சம் நேரம் என்னவாக இருக்கும் என்பதே தெரியவில்லை.

அதன் பின்னர் தூக்கமே வரவில்லை. மனைவி பிள்ளைகளின் நினைவு; தந்தையின் நினைவு; தங்கம்மா குடும்பத்தின் நினைவு. யாவும் ஒன்று மாறி ஒன்றாக நெஞ்சினைக் குடைந்தது. கிணற்றடி யோரமாகத் தப்பி ஓடிய வசந்தன் எங்கே போய் மறைந்திருப்பானோ என்ற அச்சம் வேறு மனத்தினை அரித்தது.

## 29

சோர்ந்து களைத்த நிலையில் இராணுவமுகாம் சேர்ந்த மூன்றாவது நாள் நடராசன் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டான்.

ஒரு தனி அறை. ஒரு இராணுவ கப்டன். அவரின் உதவி ஆளான சார்ஜன் இராணுவ உடை அணிந்த காப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரல் ஒருவன் ரைப்பிரட்டருடன் உட்கார்ந்திருந்தான். கப்டனின் மேசையில் ஒரு 'பைல்' இருந்தது. அவற்றைப் பார்த்துவிட்டுத் தலையை நிமிர்த்தினான். கப்டன் பின்னர் தன் ரிவால்வரை எடுத்துப் 'பைல்' மேல் வைத்தான்.

'ஓ டொக்டர் நடராசன்.''

ஆங்கிலத்தில் கூறியபடி கப்டனின் ஏளனச் சிரிப்பு.

''டாக்டர் உங்களையெல்லாம் இங்கு நல்லாய் கவனித்தார்களா?''

நடராசன் எதுவும் பேசவில்லை. மனத்தினுள் ஆத்திரம் கொப்பளித்தது.

''என்ன பேசாமல் இருக்கிறீர், ஏதாவது வாயைத் திறந்து சொல்லும்.''

' என்னைப் பார்த்தாலே தெரியவில்லையா?'' அவரது கலைந்த தலைமயிர், அழுக்கான உடை, வாடிய முகம், லேசான அருவருப்பு மணம் வீசுகிற உடல் இந்தத் தோற்றங்களை மீண்டும் ஒருமுறை பார்த்த காப்டன் சிரித்தான். சார்ஜெண்டும் சேர்ந்து கொண்டான்.

''இங்கு உண்மை பேசவேண்டும். இல்லாவிட்டால் மேலும் புலவித மரியாதைகள் காட்டப்படும்.''

அவனது குரல் அச்சுறுத்தியது, நடராசன் எதுவும் பேசவில்லை.

''என்ன பேசாமல் நிற்கிறாய். அந்த மரியாதைகளை எல்லாம் உனக்குத் தெரியுமா? அல்லது காட்டவேண்டுமா?''

''தெரியும்.'

''நீதிமன்ற விசாரணைகளின்போது பத்திரிகைகளில் வந்தன. படித்திருக்கிறேன். இதெல்லாம் பகிரங்கமான விஷயங்கள்...........அருவருப்பான அநியாயங்கள்......''

'அவற்றையெல்லாம் உனக்கும் தரமுடியும்''

மீண்டும் அதட்டியது அவன் குரல்.

''தெரியும்.''

''நீதிமன்றத்தில் சொல்லலாம். ஆனால், நிரூபிக்க முடியாது.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தெரியும். சாட்சி கிடையாதே. கிடைத்தாலும் நீதி மன்றம் ஏற்றுக் கொள்ளும்படி நிரூபிக்க முடியாது."

"இதுவரை நீதிமன்றத்தில் அம்பலப்படுத்த முயன்ற தெல்லாம் தோல்வி என்று தெரியுமா?"

"தெரியும்."

"உன்னை இங்கேயே இந்த ரிவால்வரால் சுட்டுவிட்டு எரித்துவிட எம்மால் முடியும். ஏனென்றால் நீயும் பயங்கர வாதிகளைச் சார்ந்தவன்."

காப்டன் எழுந்து தன் ரிவால்வரை டாக்டரின் கன்னத் தில் வைத்து உரத்துச் சொன்னான். 'ரெரறிஸ்ட்' என்பதை அழுத்திக் கூறினான். நடராசன் இரத்தம் ஒரு தடவை குளிர்ந்து பின் கொதிப்பாக மாறியது. கைமுஷ்டிகள் அவனையறியாமலே இறுகித் தளர்ந்தன.

"என்ன பேசாமல் நிற்கிறாய்?"

காப்டன் கூறியபடியே மீண்டும் தன் ஆசனத்தில் அமர்த்தான்.

"தெரியும். அப்படி நடந்ததாகக் கேள்விப்பட்டிருக் கிறேன்."

"உன்னை அப்படி இப்போது செய்ய மாட்டோம். நீ ஒரு டாக்டர். உண்மையைப் பேசவேண்டும். பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் உன் விசாரணையை இப்போது பதிவு செய்யப் போகிறோம்."

'.........'

"காயப்பட்ட பயங்கரவாதிக்கு நீ ஆபரேசன் செய் தாயா?"

எந்தத் தயக்கமுமின்றி நடராசன், அவனைப் பார்த் தான்.

"ஆம்."

காப்டனுக்கு அப்பதில் ஆச்சரியமளித்தது.

"அவன் இப்போது எங்கே?"!

"தெரியாது."

"அவன் பெயரென்ன?"

"தெரியாது"

"நீ பொய் சொல்லுகிறாய்" மேசையிலே ஓங்கி குத்தி னான் காப்டன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சின்னையா அல்லது பொன்னையா என்று ஒரு பொய்ப் பெயரைச் சொல்லும்படிக் கேட்கிறாயா?''

நடராசன் குரலிலும் அழுத்தம் இருந்தது.

''ஆளைக்கூட்டி வந்தால் அடையாளம் காட்டுவாயா?''

''கூட்டி வந்தால் நல்லது. இரவில் நான் செய்த ஆபரேசன் வெற்றி யளித்ததா என்பதையும் பார்த்து விட முடியும்''

நடராசன் பதிலில் இருந்த நளினத்தையும் கப்டன் புரிந்து கொண்டான்,

அவன் மனம் நினைத்தது... எவ்வித சந்தேகமுமில்லை. இவ்வளவு துணிவாகப் பதில் சொல்கிற இவன் நிச்சயமாக ஒரு 'கொட்டியா'—புலிதான். இவனை எப்படியும் நானே பொறுப்பெடுத்து விசாரிக்கிற முறையில் விசாரித்தால் உண்மையைக் காண முடியும். இவனை வைத்து ஒரு நல்ல 'கேசை' தயாரிக்கலாம். அந்தக் 'கேசு'க்குள் பத்து பதினைந்து தலைகளையாவது உருட்ட வேண்டும்...மார சிங்கா என்னைப் போல்தான் இங்கு வந்தான் இரண்டு பேரை 'ரோச்சர்' பண்ணி ஒருவனை மேலுலகத்திற்கு அனுப்பினான். அடுத்த மாசமே இண்டர்வியூவுக்குப் போனான், உடனேயே புரமோஷன், தலைநகரிலேயே பதவி எனக்கும் ஏன் அப்படி வரமுடியாது...நல்ல 'கேஸ்' சாமர்த்தியமாகக் கையாள வேண்டும்...

கப்டன் குரலை மாற்றிக்கொண்டான்.

''நீங்கள் ஆபரேசன் செய்த வீட்டைக் காட்ட முடியுமா? டொக்டர், எனக்கு உங்களிடம் எந்தக் கோபமுமில்லை. நானும் உங்களைப் போலவே பிள்ளை குட்டிக்காரன்தான். நீங்கள் வீணாகப் பிடிவாதம் பிடிக்க வேண்டாம். உண்மையைச் சொல்லி விடுங்கள். உங்களைப் போன்ற கனவானை இப்படிப் பார்க்க எனக்கும் மனச்சங்கடமாயுள்ளது. ஐ ஆம் சோ ஸாரி டொக்டர்...''

''இரவு இரண்டு மணிக்கு மேல் ரிவால்வரைக் காட்டி என்னை அந்த இடத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அந்தப் பகுதிக்கு என்னை நீங்கள் அழைத்துச் சென்றால் தேடிக்காட்ட முடியும்.''

வீடு இருந்த குறிப்பு, அறையின் விபரம் யாவையும் கேட்டு அறிந்தனர். தம் குறிப்புகளோடு அவை சரியா யிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் இராணுவ முறையிலே விசாரணை தொடங்கிற்று.

'அந்தப் பயங்கரவாதிக்கு நீ ஏன் ஆபரேசன் செய்தாய்?''

''எந்த உயிரையும் காப்பாற்ற முயலுவதே என்தொழில். அதற்காகச் சத்தியப் பிரமாணமும் எடுத்திருக்கிறேன்''

''பயங்கரவாதத் தடுப்புச் சட்டப்படி இது பெரிய குற்றமல்லவா?''

''இருக்கட்டும், பரவாயில்லை''

''நீ ஏன் உடனே பொலிஸ் நிலையம் சென்று நடந்ததைக் கூறவில்லை''

''பொலிசார் என்னைத் தங்களின் இரகசிய அறிவிப்பாளராக நியமிக்கவில்லை.''

நடராசன் நளினமாகப் பதிலளித்தான்.

''நீயும் பயங்கரவாதிகளை ஆதரிப்பவன். இற் இஸ் கொன்பேர்ம்ட்...''

''வேண்டுமானால் நீ கூறலாம். என் மனசாட்சிக்குச் சரியானதையே நான் செய்தேன்.''

''இதற்குரிய தண்டனை என்ன தெரியுமா?''

''தெரியும்''

''டீ சாப்பிடுகிறாயா?''

''விசாரணையையும் என் பதிலையும் வைத்துக்கொண்டு கேட்கிறாயா? உன் கடமையாகக் கேட்கிறாயா?''

நடராசன் அழுத்திக் கேட்டான்.

''ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?''

''நான் ஒரு குற்றவாளியல்ல. 'சஸ்பெக்ட்'. ஆகவே இங்கு இருக்கிறேன். நீதிமன்றத்தில் குற்றப் பத்திரம் தந்து நிரூபித்துத் தண்டனை வழங்கப்படும் வரை நான் ஒரு சஸ்பெக்டே. அதற்கேற்றபடி என் உணவு, படுக்கை, வசதிகளைத் தராதபடி நீ உன் கடமையில் தவறியிருக்கிறாய். அதுதான் கேட்கிறேன். மூன்று நாட்களாக ஒரே கூட்டில் இதே உடையோடு இருக்கிறேன். என் உரிமைகள் ஒன்றும் தரப்படவில்லை.''

நடராசன் உணர்ச்சியுடன் கேட்டான். கப்டன் சிரித்தான், பின் எழுந்து நின்று சப்தமிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சட் அப். என் கடமை எனக்குத் தெரியும். நீ ஒரு டாக்டரான படியால் மரியாதை காட்டுகிறேன். அல்லது இதற்குள் உதை விழுந்திருக்கும் என்னோடு மனித உரிமைகள், சட்டமா பசுகிறாய்?..."

"......"

"இப்போது உனக்கு என்ன உரிமை வேண்டும்."

"என் லோயரைப் பார்க்க வேண்டும்"

கப்டன் நையாண்டியாகச் சிரித்தான்.

"விசாரணை முடியும் வரை அதற்கெல்லாம் உரிமை கிடையாது. எத்தனைபேர் கேட்டார்கள்; மறுத்துவிட்டோம்"

"இன்னும் உனக்கு என்ன தெரியவேணும்?"

"வசந்தனை உனக்குத் தெரியுமா?"

"தெரியும்"

"உன் வீட்டில் காப்பாற்றி வைத்திருந்தாயா?"

"ஆமாம்"

"அவன் சிறையிலிருந்து தப்பிய பயங்கரவாதி என்று உனக்குத் தெரியாதா?"

"அவனை வதை செய்து, ஊமையாக்கி பழைமையை மறக்கச் செய்து ஆண்மையையும் அழித்துவிட்டு அவனைப் பயங்கரவாதி என்று பட்டஞ்சூட்டினால்—இத்தகைய கொடுமைகளைச் செய்த மிருகங்களை எப்படி அழைப்பது?"

நடராசன் உணர்ச்சி வசப்பட்டுப் பேசினான் உமாவின் நினைவும் வசந்தன் என்றதும் அவன் மனத்திலும் உறுத்தியது.

"மிஸ்டர் மரியாதையாய்ப் பேசும். அதேபோல் நாம் உம்மையும் செய்துவிட முடியும். உம்மால் நிரூபிக்க முடியுமா? நிரூபிக்க முடியாத எதையும் இங்கே பேசவேண்டாம்"

கப்டன் உரக்கமாகச் சொன்னான்

"வசந்தனையல்ல, என்னைப் போல் நூறுபேரை ஊமையாக்கலாம் ஆயிரம் இளைஞர்களின் ஆண்மையை அழிக்கலாம். பதினாயிரம் இளைஞர்களின் பழமை நினைவுகளைப் பறிக்கலாம். அதனால் அவர்களின் இயக்கத்தை, உரிமை வேட்கையை உங்களால் ஒடுக்க முடியாது. ஏனெனில் ஆண்டுதோறும் பல பதினாயிரம் இளைஞர்கள் பதினாறு வயதை அடைகின்றனர்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராசன் வெறிபிடித்தவன் போல மீண்டும் சொன்னான்.

"சட் அப். உன் விழல் கதைகளைக் கேட்டுக்கொண்டிருக்க எனக்கு நேரமல்லை. நீ பயங்கரவாத இயக்கத்தைச் சேர்ந்தவன் என்பதில் சந்தேகமில்லை எனக்கு ஒரே பதில் தான் வேண்டும். நீ ஒரு பயங்கரவாதிக்கு ஆபரேசன் செய்தாய். வசந்தன என்ற பயங்கரவாதியை வீட்டில் வைத்துக் காப்பாற்றினாய் ஒப்புக்கொண்டு கையொப்பம் இடுகிறாயா?"

"ஆம்"

'உதைத்துக் கையொப்பம் வாங்கும நிலை ஏற்படாதது சந்தோஷமே. கையொப்பம் போட்டுவிட்டு உள்ளே போகலாம். யார் அந்த டாக்டர் இராசநாயகம்? உன் நண்பனா?"

கப்டனின் குரலில் சிறிது தணிவு காணப்பட்டது.

"ஆமாம் என் நண்பர். டாக்டர்களும். மனிதர்களும் என் நண்பர்கள்.,'

"உனக்கு பயங்கர வாதத் தடைச்சட்டப்படி பதினாலு வருட சிறைத் தண்டனை கிடைக்கும். டாக்டர்கள் உன்னை விடுதலை செய்யாவிட்டால் வேலை நிறுத்தம் செய்யப்போவதாக மிரட்டுகிறார்கள். மாணவர்கள் உன்னை விடுதலை செய்யும்படி நேற்று ஊர்வலம் நடத்தினார்கள்."

அச் செய்தியைக் கேட்டதும் நடராசனின் உடல் சிலிர்த்தது. மனம் நெகிழ்ந்து தணிந்தது: கப்டனைப் பார்த்துக் கேலியாகப் புன்னகை செய்தான்.

"ஆனால் சட்டத்தை என்னாலும் மாற்றமுடியாது. உன்னாலும் மாற்றமுடியாது...டாக்டரைக் கூட்டிச் சென்று மூன்றாவது அறைப் புலிகளோடு போடு."

கப்டன் சார்ஜனுக்கு ஆணையிட்டான்.

நடராசன் புறப்படும்போது கப்டனைப் பார்த்துக் கூறினான்:

"சட்டங்கள் மனிதனால் ஆக்கப்பட்டவை. ஒரு தேசிய இனம் மற்றொரு தேசிய இனத்தை அடக்கி ஆள ஆக்கும் சட்டம் எதுவும் நீடிக்கப் போவதில்லை. வதையும் சிறையும் மனித சுதந்திரத்தை ஒடுக்கியதாக வரலாறு இல்லை. இதை என்றாவது ஒருநாள் உணர்வீர்கள்..."

□□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Peradeniya
22 JUL 2011
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Peradeniya
22 JUL 2011
Library

647973

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Peradeniya
22 JUL 2011
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளமையின் கீதம்

தாயின் இறுதிச் சடங்கிற்காக டாக்டர் நடராசன் கிராமத்திற்கு வருகிறான். அவ்வேளையே இளமைக் காலத்தில் தன் காதலுக்கு எதிராகத் தாய், 25 ஆண்டுகளின் முன், செய்த குரூரச் செயல்களை அறிகிறான்.

தேசிய இனப்பிரச்சனை பற்றியும் அவன் அறிய முயல்கிறான். தன் இளமைக் காதலி தங்கம்மாவின் வீடே ஒருகளமாக இருப்பதைக் காண்கிறான். அப்பிரச்சனைக் குள்ளே மாட்டிக் கொள்கிறான். தன் பாதிப்பின் மூலம் புதிய சட்ட விதிகளின் சிறப்பியல்புகளையும் அறிந்து கொள்கிறான்!

உமா வசந்தனின் காதல் பிரச்சனைக்கும் நடராசன் உதவ முன் வருகிறான். பிரச்சனை அத்தனை எளிதானதல்ல என்பதை உணரும்போது அவனது நிலை மேலும் சிக்கலாகிறது.

pbd
482015131
ILAMAIYIN GEETHAM
Rs.90.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org